# 8. மௌரியப் பேரரசின் வீழ்ச்சி

**பிற்கால மௌரிய மன்னர்கள்:**

அசோகர் காலத்தில் பெரும் புகழ் பெற்றுத் திகழ்ந்த மௌரியப் பேரரசு இவரது இறப்புக்குப்பின் கொஞ்சம் கொஞ்சமாக வீழ்ச்சி அடையத் தொடங்கியது. இவருக்குப்பின் 50 ஆண்டுகள் தான் அப்பேரரசு நீடித்தது. இந்த 50 ஆண்டுகளில் மௌரிய பேரரசின் வரலாறு மிகவும் குழப்பமாக இருக்கிறது. அசோகருக்குப் பின் எவர் மன்னர் பொறுப்பேற்றுக் கொண்டார் என்பது பற்றி உறுதியாகக்கூற நமக்கு போதிய மூலங்கள் கிடைக்கவில்லை. இவருக்குப்பின் ஆட்சி செய்த மௌரிய மன்னர்கள் பெயர்ப் பட்டியலை விஷ்ணு புராணம், வாயு புராணங்களில் காணப்படும் மௌரிய மரபுப்பட்டியலை அடிப்படையாக வைத்துக் கொண்டு ரோமிலாதாபர் கீழ்க்கண்டவாறு அமைத்துத் தருகிறார்.

| மன்னரின் பெயர் | ஆட்சிக்காலம் |
|---|---|
| குணாளா | 8 |
| பந்துபாலிதா | 8 |
| இந்திரபாலிதா | 10 |
| தசோனா | 7 |
| தசரதா | 8 |
| சம்பிரதி | 9 |
| சாலிசுகா | 13 |
| தேவவர்மன் | 7 |
| சதத்னவன் | 8 |
| பிருகத்ரதா | 7 |

மேலே உள்ள பட்டியல்படி பார்த்தால் அசோகருக்குப் பின் வந்தவர்கள் 85 ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாக தெரிகிறது. ஆகவே புராணங்கள் தந்துள்ள பட்டியல்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை.

**மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணங்கள்:**

அசோகரின் இறப்புக்குப்பின் 50 ஆண்டுகள் மௌரியப் பேரரசு வீழ்ச்சி அடைந்து விட்டது. உலக வரலாற்றை நாம் உற்று நோக்குவோமேயானால் பேரரசுகள் மெல்ல மெல்லவே வீழ்ச்சி அடைந்ததைப் பார்க்கிறோம். ஆனால் இந்த மௌரியப் பேரரசோ குறுகிய காலத்தில் வீழ்ச்சி அடைந்துவிட்டது அதற்கான காரணங்களை கீழே காண்போம்.

**நலிவுற்ற பிளவு:**

அசோகருக்குப் பின்வந்த மௌரிய மன்னர்கள் மிகவும் நலிவுற்றவர்களாய் இருந்தனர். இவர்களிடம் நாட்டை திறம்பட ஆளும் திறமை இல்லை.

**பேரரசில் பிளவு:**

அசோகரின் மைந்தர்கள் ஒற்றுமையாக இல்லாமல் தமக்குள் போரிட்டுக் கொண்டு நாட்டைத்துண்டாடி விட்டார்கள். அவரது மைந்தர்களில் ஒருவரான ஜலௌகா காஷ்மீரத்தில் ஓர் சுயேச்சை அரசை நிறுவினார். அசோகரின் மற்றொரு மைந்தரான வீரசேனர் காந்தாரத்தைக் கைப்பற்றி அங்கு ஒரு தனி அரசை நிறுவினார். இங்ஙனம் நாடு இருபெரும் பிரிவுகளாய் பிரிந்தமையால் அது நலிவுற்றது. இத்தன்மையே மௌரியப் பேரரசு வீழ்ச்சி அடைய வழிவகுத்தது.

**மன்னர் பதவி பெறுவதில் சிக்கல்:**

ஓர் மன்னர் இறந்தபின் இவரது மூத்தமகன் தான் பட்டத்திற்கு வரவேண்டுமென்ற நியதி மௌரியர்களிடையே இல்லை. அசோகரின் இறப்பிற்குப்பின், இவரது மைந்தர்கள் மட்டுமல்லாது இவரது உறவினர்களும் மன்னர் பதவிக்குப் போட்டியிட்டனர். ஆகவே நாட்டில் குழப்பம் மிகுந்தது. அக்குழப்பமே பேரரசை வலிவு இழக்கச் செய்தது.

**தோன்றிய அரசு அழிவது இயற்கை:**

தோன்றிய அரசு அழிவது என்பது இயற்கைவிதி. இதற்கு எந்த அரசும் விதிவிலக்கல்ல என்பார் டாயின்பி. ஆகவே தான் இந்த மௌரியப் பேரரசும் சந்திர குப்த மௌரியர் காலத்தில் தோன்றி அசோகருக்குப் பின் அழிந்தது.

**மக்கள் கலகங்கள்:**

அசோகருக்குப் பின் மௌரியப் பேரரசில் இருந்த அரசு உயர் அலுவலர் தங்களது அதிகாரங்களை தவறான வழியில் பயன்படுத்தி மக்களுக்கு இன்னல்கள் பல விளைவித்தனர். இதனை எதிர்த்து மக்கள் ஆங்காங்கே கலகங்களைச் செய்தனர். அப்படிப்பட்ட மக்கள் அயல் நாட்டினர் மௌரியப் பேரரசைத் தாக்கியபோது அரசுடன் ஒத்துழைத்து அன்னியரை விரட்ட மறுத்து விட்டனர். உள்நாட்டு அதிகாரிகளின் கொடுமையை விடப் பிற நாட்டினரின் ஆட்சியே நல்லது என்ற முறையில் நடந்து கொண்டனர்.

**கிரேக்கப் படையெடுப்பு:**

கிரேக்கப்படை பாஞ்சாலம், மதுரா ஆகிய இடங்களைத் தாக்கிக் கைப்பற்றியது. பின்னர் கிரேக்கப் படை பாடலிபுத்திரத்தைத் தாக்கியது. இப்படி தாக்கிக் கொண்டிருந்த கிரேக்கப் படையை தோற்கடிக்க இயலாது திணறியது மௌரியப் படை. இதனைக் கண்ட மக்களுக்கு மௌரியப் படை வலிவற்றது என்பதும் மௌரிய மன்னர்கள் நலிவுற்றவர் என்பதும் தெரிய வந்தது. ஆகவே மக்களிடம் மௌரிய மன்னர்களுக்கு இருந்த செல்வாக்கும் மதிப்பும் குறைந்தது. மக்கள் ஆதரவு இழந்த மௌரிய மன்னர்கள் வீழ்ச்சி அடைந்ததில் வியப்பொன்றும் இல்லையே!

**அசோகரின் அகிம்சை கொள்கை:**

மௌரியர்களின் வீழ்ச்சிக்கு அசோகரின் அகிம்சைக் கொள்கையும் ஒரு காரணமாகும். அசோகர் போரில் நாட்டம் இல்லாது இருந்தார். ஆகவே படை வீரர்கள் போர் உணர்ச்சி அற்றவர்களாக மாறினர். ஆகவே தான் மௌரியப்படை வலுக்குன்றியது. வலுக்குன்றிய மௌரியப்படையால் கிரேக்கர்களின் தாக்குதலிலிருந்து நாட்டைக் காப்பாற்ற இயலாமல் போயிற்று.

**அசோகரின் சமயக்கொள்கை:**

அசோகரின் பௌத்த மதக் கொள்கை அந்தணர்களுக்கு பிடிக்கவில்லை. வேள்விகள் செய்வது நாட்டில் கணிசமாக குறைந்தது வேள்விகள் மூலம் காசு பெற்று வந்த அந்தணர்களின் வருமானம் குறைந்தது. ஆகவே அந்தணர்களின் செல்வாக்கும் கௌரவமும் பாதிக்கப்பட்டன. இவ்வாறு பாதிக்கப்பட்ட அந்தணர்கள் மௌரியப் பேரரசினை ஒழிக்கத் திட்டம் தீட்டினர். அத்திட்டத்தின் உச்சக்கட்டமே புஷ்ய மித்திரசுங்கர் என்ற அந்தணர் படைத்தலைவர் புரட்சியில் ஈடுபட்டு இறுதியான மௌரிய மன்னர் பிருகத்ராவைக் கொன்று விட்டு சுங்க மரபினை நிறுவினார்.

**ஆளுநர்களின் கொடுமை:**

மௌரிய பேரரசிற்கு உட்பட்ட மாநிலங்களை ஆண்டு வந்த ஆளுநர்கள் மக்களைக் கொடுமைப் படுத்தினர். அதைப் பொறுக்க முடியாத மக்கள் ஆங்காங்கே புரட்சியில் ஈடுபட்டனர். இதன் விளைவாக மௌரியர்களின் வலிமை நாளுக்குநாள் குறைந்தது.

**தலைநகரம் பேரரசின் மத்தியில் இல்லை:**

பேரரசின் தலைநகரான பாடலிபுத்திரம் அதன் கிழக்குக் கோடியில் ஒரு மூலையில் இருந்தது. அதனால் பேரரசின் எல்லைகளில் ஏற்பட்ட கலகங்களை மௌரிய மன்னர்களால்

ஒடுக்க இயலவில்லை. ஆகவே தான் பல மாநிலங்கள் சுயேச்சை நிலை அடைந்து சிதறிப்போயின.

***மத்திய அரசில் அதிகாரக் குவிப்பு:***

மௌரியர்கள் ஆட்சியில் அதிகாரங்கள் அனைத்தும் மத்திய அரசிடமே குவிந்து கிடந்தன. மாநில ஆளுநர்கள் மத்திய அரசிற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியிருந்தது. மத்திய அரசில் வலிமை பெற்ற மன்னர்கள் இருந்தவரை ஆட்சி நல்ல முறையில் நடைபெற்று வந்தது. மத்திய அரசில் நலிவுற்ற மன்னர்கள் இருந்தபோது அவர்களால் அனைத்து மாநிலங்களையும் கட்டுப்படுத்த இயலவில்லை. காலப்போக்கில் அம்மாநிலங்கள் மௌரியப் பேரரசில் இருந்து பிரிந்து போயின. ஆகவே மௌரியப் பேரரசு வீழ்ச்சியுற்றது.

***ஆற்றலற்ற அரசு அலுவலர்கள்:***

மன்னர் தனக்குப் பிடித்தவர்களை உயர் பதவிகளில் அமர்த்தினார். இப்பதவிகளுக்குரிய தகுதிகள் இவர்களிடம் உள்ளதா என்பதை உணரவில்லை. ஆகவே தகுதியற்றவர்கள், ஆற்றலற்றவர்கள் அரசின் அலுவலர்கள் ஆயினர். இவர்களால் நாட்டைத் திறம்பட நிருவகிக்க இயலவில்லை. ஆகவே தான் இப்பேரரசு வீழ்ச்சிப் பாதையை நோக்கி செல்லத் துவங்கியது.

**ஒற்றர்களின் அட்டூழியம்:**

மன்னர் ஒற்றர்களை நியமித்து நாட்டு நடப்பை அறிய முயன்றார். இவ்வொற்றர்கள் தங்களது அதிகாரங்களை தவறானவழிகளில் பயன்படுத்தினர். உண்மைக்கு புறம்பான செய்திகளை மன்னருக்குக்கு கொண்டு வந்தனர். மேலும் இவர்கள் தங்களது பகைவர்களை 'மன்னருக்கு எதிராகச் சதி செய்பவர்கள்' என்று மன்னரிடம் புறங்கூறி தண்டித்தனர். இப்படி ஒற்றர்களின் பேச்சைச் செவிமடுத்து பல நிரபராதிகளை மன்னர் தண்டித்து. மக்களின் வெறுப்பைத்தேடிக் கொண்டார். மக்களின் சார்பாளர்கள் அடங்கிய மன்றங்களைக் கலந்தாலோசிக்காமல் ஒற்றர்களைக் கொண்டு மக்களின் கருத்தை அறிய முயன்றது மௌரியர்களின் தவறுகளில் ஒன்றாகும். அத்தவறும் இவர்கள் வீழ்ச்சிக்கு ஓர் காரணமாகும்.

**எதேச்சதிகாரப் போக்கு:**

மௌரியர்களின் ஆட்சித் துறையில் நிருவாகமும் நீதித் துறையும் தனித்தனியாக இயக்கவில்லை. இப்படி அதிகாரங்கள் பிரிக்கப்பட்டு தனித்தனிக் குழுக்களுக்கு வழங்கப்-படாமல் இருந்ததால் எதேச்சதிகாரப் போக்கு ஏற்பட்டு அதுவே பேரரசை நலிவடையச் செய்தது.

# 9. மௌரியரின் ஆட்சி முறை - சமுதாய பொருளாதார பண்பாட்டு அம்சங்கள்

**வரலாற்று அடிப்படையில் இந்தியாவின் முதல் பேரரசு:**

இந்தியாவில் முதன் முதலில் ஒரு பேரரசை நிறுவியவர்கள் நந்தர்கள். ஆனால் இவர்களது பேரரசு பற்றி திட்டவட்டமாக நமக்கு ஏதும் தெரியவில்லை. ஆனால் மௌரியர்களைப் பற்றி நாம் அறிந்து கொள்ள நமக்கு நிறைய மூலங்கள் கிடைத்துள்ளன. இவர்களது பேரரசு பற்றி நமக்கு நிறைய தகவல்கள் கிடைக்கின்றன. எனவே வரலாற்றுப் பூர்வமாக நோக்குமிடத்து மௌரியப் பேரரசுதான் இந்தியாவிலேயே தோன்றிய முதல் பேரரசு எனக் கருத இடமுண்டு.

**மூலங்கள்:**

மௌரியப் பேரரசின் ஆட்சிமுறை பற்றி தெளிவாகத் தெரிந்து கொள்ள கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் பெரிதும் துணை புரிகிறது. மௌரியரது ஆட்சி முறையானது மையத்திலும் மாநிலங்களிலும் எவ்வாறு அமைந்திருந்தது என்பதையும், அவர்கள் காலத்தில் வருமானத்துறை, நீதித்துறை, உள்ளாட்சித்துறை எவ்வாறு அமைந்திருந்தன என்பது பற்றியும் அர்த்தசாஸ்திரம் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. மௌரியர்களின் நகராட்சி முறை பற்றி அறிந்து கொள்ள மெகஸ்தனில் எழுதிய 'இண்டிகா' என்ற நூல் பயன்படுகிறது. அசோகரின் கல்வெட்டுக்கள் மௌரிய ஆட்சி முறையின் சிறப்பியல்புகள் பற்றிக் கூறுகின்றன. முத்திரா ராட்சசம் என்ற இலக்கியம் மிகப் பிற்காலத்தே எழுதப்பட்டதெனினும் மௌரிய ஆட்சி முறையின் பொதுப்பண்புகளை அறிய அது துணை புரிகிறது. அர்ரியன், ஸ்ட்ரோபோ போன்ற கிரேக்க ஆசிரியர்களின் குறிப்புக்களிலிருந்தும் நம்மால் மௌரிய ஆட்சி முறை பற்றி அறிய முடிகிறது.

**மன்னன்:**

மத்திய அரசின் உறுப்புகள் இரண்டு ஆகும். அவையாவன: 1. மன்னன் 2. அமைச்சர்களும், ஆட்சித்துறை அலுவலர்களும். சமுதாயத்திற்கு தீங்கு விளைவிப்பவர்களை தண்டித்து, சட்டத்திற்கு கட்டுப்பட்டு நடக்கும் நல்லோர்களைப் பாதுகாப்பதே மன்னரின் தலையாய கடமையாகக் கருதப்பட்டது. அதனால் தான் இவர்கள் கடவுளர்களால் விரும்பப்பட்டவர்கள் என்ற பொருளில் 'தேவனாம் பிரியர்கள்' என அழைக்கப்பட்டனர். புரோகிதர்களின் ஆதரவை மன்னர்கள் பெரிதும் விரும்பினர். நாய் ஒன்று எசமானனைப் கீழ்ப்படிவது போலவும் ஒரு வேலைக்காரன் ஒரு எஜமானனுக்கு கீழ்ப்படிவது போலவும் ஒரு மன்னன் புரோகிதருக்கு கீழ்ப்படிதல் வேண்டும் என கௌடில்யர் கூறுகிறார். மேலும் இவர் ஒரு தந்தைக்கும், பிள்ளைகளுக்கும் இடையே உறவு முறை எப்படி இருக்கிறதோ அதுபோல உறவுமுறை மன்னருக்கும், மக்களுக்கும் இடையே இருத்தல் வேண்டும் என்கிறார்.

வேட்டையாடுதல் மன்னரின் முக்கியபொழுது போக்கு ஆகும். இவர் வேட்டையாடும் போது இவரை பாதுகாக்க வாளேந்திய பெண்கள் இவருடன் செல்வர் என மெகஸ்தனிஸ் கூறுகிறார். காளைச்சண்டையை கண்டு களித்தல் மன்னரின் மற்றுமொரு பொழுது போக்காகும்.

**மன்னரின் தகுதிகள்:**

உடலாலும் மனத்தாலும் கட்டுப்பாடு உடையவராக மன்னர் இருத்தல் வேண்டும். அவ்வண்ணம் ஆவதற்கு மன்னர் பதவி வகிக்க இருப்பவருக்கு இளம்வயதிலிருந்தே கல்வி போதிக்கப்பட்டது. மூன்று வயதிலிருந்து பதினொரு வயது வரை அடிப்படைக்கல்வி போதிக்கப்பட்டது. பதினொரு வயதிலிருந்து பதினாறு வயது வரை இவருக்கு உயர்கல்வி அளிக்கப்பட்டது. உயர்கல்வியில் தத்துவம், பொருளியல், அரசியல் ஆகியவை போதிக்கப்பட்டன. மேலும் இதிகாசங்கள், காவியங்கள், அறநூல்கள் ஆகியவையும் பயிற்றுவிக்கப்பட்டன மன்னர் வயதிலும், அனுபவத்திலும் மூத்தவர்களோடு விவாதித்து அறிவாற்றலை வளர்த்துக் கொண்டார்.

**மன்னரின் கடமைகள்:**

1) மக்கள் தங்களது கடமைகளை அடுத்தவர்களுக்கு இடையூறின்றி செய்ய ஒரு நல்ல சூழ்நிலையை மன்னர் உருவாக்கிக் கொடுத்தார்.
2) குடிமக்களின் உயிரையும், உடைமையையும் பாதுகாத்தார். தவறு புரிபவர்களையும், கொடியவர்களையும் தண்டித்து நாட்டில் அமைதியை நிலைநாட்டினார்.
3) வேளாண்மை, வாணிகம் ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபட்டார்.
4) சிறந்த நீதிபதியாக இருந்து நீதி வழங்கினார். நீதி வழங்கும் போது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எவ்விதச்சகைகளும் வழங்காது நீதி முறை வழுவாது நீதி வழங்கினார்.
5) இயற்கை அபாயங்களான நெருப்பு, வெள்ளம், கொள்ளைநோய், பஞ்சம், விலங்குகளால் ஆபத்து ஆகியவற்றில் இருந்து மக்களுக்கு பாதுகாப்பு அளித்தார்.
6) அனாதைகளுக்கு ஆதரவு அளித்தல், கற்றவர்க்கு உதவி செய்தல், கலைகளின் வளர்ச்சிக்கு உதவுதல், மருத்துவ வசதிகள் செய்து கொடுத்தல் ஆகியவை மன்னனின், ஏனைய கடமைகள் ஆகும்.

***மன்னர் பெற்றிருந்த சலுகைகள்:***

மன்னருக்கென்று சில கடமைகள் இருந்தமை போலவே சில சலுகைகளும் இருந்தன. அச்சலுகைகள் அனைத்தும் அர்த்தசாத்திரத்தில் கூறப்பட்டுள்ளன. அவற்றில் சில பின்வருமாறு:

1) அனைத்து இடங்களிலும் மன்னருக்கு தனிமரியாதை கொடுக்கப்பட்டது.
2) பெரும் மதிப்பு புதையல்கள் மன்னரின் உடைமை; இருப்பினும் புதையலைக் கண்டறிந்தவர்க்கு ஆறில் ஒரு பங்கு கொடுக்கப்பட்டது.
3) வாரிசு இல்லாமல் போய் விட்ட சொத்துக்கள் அனைத்தும் மன்னரின் உடமை ஆயிற்று.

4) சாதாரண மனிதரை விட மன்னர் உயர்ந்தவர். ஆகவே சாட்சியம் கூற இவரை நீதிமன்றத்திற்கு அழைக்கக் கூடாது.

5) மன்னரை அவமதிப்பது அரசியல் துரோக குற்றமாகும். அதற்குக்கடுமையான தண்டனை கொடுக்கப்பட்டது.

6) உரிமையாளர் எவர் என்று தெரியாத நிலையில் உள்ள பொருட்கள் அனைத்தும் மன்னரின் உடைமை.

**அவை உறுப்பினர் ஆகத் தகுதிகள்:**

நாட்டின் குடிமகன், உயர்ந்த குடியைச்சார்ந்தவன், அர்த்த சாஸ்திரத்தை கற்றவன், நினைவாற்றல் மிக்கவன், குரலினிமை தர்ம சிந்தனையுடையவன், நன்கு விவாதிப்பவன், நேர்மையாளன், ஒத்துப்போகும் இயல்புடையவன், நம்பிக்கைக்கு பாத்திரமானவன், நல்ல உடல் நலமுடையவன், துணிவு மிக்கவன், அடக்கம் நிறைந்தவன் என்று கருதப்பட்டவனே அவை உறுப்பினனாகத் தகுதி உடையவன் என்ற நிலை மௌரியர் காலத்தில் இருந்தது.

அவையின் தலைவராக மன்னர் இருந்தார். அவையின் ஒருமித்த கருத்தே ஏற்றுக்கொள்ளப்பட்டது. உள்நாட்டுக் கொள்கையையும், அயல் நாட்டுக் கொள்கையையும் இந்த அவையே நிருணயித்தது.

**வரிகள்:**

மன்னருக்கு நிலவரி மூலம் பெரும் பொருள் கிடைத்தது. அப்பொருளே நாட்டின் நிருவாகத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. விளைச்சலின் நான்கில் ஒரு பகுதி நிலவரியாக வசூலிக்கப்பட்டதென பல அறிஞர்கள் கருதுகின்றனர். வாணிகத்தின் மூலம் மன்னருக்கு சுங்க வரி கிடைத்தது. மன்னரின் உடைமைகளான காடுகள், மேய்ச்சல் நிலங்கள் ஆகியவற்றிலிருந்தும் இவருக்கும் வருவாய் கிடைத்தது. இடையர், கைத்தொழில் கலைஞர்கள் ஆகியோரும் அரசுக்கு வரிசெலுத்தினர்.

இவ்வாறு கிடைத்த வருவாய் மக்களின் நலனை மேம்படுத்தப் பயன்படுத்தப்பட்டது. காவற்படை, இராணுவம் ஆகியவற்றை பராமரிக்கவும் இதனைப் பயன்படுத்தினர். மேலும் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கவும், சாலைகள் அமைக்கவும் சமயப்பணிகளுக்கும், கல்விப் பணிகளுக்கும் இப்பணத்திலிருந்தே ஒரு பகுதியை மன்னர் செலவழித்தார்.

ஒவ்வொரு ஆண்டும் அரசு கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டது தவறான கணக்குகள் தயாரித்து, பொதுப் பணத்தை கையாடல் செய்த அரசு அலுவலர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்பட்டது. அரசு அலுவலர்கள் கையூட்டு பெறுவதையும், சலுகைகள் பெறுவதையும் தடைசெய்யும் பொருட்டு அடிக்கடி அவர்களுக்கு 'பணி இடமாற்றம்' கொடுக்கப்பட்டது.

**நீதிமன்றங்கள்:**

மௌரியர் காலத்தில் இரண்டு வகையான நீதி மன்றங்கள் இருந்தன. அவையாவன (1) சமூகவியல் (civil) வழக்குகளை விசாரிக்கும் நீதி மன்றம் (2) குற்றவியல் (criminal) வழங்குளை விசாரிக்கும் நீதி மன்றம்.

இரண்டு உயர் நீதிமன்றங்கள் தவிர ஏராளமான நீதி மன்றங்கள் மாநிலங்களிலும், மாவட்டங்களிலும் நிறுவப்பட்டிருந்தன. இவற்றைத் தவிர கிராமங்களிலும் வழக்கு மன்றங்கள் இருந்தன. கிராமத்தின் முதியோர் அவ்வழக்கு மன்றங்களில் நீதிபதிகளாகச் செயல் பட்டனர். அபராதம் விதித்தல், சிறையில் அடைத்தல், மரண தண்டனை விதித்தல் ஆகியவையே இக்காலத்துத் தண்டனைகள் ஆகும்.

**படை:**

சந்திரகுப்த மௌரியரின் படையில் 60 ஆயிரம் போர் வீரர்களும், 30 ஆயிரம் குதிரைகளும், 9 ஆயிரம் யானைகளும் இருந்ததாக புளூட்டார்க் குறிப்பிடுகிறார்.

படைத்துறை நிருவாகம் 30 பேர் அடங்கிய ஓர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இக்குழு ஆறு வாரியங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு வாரியத்திலும் 5 உறுப்பினர்கள்

இருந்தனர். இந்த ஐந்து வாரியங்களும் முறையே காலாட்படை, குதிரைப்படை, தேர்ப்படை, யானைப்படை, கடற்படையில் நிருவாகம் ஆகியவற்றை கண்காணித்து வந்ததன. படையில் மருத்துவர்கள், பொறியியல் வல்லுநர்கள், சமையற்காரர் ஆகியோர்கள் இருந்தனர். வில், வேல், வாள், ஈட்டி முதலிய போர்க் கருவிகளை மௌரியப் படையினர் பயன்படுத்தினர். 'பார்வீரர்களுக்கு மட்டுமின்றி குதிரை, யானை ஆகியவற்றிற்கும் சுவசங்கள் இருந்தன.

**ஆட்சிப்பிரிவு:**

நிருவாகம் செய்வதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு மௌரியப் பேரரசு மாநிலங்கள், மாவட்டங்கள், கிராமங்கள் ஆகியனவாகப் பிரிக்கப்பட்டிருந்தது. எத்தனை மாநிலங்கள் இருந்தன என்பது பற்றி சரியாகத் தெரியவில்லை. மாநிலத்தின் தலைவராக ஆளுநர் சார்ந்தவர்களே ஆளுநர்களாக இருந்தனர். ஆளுநருக்கு நிருவாகத்தில் உதவி செய்தவர்கள் இராஜீகர்கள், பிரதேசிகர்கள் ஆவர். இராஜீகர்கள் வருவாய்த்துறைக் கண்காணிப்பாளர்கள் ஆவர். பிரதேசிகர்கள் வருவாய்த்துறை ஆணையாளர்கள் ஆவர்.

**நகர ஆட்சி:**

மெகஸ்த்தனிஸ் மௌரிய நகர ஆட்சி பற்றிய பல செய்திகளை நமக்குத் தருகிறார் பாடலிபுத்திரம் நகர் 30 பேர் அடங்கிய குழு ஒன்றினால் ஆளப்பட்டு வந்தது. இக்குழு ஆறு வாரியங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு வாரியத்திலும் 5 உறுப்பினர்கள் இருந்தனர். ஐந்து வாரியங்களின் பணிகள் பின்வருமாறு.

1) முதலாவது வாரியம் தொழிற்சாலைகளைக் கவனித்துக் கொண்டது. தொழிலாளர்களின் கூலியை நிருணயம் செய்தது. உற்பத்தியில் தரமான பொருட்களைப் பயன்படுத்துகிறார்களா எனக் கண்காணித்தது. தொழிற் கலைஞர்களுக்கு தீங்கு விளைவிப்பவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கியது.

2) இரண்டாவது வாரியம் அயல் நாட்டவர்களுக்கு தங்குமிடம் அளிப்பது, அவர்கள் நோயுற்றபோது உதவுவது, இறந்து விட்டால் நல்லடக்கம் செய்வது, அவர்களின் சொத்துக்களை பாதுகாப்பது ஆகிய பணிகளை இவ்வாரியம் செய்தது.

3) மூன்றாவது வாரியம் பிறப்பு, இறப்பு ஆகியவற்றை பதிவு செய்தது.

4) நான்காவது வாரியம் வர்த்தகத்தையும் வாணிபத்தையும் (Trade & Commerce) கவனித்துக்கொண்டது பொருட்களின் எடைகள் சரியாக இருக்கின்றனவா, வணிகர்கள் உரிமம் (லைசன்ஸ்) பெற்றிருக்கிறார்களா என்பதைக் கண்காணித்தது.

5) ஐந்தாவது வாரியம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை மேற்பார்வை செய்தது. பழைய பொருட்களை புதிய பொருட்கள் எனப்பொய் சொல்லி விற்கும் வணிகர்களை இவ்வாரியம் கடுமையாகத் தண்டித்தது.

6) ஆறாவது வாரியம் விற்பனை வரியை வசூலித்தது. விற்பனை வரியை ஏமாற்றுவோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

**மக்கள் தொகைக் கணக்கெடுப்பு:**

ஆண்டுக்கு ஒருமுறை மக்கள்தொகை கணக்கெடுக்கப்பட்டது. இது மௌரிய ஆட்சியின் சிறப்புத் தன்மையாகும். இக்கணக்கெடுப்பு பொது மக்களின் பொருளாதார நிலையை அறிந்து கொள்ளப் பெரிதும் துணைபுரிந்தது.

**நகர அலுவலர்:**

நகரத்தின் தலைவர் நகரகா எனப்பட்டார். நகரகாவின் பணிகள் இக்கால நகராட்சி ஆணையாளரின் பணிகளையே ஒத்திருந்தன. அவரின் பணிகளில் சில பின் வருமாறு.

1) நகரத்தின் அமைதியைக் காத்தல், அயல்நாட்டினரைக் கண்காணித்தல்.

2) தீ விபத்திலிருந்து நகரைக்காக்க நடவடிக்கை எடுத்தல்.

3) நகர சுகாதாரத்தைப் பேணுதல்.

4) இரவு நேரங்களில் நகரைக்காக்க காவலர்களை நியமித்தல்.

5) நகரத்திற்குத் தேவையான கட்டடங்களைக் கட்டுதல்.

சுருங்கக்கூறின் மௌரிய நிருவாகம் மக்கள் நலன் கருதிய நிருவாகமாகத் திகழ்ந்தது. அதே நேரத்தில் இதில் குறைகளும் இருந்தன. அர்த்தசாத்திரத்தில் கூறுப்பட்டுள்ள அரசியல் சூழ்ச்சித்திறனும், ஒற்றர் முறையும் இதன் இருண்டபகுதிகளாகும் ஒற்றர் முறை தனிமனிதனின் சுஹத்தன்மையை வெகுவாக பாதித்தது. இருப்பினும் இதற்கு இணையான அரசியலமைப்பு பழைய காலத்தில் உலகின் வேறெந்த பகுதியிலும் நிலவியிருக்க வாய்ப்பு இல்லை என பேராசிரியர் தங்கமணி கருதுகிறார். இவர்கூற்று முற்றிலும் உண்மையே.

## மௌரியர் காலச் சமுதாயம், பொருளாதாரம், சமயம்,

### நால்வகை சாதிகளும் கடமைகளும்:

மௌரியர் காலத்தில் சமுதாயமானது நான்கு பெரும் சாதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு சாதிக்கும் உரிய கடமைகள் இன்னின்ன என்று நன்கு வரையறுக்கப்பட்டிருந்தன. அந்தந்தச் சாதியினர் அவரவரது கடமைகளை முறையாக ஆற்றுகிறார்களா என்பதை கண்காணிப்பதே அரசரின் முக்கிய கடமையாக இருந்தது.

அந்தகைய கடமைகள் பின் வருமாறு;

1) ஓதுதல் 2) ஓதுவித்தல் 3) வேட்டல் 4) வேட்பித்தல் 5) ஈதல் 6) பெறுதல்.

சத்திரியரது முக்கிய கடமை நாட்டையும் அதில் வாழும் அனைத்து உயிர்களையும் பகைவர்களிடமிருந்து காப்பாற்றுவது ஆகும். வைசியர்களின் கடமைகள் விவசாயம், ஆடு மாடுகளை வளர்த்தல், வியாபாரம் செய்தல் ஆகியவையாகும். சூத்திரரது கடமைகள் பின்வருமாறு; 1) உயர் சாதியினராகிய அந்தணர், சத்திரியர், வைசியர் ஆகிய மூவருக்கும் பணி புரிதல் 2) கைவினைத் தொழில்களை மேற்கொள்ளல் 3) ஆடல், பாடல் ஆகியவற்றில் ஈடுபட்டு அனைவரையும் மகிழ்வித்தல்.

### நால்வகை ஆசிரமங்களும், கடமைகளும்:

ஒவ்வொரு தனி மனிதனுடைய வாழ்க்கையும் நான்கு ஆசிரமங்களாகப் பிரிக்கப்பட்டது. அவை முறையே (1) பிரமச்சரியம் 2) கிருகஸ்தம் 3) வனப்பிரஸ்தம் 4) சன்னியாசம்.

பிரமச்சரிய ஆசிரமத்தின் போது ஒருவன் மாணாக்கனாய் இருத்தல் வேண்டும். அப்போது அவன் வேதங்களை ஓத வேண்டும். பிச்சை எடுத்து வாழ வேண்டும். குருவின் சொல்லைத் தட்டாது நடக்க வேண்டும். அளவோடு உண்டு வளமான கல்வி பெற வேண்டும்.

கிருகஸ்த்தர்கள் தமது சாதிக்கு உரிய தொழிலில் ஈடுபட்டு பொருள் ஈட்ட வேண்டும். தனது சாதியில் அதே நேரத்தில் வேறு கோத்திரத்தில் ஒரு பெண்ணை மணந்து இல்லறம் நடத்துதல் வேண்டும்.

ஒருவனின் மக்கள் தாமே சம்பாதிக்கும் நிலைமையை அடைந்த பின்னர் ஒருவன் வீட்டைத் துறந்து, காட்டை அடைந்து மனைவியுடன் வனப்பிரஸ்த ஆசிரமத்தை மேற்கொள்ள வேண்டும். அப்போது அவன் மனைவியுடன் உடலுறவு கொள்ளாமல் பிரமச்சரிய விரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். வெறுந்தரையில் படுத்த உறங்க வேண்டும். மான் தோலை, உடையாக அணிந்து கொள்ள வேண்டும். தெய்வங்களையும் மூதாதையரை வணங்க வேண்டும். காட்டில் இயற்கையாகக் கிடைப்பனவற்றையே உண்ணுதல் வேண்டும்.

ஒருவன் சன்னியாச ஆசிரமத்தில் தன் மனைவியையும் துறந்து பிச்சை எடுத்து வாழ்தல் வேண்டும். எவ்வித உடைமையையும் வைத்துக் கொள்ளக் கூடாது. ஐம்புலன்களை அடக்கி உடலையும் மனதையும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

மௌரிய சமுதாயத்தில் அந்தணர் முதலிடம் வகித்தனர். அந்தணர்களுக்கென சில சலுகைகள் கொடுக்கப்பட்டிருந்தன. இவர்கள் எவ்வித வரியும் செலுத்த வேண்டியதில்லை. இவர்களது சொத்துக்களை எவரும் பறிமுதல் செய்யக்கூடாது. இவர்கள் எவ்வித குற்றம் செய்த போதிலும் மரண தண்டனை, நாடு கடத்தல் போன்ற கடுந்தண்டனைகள் வழங்கக் கூடாது.

## மௌரிய சமுதாயம் பற்றி மெகஸ்தனிஸ் கருத்துக்கள்:

மௌரிய சமுதாயத்தில் 7 வகுப்பினர் இருந்ததாக மெகஸ்தனிஸ் கூறுகிறார். அவர்கள் முறையே (1) தத்துவ ஞானிகள் (2) உழவர்கள் (3) போர் வீரர்கள் (4) இடையர்கள் (5) கை வினைஞர்கள் (6) நிருவாக அலுவலர் (7) ஆலோகர்கள் ஒரு சாதியைச் சார்ந்தவர் மற்றொரு சாதியில் திருமணம் செய்து கொள்வது தடை செய்யப்பட்டிருந்ததது என்றும் தன் சாதித் தொழிலை விட்டு வேறு தொழில் செய்யவும் தடை இருந்தது என்றும் மெகஸ்தனிஸ் குறிப்பிடுகிறார். மேலும் அவர் கூறுவதாவது இந்தியர்கள் எளிமையான உடையை உடுத்தினர்; தங்கத்தால் ஆன ஆபரணங்களை அணிந்தனர்; மென்மையான தோலினால் செய்யப்பட்ட மதியடிகளை அணிந்தனர்; பல மனைவியரை அவர்கள் மணந்து கொண்டனர்; மரணமுற்றவர்களை ஆடம்பரம் இன்றி புதைத்தனர் அல்லது எரித்தனர்.

## *கணிகையர்:*

மௌரியர்களின் அரண்மனைகளில் ஏராளமான கணிகையர் இருந்தனர். அவர்கள் கல்வி, ஆடல், பாடல், ஓவியம் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றிருந்தனர். அவர்களை பராமரிக்கும் பணியை அரசே எடுத்துக் கொண்டது. ஆனால் அவர்கள் ஈட்டிய பொருளின் மீது அரசு வரிவிதித்தது. ஒரு சில கணிகையர் உளவு பார்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்டனர். கணிகையர் நலம் கண்காணிக்க கணிக அத்தியட்சர் என்னும் தனிப்பட்ட அலுவலர் நியமிக்கப்பட்டிருந்தார்.

## மௌரியர் காலப் பொருளாதார நிலை:

### விவசாயம்:

நிலம் அனைத்தும் மன்னருக்கு சொந்தமாயிருந்தது. உழவர்கள் இவரின் சார்பாளராக இருந்து நிலங்களை உழுதனர். விளைச்சலில் நான்கில் ஒரு பகுதியை மன்னருக்கு வரியாகக் கொடுத்தனர். போர்க் காலத்தில் விவசாயிகள் துன்புறுத்தப் படவில்லை. நெல், எள், மிளகு, பருப்பு, வகைகள், கோதுமை, பருத்தி, கடுகு முதலிய தானிய வகைகளும் பூசணி, சுரை, வாழை போன்ற காய்கறிகளும் பயரிடப்பட்டன.

### வீட்டு விலங்குகள்:

பசு, எருமை, ஆடு, கழுதை, குதிரை, யானை, ஒட்டகம், பன்றி முதலியன வீட்டு விலங்குகளாக இருந்தன. மாடுகளை பராமரித்தவர் கோபாலகர் என்றும், எருமைகளை பராமரித்தவர் பிண்டாரகர் என்றும், பால்கறப்பவர்கள் தோகர்கள் என்றும், தயிர் கடைபவர்கள் மந்தகர்கள் என்றும் வழங்கப்பட்டனர். அசோகர் காலத்தில் மிருகங்கள் கருணையோடு நடத்தப்பட்டன. நோயுற்ற மிருகங்களுக்கு மருத்துவம் பார்க்கப்பட்டது.

### தொழில்கள்:

மௌரியர் காலத்தில் மிகவும் செழித்து வளர்ந்த தொழில் நெசவுத் தொழில் ஆகும். காசியில் நெய்யப்பட்ட ஆடைகள் மிகவும் உன்னதமானவை எனப் பௌத்த நூல்கள் கூறுகின்றன. கம்பளி ஆடைகள் காந்தாரம், பஞ்சாப், நேபாளம் முதலிய இடங்களிலிருந்து உலகின் பல பாகங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. தச்சுத் தொழிலும் பிரசித்தி பெற்றிருந்தது. பல அரண்மனைகள் கட்டப்பட்டன. தங்கம், வெள்ளி, வைரம், பவளம், வைடூரியம் போன்றவற்றைக் கொண்டு ஆபரணங்கள் செய்து அணிந்தனர். நகைத் தொழிலும் சிறப்புற்று இருந்தது எனலாம்.

சில தொழில்களை அரசே நடத்தியது அவையாவன: சுரங்கத் தொழில், உப்புக் காய்ச்சுதல், முத்துக்குளித்தல், மதுபானம் தயாரித்தல், போர்க்கருவிகள் செய்தல், கப்பல் கட்டுதல், நாணயங்கள் அச்சிடுதல்.

அர்த்த சாஸ்த்திரத்தில் சுவர்ணம், கர்ஷபணம் முதலிய நாணயங்கள் பேசப்படுகின்றன. இக்காலத்தில் நாணயங்கள் வெள்ளியாலும், செம்பாலும் செய்யப்பட்டன. அசோகர் வெளியிட்ட நாணயங்களில் வேலியிடப்பட்ட புனித மரம் ஒன்று காணப்படுகிறது.

**மௌரியர் காலச் சமய நிலை:**

அந்தணர்கள் பெரிய வேள்விகளைச் செய்தனர். இவர்களை மக்கள் தூய இனத்தவர் என்றும் தெய்வீக ஒளி பொருந்தியவர்கள் என்றும் நாவன்மை மிக்கவர்கள் என்றும் கருதினர். இக்கால அந்தணர் பிச்சை எடுத்தே உண்டனர். தீங்கு செய்யாமை என்னும் விரதத்தைப் பூண்டிருந்தனர். இவர்கள் 48 ஆண்டுகள் பிரமச்சரிய விரதம் காத்த பின்னர் திருமணம் செய்து கொண்டனர். வாய்மை, தவம், பிரமச்சரியம், கல்வி, ஈகை ஆகிய ஐந்து தருமங்களை அந்தணர் கடைப்பிடித்தனர்.

**பௌத்த மதம்:**

மௌரியர் காலத்தில் பௌத்த மதம் தழைத்தோங்கியது. பௌத்த மதத்தின் மூன்றாவது சபை பாடலிபுத்திரத்தில் கூடியது. இதில் 1000 துறவிகள் பங்கெடுத்துக் கொண்டனர். திசா என்பவர் இதற்கு தலைமை தாங்கினார். அசோகர் காலத்தில் மக்கள் புத்தரோடு சம்பந்தப்பட்ட போதி மரம், லும்பினிவனம், புத்தகயா முதலிய இடங்களுக்குச் சென்று வழிபாடு நடத்தினர். புத்தரின் அடையாளமாக அவரது தருமச்சக்கரம், மிதியடிகள் முதலியவற்றை அவர்கள் வணங்கினர்.

**மௌரியர் காலப் பண்பாடு:**

**மொழி:**

மௌரியர் காலத்தில் வழங்கப்பட்ட மொழிகளில் முக்கியமானவை சமஸ்கிருதம், பாலி, பிராகிருதம் ஆகியவையாகும். பிராகிருத மொழியே அரசு மொழியாக விளங்கியது. இருப்பினும் மௌரிய மன்னர்கள் அந்தந்தப் பகுதிகளில் வழங்கிய மொழிகளிலேயே தமது ஆணைகளை வெளியிட்டனர்.

**எழுத்துக்கள்:**

சிந்து சமவெளி முத்திரைகளின் மீது காணப்படுகிற எழுத்துக்களுக்கு பிறது மௌரியர் காலத்து எழுத்துக்களே நமக்குக் கிடைத்துள்ளன. சிந்து சமவெளி எழுத்துகள் இன்றும் படித்தறியப்படவில்லை. மௌரியர் கால எழுத்துக்கள் அசோகரின் கல்வெட்டுக்களின் மூலமாக மட்டுமே நமக்குத் தெரிய வருகின்றன. அசோகரின் கால எழுத்துக்கள் பார்ப்பதற்கு பல நூற்றாண்டுகள் வளர்ச்சியுற்ற எழுத்துக்கள் போலத் தோற்றமளிக்கின்றன.

**இலக்கியம்:**

மௌரியர் காலத்தே புராணங்கள், காவியங்கள், தர்ம சூத்திரங்கள் முதலிய பல சமய இலக்கியங்கள் நன்கு வளர்ச்சியுற்றிருந்தன என்பதை அர்த்த சாஸ்த்திரத்தில் இருந்து அறிகிறோம். ஜாதகம் கணிக்கும் முறை பற்றிய நூல், சகுனப் பயன்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய நூல், கனவுப் பயன் சொல்லும் நூல்களும் இக்காலத்தில் எழுதப்பட்டன.

மௌரியர் காலத்தில் எழுந்த உலகியல் பற்றிய நூல்களில் தலை சிறந்தது அர்த்த சாஸ்திரமேயாகும். சூத்திர நடையில் உள்ள இந்த நூலுக்கு அதன் ஆசிரியரான கௌடில்யரே ஓர் உரையும் எழுதியுள்ளார். மெகஸ்தனிஸ் கிரேக்க மொழியில் எழுதிய இண்டிகா இக்காலத்திலேயே எழுதப்பட்டது. மகாபாரத்தின் சில பகுதிகள் இக்காலத்தில் எழுதப்பட்டது. மகாபத்ரபாகு கல்ப சூத்திரம் என்ற நூலை இக்காலத்தில் எழுதினார் என்பர்.

**கல்வி முறை:**

குருகுல முறைப்படி 12 ஆண்டுகள் மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கப்பட்டது. ஆசிரியர்க்கு தொண்டு செய்வதும் அவர் சொற்படி கேட்பதும் மாணவர்களின் தலையாய கடமைகளாகக் கருதப்பட்டன; அரிச்சுவடி, கணிதம் ஆகிய இரண்டு பாடங்களும் சிறுவர்களுக்கும் போதிக்கப்பட்டது. இளைஞர்களுக்கு வேதங்கள், தத்துவம், பொருளாதாரம், அரசியல் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன. தட்ச சீலத்தில் ஒரு பல்கலைக்கழகம் மிகச் சிறப்புப் பெற்று விளங்கியது.

**கட்டிடக் கலை:**

மௌரியர் காலத்தில் கட்டிடக் கலையில் மரத்துக்குப் பதிலாக கல் பயன்படுத்தப்பட்டது. காஷ்மீரத்தில் மட்டும் 500 பௌத்தமடங்களை அசோகர் கட்டியதாக இராஜதரங்கிணி என்னும் நூல் கூறுகிறது. இதே கருத்தை சீனப்பயணி யுவான் சுவாங்கும் கூறுகிறார். அசோகர் 84,000 தூபிகளைக் கட்டியதாக திவ்யவதனம் என்னும் பௌத்த நூல் கூறுகிறது. இக்கருத்தை குப்தர்கள் காலத்தில் இந்தியாவிற்கு வந்த பாகியானும் குறிப்பிடுகிறார். பாடலிபுத்திரத்திலும், நாளந்தாவிலும் அசோகர் பௌத்த மடங்களைக் கட்டியதாகத் தெரிய வருகிறது.

**அசோகரது தூண்கள்:**

அசோகர் ஏறக்குறைய 30 கற்றூண்களை நிறுவியதாக வின்சென்ட் ஸ்மித் கூறுகிறார். அவற்றுள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டவை 10 தூண்களே. அந்த 10 தூண்களில் 7 தூண்களில் மட்டுமே ஆணைகள் செதுக்கப்பட்டுள்ளன. அசோகரின் தூண்கள் ஒவ்வொன்றும் ஒரே கல்லால் ஆனவை. அவை 40 அடியிலிருந்து 50 அடிவரை உயரமானவை 35 அங்குலம் முதல் 50 அங்குலம் சுற்றளவு உடையவை. அடிகள் பருத்தும் சிறுத்தும் காணப்படுகின்றன. இத்தூண்களின் தலைப்பு (Capital) பிரசித்திபெற்றவை.

**அசோகரது சாரநாத் தூண்:**

புத்தர் தமது முதற் சொற்பொழிவை நிகழ்த்திய இடம் என்பதைக் குறிப்பதற்காக அசோகர் சாரநாத்தில் கற்றூண் ஒன்றை நட்டார். இந்த அழகான வழுவழுப்பான தூணின் உச்சியில் கவிழ்ந்த தாமரை போன்ற பீடத்தின் மேல்மட்டப் பகுதியின் சுற்றுப் புறத்தில் நான்கு திக்குகளையும் நோக்கியவாறு நான்கு தருமச் சக்கரங்கள் உள்ளன. அச்சக்கரங்களுக்கு இடையில் யானை, குதிரை, எருது, சிங்கம் ஆகிய நான்கின் உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இப்பீடத்தின் உச்சியில் நான்கு சிங்கங்கள், நான்கு திக்குகளையும் நோக்கியவாறு நிற்கின்றன. சாரநாத் தூணின் உச்சியில் உள்ள சிங்க சிலைகளுக்கு ஒப்பான அழகுமிக்க விலங்கின் சிலையை உலகின் எந்த நாட்டின் பண்டைக் கலையிலும் காண முடியவில்லை என வின்சென்ட் ஸ்மித் கூறுகிறார்.

மௌரியர் காலத்து கலைச் சின்னங்களின் மீது பாரசீக, கிரேக்க தன்மைகள் காணப்படுகின்றன என்ற கருத்தை வரலாற்றாசிரியர் ஹேவல் (Havel) மறுக்கிறார். இக்கருத்து ஓரளவு ஏற்புடையதாக உள்ளது.

. . .

# 10. சுங்கர்கள்

**மூலங்கள்:**

அசோகரது மரணத்திற்குப் பின் குப்தர்கள் எழுச்சி வரையிலான வட இந்திய வரலாற்றை அறிய போதுமான மூலங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. சில நாணயங்களும், சில கல்வெட்டுக்களுமே இக்கால வரலாற்றை நாம் அறிய துணைபுரிகின்றன. மௌரியப் பேரரசு வீழ்ச்சியுற்ற உடனேயே பதவிக்கு வந்த சுங்கர்கள் பற்றிப் புராணங்களும், பதஞ்சலி முனிவர் எழுதிய மகாபாட்டியம், திவ்யவதனா ஆகிய நூல்களும், காளிதாசரின் மாளவிகாக்னிமித்திரமும், பாணரது ஹர்ஷசரிதமும் சில வரலாற்றுச் செய்திகளைத் தருகின்றன.

**மௌரியர் வீழ்ச்சிக்குப்பின்:**

மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் தக்காணத்தில் சாதவாகனர்கள் தமது அரசை நிறுவினர். காந்தாரத்திலும் சாகாலாவிலும் (Sakala) அன்னியர்கள் புகுந்து தத்தம் அரசுகளை ஏற்படுத்தினர். மேல் கங்கைச் சமவெளியில் பாடலிபுத்திரத்தை மையமாகக் கொண்டு மகத அரசு சுங்க வம்சத்தால் ஏற்படுத்தப்பட்டது. மகதத்தில் இருந்த சௌராஸ்ட்டிரம் வரையில் சுங்கப் பேரரசு பரந்திருந்தது. சுங்க மரபு பரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்த அந்தணர் மரபு என்று பாணினி எழுதுகிறார். புராணங்களும், ஹர்ஷசரிதமும், சுங்கர்களை அந்தணர்கள் என்றே குறிப்பிடுகின்றன.

**சுங்கர்கள்:**

இறுதி மௌரிய மன்னர் பிருகத்ரதா ஆவார். இவரது படைத்தலைவராக இருந்தவரே புஷ்யமித்தர சுங்கர். இவர் பிருகத்ரதாவைக் கொலை செய்துவிட்டு ஆட்சியை கைப்பற்றிக் கொண்டார் என புராணங்கள் கூறுகின்றன. படையின் அணி வகுப்பை மன்னர் பார்வையிட்டுக் கொண்டிருந்த பொழுது இந்தக் கொலை நிகழ்ந்தது என பாணர் தாம் எழுதிய ஹர்ஷசரிதத்தில் குறிப்பிடுகிறார். இப்படி கி.மு. 187 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட சுங்க மரபு கி.மு.75 வரை ஆட்சி செய்தது. இந்த சுங்க மரபில் மொத்தம் 10 மன்னர்கள் இருந்தனர். அவர்களில் முதலாம் மன்னரான புஷ்யமித்திர சுங்கர் 36 ஆண்டுகள் ஆட்சி செய்தார். ஒன்பதாம் மன்னரான தேவபூதி 10 ஆண்டுகள் ஆட்சி செய்தார். மற்ற ஏழு மன்னர்களும் குறுகிய காலமே ஆட்சி செய்தனர்.

**புஷ்யமித்திர சுங்கர்:**

இவர் கி.மு. 187 முதல் கி.மு. 15! வரை ஆட்சி செய்தார். இவர் ஓர் அந்தணர். இவர் பௌத்தர்களின் பகைவராக இருந்தார் என்றும் அவர்களுக்கு இவர் பல இன்னல்களை விளைவித்தார் என்றும் திவ்யவதனா என்ற நூலில் இருந்து அறிந்து கொள்கிறோம். இவர் பாடலிபுத்திரத்தில் அசோகர் கட்டிய பௌத்த மடாலயத்தையும் மற்றும் பல பௌத்த மடாலயங்களையும் அழித்தார். மேலும் இவர் பௌத்த துறவிகளைக் கொன்று அவர்களது தலைகளைக் கொய்து வந்து கொடுப்போருக்கு வெகுமதிகள் கொடுத்தார். திவ்யவதனாவில் கூறப்பட்டள்ள இக் கருத்துக்கள் தவறானவையா; சரியானவையா என்பது நமக்கு தெரியவில்லை.

**போர்கள்:**

**விதிர்ப்பநாட்டை எதிர்த்துப்போர்:**

புஷ்யமித்திரர் விதர்ப்ப நாட்டின் மீது போர் தொடுத்தார். இப்போரைப் பற்றிய செய்திகளை, காளிதாசரது மாளவிகாக்னிமித்திரம் என்ற நூலில் இருந்து நாம் அறிகிறோம். புஷ்யமித்திரர் தமது மகனான அக்னிமித்திரர் தலைமையில் படையை அனுப்பி விதர்ப்ப நாட்டைத் தாக்கினார். இத்தாக்குதலைத் தொடர்ந்து நடந்த போரில் விதர்ப்ப நாட்டுப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. இதன் பின் வர்தா நிதி புஷ்யமித்திரவின் அரசுக்கு எல்லையாக அமைந்தது. அப்போது விதர்ப்ப நாட்டை ஆண்டு வந்த மன்னர் சாதவாகன மரபினைச் சார்ந்த மன்னராக இருக்க வேண்டும் என பல வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

**காரவேலரும் & புஷ்யமித்திரரும்:**

காரவேலர் என்ற கலிங்க நாட்டு மன்னர் புஷ்யமித்திரரின் காலத்தில் இரண்டு முறை மகத நாட்டை தாக்கியதாக வரலாற்றுாசிரியர் வின்சென்ட் ஸ்மித் குறிப்பிடகிறார். முதலாவது படையெடப்பு கி.மு. 165லும் இரண்டாவது படையெடுப்பு கி.ம. 161லும் நடைபெற்றது எனலாம். இப்போரில் புஷ்யமித்திரர் காரவேலரிடம் தோற்றுப்போனார்.

**யவனர்களை எதிர்த்துப்போர்:**

யவனர்கள் (கிரேக்கர்கள) புஷ்யமித்திரரது மகத நாட்டின் மீது இரண்டு முறை படையெடுத்தனர். இவரது ஆட்சியின் துவகத்தில் ஒரு முறையும், முடிவில் மற்றொரு முறையுமாக இப்படையெடுப்புக்கள் நிகழ்ந்தன.

முதல் படையெடுப்பின் போது கிரேக்கப் படை காந்தாரம் வரையில் வந்தது. தாக்குதலுக்குப் பின் கிரேக்கப் படையினர் பல யானைகளைக் கைப்பற்றிக் கொண்டு தம் நாடு திரும்பிச் சென்றனர். இது கி.மு. 206-ல் நிகழ்ந்தது.

சில ஆண்டுகள் கழித்து இரண்டாவது முறையாக கிரேக்கர்கள் மகத நாட்டின் மீது படையெடுத்து வந்தனர். தற்போது அவர்கள் மத்யாமிகம் என்ற நகரைத் தாக்கினர். உடனே புஷ்யமித்திர சுங்கர் தாம் வயதானவராய் இருந்தமையால் தமது பேரனான வாசுமித்திரரின் தலைமையில் தமது படையை அனுப்பி கிரேக்கர்களை சிந்து நதியின் வலக்கரையில் தோற்கடித்தார். இந்த இரண்டாவது படையெடுப்பில் கிரேக்கப்படைகளுக்கு தலைமை தாங்கி வந்து வசுமித்திரரிடம் தோற்றுப் போன கிரேக்கப் படைத்தலைவர் மெனேண்டர் என வரலாற்று வல்லுநர் டாக்டர் வின்சென்ட் ஸ்மித் கருத்துத் தெரிவிக்கிறார்.

***அசுவமேதவேள்விகள்:***

புஷ்யமித்திரர் இரண்டு அசுவமேத யாகங்களைச் செய்ததாக பதஞ்சலி கூறுகிறார். விதர்ப்பத்தை வென்ற பின்னர் ஒரு வேள்வியும், கிரேக்கர்களை வென்ற பின்னர் மற்றொரு வேள்கியும் நடத்தப்பட்டிருக்கக் கூடும். இப்படி வேள்விகள் நடந்ததைப்பார்க்கும் போது அந்தணர் கை மீண்டும் ஓங்கியதை நாம் அறிந்து கொள்கிறோம்.

***சுங்க மரபின் வீழ்ச்சி:***

முப்பத்தாறு ஆண்டுகள் செய்த பின் புஷ்யமித்திர சுங்கர் இறந்தார். இவருக்குப் பின் இவரது மகன் அக்னிமித்திரர் மன்னரானார். அக்னிமித்திரர் எட்டு ஆண்டுகள் ஆட்சி செய்தார். இவரது ஆட்சியைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. இவரது பட்டயங்களோ, நாணயங்களோ கிடைக்கவில்லை. அக்னிமித்திரருக்குப் பின் இவரது மகன் வாசுமித்திரர் நாடகத்தில் ஆர்வம் மிக்கவர். இவர் ஒரு நாள் நாடகம் பார்த்துக் கொண்டிருக்கும் போது கொலை செய்யப்பட்டார் என பாணர் எழுதுகிறார். வாசுமித்திரது காலத்தில் பாஞ்சாலம் கௌசாம்பி, மதுரா ஆகிய பகுதிகள் சுங்கப்பேரரசிலிருந்து பிரிந்து தனி அரசுகளாகி விட்டன. சுங்க மரபின் இறுதி மன்னர் தேவபூதியாவார். தேவபூதி தம்முடைய மனைவி போல் வேடந்தரித்து வந்த அடிமைப் பெண் ஒருத்தியால் கொலை செய்யப்பட்டார். இது இவரது அமைச்சர் வாசுதேவரின் தூண்டுதலினாலேயே நிகழ்ந்தது என்று பாணர் கூறுகிறார். இந்த வாசுதேவர் கன்வ மரபினை கி.மு. 75ல் நிறுவினார்.

***சுங்க மரபினைப் பற்றிய மதிப்பீடு:***

சுங்க மரபு மன்னர்கள் பௌத்த சமயத்தின் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தி அந்தணர் வளர்ச்சியுற துணை புரிந்தனர். அவர்கள் கிரேக்கர்களின் தாக்குதல்களிலிருந்து வட இந்தியாவையும், மத்திய இந்தியாவையும் காத்தனர். பதினெட்டு புரணாங்களும் இன்றைய நிலையில் வகுக்கப் பெற்றது சுங்கர்கள் காலத்திலேயேயாகும். மகாபாரதம், இராமாயணம் முதலிய காவியங்கள் மக்களிடையே பரவிய காலமும் இதுவேயாகும். பதஞ்சலியின் மாபாட்டியம் சுங்கர்கள் காலத்தில் இயற்றப்பட்டதேயாகும். கட்டடிடக் கலையில் ஒரு மறுமலர்ச்சி இக்காலத்தில் ஏற்பட்டது. சுங்களர்களது காலத்தில் கட்டடிடங்களில் மரத்திற்குப் பதிலாக கற்களைப் பயன்படுத்தத் தொடங்கினர். அமராவதியில் உள்ள தூபி, அஜந்தாவில் உள்ள ஒன்பதாம் எண் கொண்ட சைத்தியம், புத்த கயாவில் உள்ள வேலிச்சுவர் ஆகியவை சுங்கர்களின் கலைச்சிறப்பிற்கு எடுத்துக்காட்டுகளாய் விளங்குகின்றன. குப்தர் காலம் வரையிலும் கலைப் பயிர் அழிந்திடாமல் காத்து நின்ற பெருமை சுங்கர்களுக்கு உண்டு.

# 11. கன்வர்கள்

சுங்கப் பேரரசு வீழ்ச்சி அடைந்ததும் கன்வர்கள் ஆட்சிக்கு வந்தனர். சுங்கர்களின் கடைசி மன்னர் தேவபூதி, வாசுதேவர் என்ற அமைச்சரின் சதியினால் கொலை செய்யப்பட்டதாக பாணர் எழுதிய ஹர்ஷசரிதத்தில் இருந்து அறிந்து கொள்கிறோம். ஆர்.ஜி. பண்டார்கர் என்னும் வரலாற்று ஆசிரியர் சுங்கர்களிடம் பணிபுரிந்தவர்கள் கன்வர்கள் எனக் குறிப்பிடுகிறார். டாக்டர் வின்சென்ட் ஸ்மித், இராய் சௌத்திரி ஆகியோர், பண்டார்கரின் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. கன்வ மரபு மன்னர்களைப் பற்றி தெளிவாகத் தெரிந்து கொள்ள போதிய மூலங்கள் இல்லை. வாசுதேவர் ஒன்பது ஆண்டுகளும் இவருடைய மகன் பூதிபுத்திரர் பதினான்கு ஆண்டுகளும், இவருடைய மகன் நாராயணன் பன்னிரெண்டு ஆண்டுகளும் ஆட்சி செய்தனர். பின்னர் நாராயணனின் மகனாகிய சூசர்மன் என்பவர் பத்து ஆண்டுகள் ஆட்சி செய்தார். இவரே கன்வ மரபின் இறுதி மன்னர் எனச் சில வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். சுங்கர்கள் ஆட்சி செய்த பகுதிகளை விட மிகக் குறைவான பகுதிகளையே கன்வர்கள் ஆண்டனர். புராணங்களில் கன்வர்களைத் தூக்கி எறிந்து விட்டு சாதவாகனர்கள் ஆட்சிக்கு வந்தனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கன்வர்களை வென்ற சாதவாகன மன்னர் யார் என்பது சரியாகத் தெரியவில்லை.

## காரவேலர்
## (கி.மு. 176 - கி.மு. 163)

அசோகரது இறப்புக்குப்பின் கலிங்கத்தில் மௌரிய ஆதிக்கம் ஒழிந்தது. அங்கு தனி அரசு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இத்தனி அரசு பற்றிய செய்திகள் அனைத்தும் ஒரே ஒரு கல்வெட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அக்கல்வெட்டு ஒரிசா மாநிலத்தில், பூரி மாவட்டத்தில் புவனேசுவரத்துக்கு அருகில் உள்ள உதயகிரி மலையில் உள்ள யானைக் குகையில் (ஹதிகும்பா) பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு கலிங்க மன்னர் காரவேலரைப் பற்றி மிகப் புகழ்ந்து பேசுகிறது. இப்புகழ்ச்சியை முற்றிலும் உண்மை என எடுத்துக் கொள்ள முடியாது. இக்கல்வெட்டில் மொத்தம் 17 வரிகள் உள்ளன.

காரவேலர் மகாமேகவாகனரது வழியில் தோன்றியவர் என இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. இந்த மகாமேகவாகனரே மௌரிய அரசாங்கத்தை உதறித் தள்ளி விட்டு கலிங்கத்தில் தனி அரசு ஏற்படுத்தியவர் எனலாம். மகாமேகவாகனருக்கும், காரவேலருக்கும் என்ன உறவு என்பது தெரியவில்லை. இவ்விருவருக்குமிடையே கலிங்க நாட்டை எத்தனை மன்னர்கள் ஆட்சி புரிந்தனர் என்பதும் தெரியவில்லை.

காரவேலரது வாழ்க்கை வரலாறு பற்றிய கீழ்க்காணும் செய்திகளை அறிய ஹதிகும்பா கல்வெட்டு பெரிதும் துணை புரிகிறது. அவர் தமது 15ஆம் வயது வரை சிறந்த கல்வி பெற்றார். வேட்டையாடுவதிலும், நிருவாகத்திலும் இவர் சிறந்த பயிற்சி பெற்றார். இவர் 16 வயதை அடைந்ததும் யுவராஜாவாக நியமிக்கபட்டார். இவர் 24 வயதை எட்டியதும் கலிங்க நாட்டின் மகாராஜாவாக முடிசூட்டிக் கொண்டார்.

மேலும் இந்த ஹதிகும்பா கல்வெட்டு இவரது ஆட்சியின் முதல் 13 ஆண்டுகளில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி வரிசைச் கிரமமாக நமக்குச் சொல்கிறது.

காரவேலரின் கலிங்க நாட்டின் இன்றைய பூரி, கட்டாக் மாவட்டங்களிலும், விசாகப்பட்டினம் மாவட்டத்தின் ஒரு பகுதியிலும் இருந்தது. இதன் தலைநகரமாக கலிங்க நகரம் விளங்கியது. காரவேலர் தமது முதலாவது ஆட்சியாண்டில் புயலினால் சேதமுற்றிருந்த கலிங்க நகரத்தின் வாயில்களையும், மதில்களையும் செப்பனிட்டார். இது கலிங்க மக்களுக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தது.

இரண்டாம் ஆண்டில் முதலாம் சதகர்கணி என்ற மன்னரை போரில் வென்றார்.

மூன்றாம் ஆட்சியாண்டில் மக்கள் இனிதாகப் பொழுதினைப் போக்க நாடகங்கள், நாட்டியங்கள் நடத்த ஏற்பாடு செய்தார்.

நான்காம் ஆண்டில் விதர்ப்பத்தை ஆண்டு வந்த போஜகர்களையும், மராத்திய மாநிலத்தை ஆண்ட இரதிகர்களையும் வென்றார்.

ஐந்தாம் ஆட்சியாண்டில் நந்த மன்னர் வெட்டிய ஏரியிலிருந்து கால்வாய் மூலம் தமது நலைநகருக்கு குடிநீரைக் கொணர்ந்தார்.

ஆறாம் ஆட்சியாண்டில் இராஜ சூயம் என்ற வேள்வியை நடத்தினார்.

ஏழாம் ஆட்சியாண்டில் நகர மன்றங்களுக்கும் கிராம மன்றங்களுக்கும் சில சலுகைகளைக் கொடுத்தார்.

எட்டாம் ஆட்சியாண்டில் இராஜ கிருகத்தைத் தாக்கினார். கிரேக்கப்படையையும் வென்றார்.

ஒன்பதாம் ஆட்சியாண்டில் தனது வெற்றிகளின் நினைவாக ஏழைகளுக்கு தானம் வழங்கினார். "மகாவிஜயம்" என்ற பெயரில் ஒரு மாளிகையைக் கட்டினார்.

பத்தாம் ஆட்சியாண்டில் வட இந்தியா மீது படையெடுத்தார்.

தமிழரசுகள் 113 ஆண்டுகள் அமைத்து வைத்திருந்த கூட்டணியைப் பற்றி கேள்விப்பட்டட காரவேலர் அக்கூட்டணி தனக்கு ஆபத்தை விளைவிக்கலாம் எனக் கருதி அதனை தனது பதினொறாம் ஆட்சியாண்டில் அழித்தார்.

பன்னிரெண்டாம் ஆட்சியாண்டில் பாண்டிய மன்னரிடம் இருந்து விலை உயர்ந்த முத்துக்களைப் பரிசாகப் பெற்றார்.

பதின்மூன்றாம் ஆட்சியாண்டில் ஜைன (சமண) மதத் துறவிகளுக்கு பல குகைகளைக் குடைந்து அவற்றை தானமாக அளித்தார். உடலுக்கும் ஆன்மாவிற்குமுள்ள வேறுபாட்டை உணர்ந்து கொண்டார்.

**மதிப்பீடு:** இந்த ஹதிகும்பா கல்வெட்டின் இறுதியில் இவர் அமைதியில் நாட்டம் கொண்டவர் என்றும், செல்வச் செழிப்பு மிக்க மன்னர் என்றும், துறவிகளை ஆதரிக்கும் மன்னர் என்றும், தர்மத்தின்படி ஆட்சி செய்யும் மன்னர் என்றும், அனைத்து மக்களிடமும் மதிப்பு மிக்க மன்னர் என்றும், மிகப் பெரிய போர் வெற்றிகள் பெற்ற மன்னர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்டுள்ள செய்திகள் அனைத்தையும் நாம் ஹதிகும்பா கல்வெட்டிலிருந்து அறிந்து கொள்கிறோம். இச்செய்திகள் உண்மையானவையா என்பதை ஒப்பிட்டுப் பார்க்கக் கூட நமக்கு வேறு மூலங்கள் கிடைக்கவில்லை.

கலிங்க மன்னர் காரவேலர் சமண சமயத்தைச் சேர்ந்தவர். இவர் சமணத் துறவிகளுக்கு பல குகைகளைக் குடைந்து கொடுத்தார் என ஹதிகும்பா கல்வெட்டில் சொல்லப்பட்டுள்ளது. மேலும் இவர் அனைத்துச் சமயங்களையும் ஆதரித்தார் எனத் தெரிகிறது. அவர் கலிங்காதிபதி, கலிங்கச் சக்கரவர்த்தி ஆகிய பட்டங்களைச் சூட்டிக் கொண்டார்.

**கிரேக்கர்கள் படையெடுப்பு:**

சுங்க மரபு வீழ்ச்சி அடைந்ததும் இந்தியாவின் மீது அன்னியர்கள் படையெடுத்து வந்து, சில பகுதிகளைக் கைப்பற்றி அங்கு தம்முடைய அரசுகளை நிறுவினர். அவர்களுள் பாக்டிரியர்களும், பார்த்தியர்களும் இந்தியக் கிரேக்கர்கள் (Indo Greeks) என்று அழைக்கப்படுகின்றனர். பாக்டிரியா என்பது ஆக்சஸ் (Oxus) ஆறு பாய்ந்த வளமை மிக்க மாநிலம். இப்பாக்டிரிய பகுதியில் வாழ்ந்தவர்கள் பாக்டிரியர்கள் என அழைக்கப்பட்டனர். பார்த்தியா என்பது (Parthia) காஸ்பியன் கடலுக்கு தென் கிழக்கிலிருந்த புல்வெளிப்பகுதி. இப்பார்த்தியா பகுதியில் வாழ்ந்த மக்கள் பார்த்தியர்கள் என அழைக்கப்பட்டனர். சுமார் 200 ஆண்டுகளுக்கு முப்பத்தொன்பது இந்தியக் கிரேக்க மன்னர்கள் இந்தியாவில் ஆட்சி செய்தனர் ஸ்ட்ராபோ, புளுடார்க், ஜஸ்டின் ஆகியோர் எழுதிய குறிப்புக்களும் பண்டைய இந்திய, சீன நூல்களும் இந்த இந்திய கிரேக்க மன்னர்களைப் பற்றி சில செய்திகளைத் தருகின்றன. இம் மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் நமக்குக் கிடைக்கின்றன. அந்நாணயங்களிலிருந்தும் சில வரலாற்றுக் கருத்துக்களை நாம் அறிந்து கொள்கிறோம். கிடைக்கக்கூடிய வரலாற்று மூலங்களை வைத்துக் கொண்டு இம்மன்னர்களின் முறையான வரலாற்றை எழுத இயலவில்லை இந்திய கிரேக்க மன்னர்களில் குறிப்பிடத்தக்கவர் மினாண்டர் (Menander). இவர் பற்றிய சில வரலாற்றுச் செய்திகளை இவண் காண்போம்.

பாக்டிரியாவின் மன்னர் இரண்டாம் டெமிட்ரியஸ் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தார். இவரது படைக்கு தலைமை தாங்கி வந்தவரே மினாண்டர். இந்த மினாண்டரோடு வந்த மற்றொரு படைத்தலைவர் அப்போலோடோடஸ் (Apollodotus) ஆவார். மினாண்டர் சகாலா, மதுரா, சாகேதா, பாடலிபுத்திரம் ஆகிய நகரங்களை கைப்பற்றினார். இத்தருணத்தில் யூக்ரடைடிஸ் பாக்டிரியாவில் கிளர்ச்சி செய்தார். இந்த யூக்ரடைடிஸ் யார் என்பது தெரியவில்லை. இவரிடமிருந்து பாக்டிரியாவைக் கைப்பற்றும் முகத்தான் இரண்டாம் டெமிட்ரியஸ் அவரை எதிர்த்து ஒரு கடும்போரைத் தொடங்கினார். ஆனால் அப்போரில் இரண்டாம் டெமிட்ரியஸ் தோற்றுப்போனார். இதனைக் கேள்வியுற்ற மினாண்டரும், அப்போலோடோட்டசும் இந்தியாவிலேயே தாங்கள் கைப்பற்றிய பகுதிகளைச் சிற்றரசுகளாக ஆக்கிக்கொண்டு ஆட்சி செய்ய ஆரம்பித்தனர்.

யூக்ரடைடிஸ் பாக்டிரியாவில் தனது ஆட்சியை நிலை நிறுத்திய பின்னர் மினாண்டரையும் அப்போலோடோட்டசையும் பணியவைக்க இந்தியா மீது படையெடுத்து வந்தார். கி.மு. 160 ல்

நடந்த இப்படையெடுப்பில் யூக்ரடைடிஸ் அப்போலோடோட்டசைத் தோற்கடித்தார். ஆனால் இவர் மினாண்டரிடம் தோற்றுப்போனார். பின்னர் இவர் மினாண்டரிடம் சமாதானம் செய்து கொண்டு தம் தாய் நாடாகிய பாக்டிரியாவுக்குத் திரும்பிச் சென்றார். இரண்டாம் டெமிட்ரியசின் (பாக்டிரியாவில் யூக்ரடைடிசிற்கு முன்பு மன்னராக இருந்தவர்) மகள் அகதோகிளியா (Agathokllia) என்பவரை மினாண்டர் திருமணம் செய்து கொண்டார். மினாண்டரின் அரசு காந்தாரத்திலிருந்து மதுராவரையிலுள்ள பகுதிகளைக் கொண்டிருந்தது. இவரது தலைநகரம் பஞ்சாபிலிருந்த சகாலா (Sakala) ஆகும். இவரால் ஆளப்பட்ட பகுதிகள் ஆப்கானிஸ்தானத்தின் கிழக்குப்பகுதி, வடமேற்கு எல்லைப் புறமாநிலம், பஞ்சாப், சிந்து, இராஜஸ்தானம், கத்தியவார், மேற்கு உத்திரப்பிரதேசம் ஆகியவை ஆகும். இப்பகுதிகளில் எல்லாம் இவரது நாணயங்கள் கிடைக்கின்றன. மினாண்டர் பௌத்தர்களால் பெங்காலி மொழியில் 'மிலிந்தர்' என அழைக்கப்பட்டார்.

அவருக்கும் பௌத்தசமயப் பெரியார் நாகசேனருக்கும் நடந்த தத்துவ உரையாடலை விளக்கிக்சொல்கிறது. மிலிந்த பானா' (Milindapanha) என்ற பாலிமொழி இலக்கியம் 'மிலிந்தபானர்; என்றால் மிலிந்தரின் வினாக்கள் என்று பொருள் இவ்விலக்கியம் மினாண்டர் போரில் திறமை பெற்றவர் என்றும், உடல்வலிமையும் அறிவுக் கூர்மையும் உடையவர் என்றும் கூறுகிறது. ஆப்கானிஸ்தானத்தில் இருந்த கலசி (Kalasi) என்ற கிராமத்தில் மினாண்டர் பிறந்தார் எனக் கருதப்படுகிறது. இவர் பௌத்தசமயத்தைப் பின்பற்றினார் என சில வரலாற்று ஆசிரியர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர் அவருடைய நாணயங்கள் சிலவற்றில் சக்கரம் பொறிக்கப்பட்டிருப்பதால் இவர் பௌத்தர் என்ற முடிவுக்கு வருகிறார்கள். ஆனால் வேறு சில வரலாற்று ஆசிரியர்களோ மினாண்டர் கிரேக்க தெய்வங்களையே வணங்கினார் என்றும் ஆகவேதான் அவர் தம் நாணயங்களில் அத்தினா என்ற கிரேக்கதெய்வத்தின் உருவத்தைப் பொறித்தார் என்கின்றனர். கிடைக்கக் கூடிய மூலங்களை வைத்துக் கொண்டு இவர் எந்த சமயத்தைப் பின்பற்றினார் என்று உறுதியாகச் சொல்ல இயலாது.

மினாண்டர் பாக்டிரிய அரசின் சில பகுதிகளைக் கைப்பற்றி ஆண்டார் என புளுடார்க் குறிப்பிடுகிறார். இவர் பாக்டிரியாவைக் கைப்பற்றி சென்றபோது வழியில் இறந்து போனார் என கன்னிங்காம் கூறுகிறார். இவர் ஆட்சியை தனது மகனிடம் ஒப்படைத்துவிட்டு ஓய்வு எடுத்துக் கொண்டார் என பௌத்த நூல்கள் கூறுகின்றன. அவர் கி.மு. 130-ல் இறந்திருக்கக் கூடும் என பெரும்பாலான வரலாற்று வல்லுநர்கள் கருதுகின்றனர். மினாண்டர் இறப்புக்குப் பின் இந்தியவில் கிரேக்கரது ஆட்சி சுமார் நூறு ஆண்டுகள் நீடித்தது. மினாண்டரின் மகன் முதலாம் ஸ்ட்ராட்டோ (Strato I) ஆவார். இவர் சிறுவனாக இருந்தமையால் இவருடைய தாயார் அகதோகிளியா ஆட்சி நடத்தினார். இத்தருணத்தில் பாக்டிரியா மன்னர் ஹீலியோ-கிளீஸ் (Heliokles) காந்தாரத்தையும் தட்ச சீலத்தையும் கைப்பற்றிக் கொண்டார். ஆகவே ஸ்ட்ராட்டோ ஜீலம் ஆற்றிலிருந்து மதுரா வரையிலான பகுதிகளை மட்டும் ஆட்சி செய்தார். பின்னர் சிந்து மாநிலம், கத்தியாவார் ஆகிய பகுதிகளும் சுயேச்சை நாடுகள் ஆயின.

### இந்தியாவில் கிரேக்க ஆட்சி முடிவு:

ஹிலியோகிளிசின் வழி வந்தவர்கள் ஆட்சி செய்த பகுதி மேற்கு கிரேக்க அரசு எனப்பட்டது. ஸ்ட்ராட்டோவின் வழி வந்தவர்கள் ஆட்சி செய்த பகுதி கிழக்கு கிரேக்க அரசு என அழைக்கப்பட்டது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் சாகர்கள் சிந்து மாநிலம், கத்தியவார் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டனர். பின்னர் கி.மு. முதலாம் நூற்றாண்டின் துவக்கத்தில் இவர்கள் பஞ்சாப் சமவெளி, தட்சசீலம், காந்தாரம் ஆகியவற்றைக் கைப்பற்றிக் கொண்டனர். அதே நேரத்தில் மதுரா தன்னை சுதந்திர நாடு என அறிவித்துக் கொண்டது. கி.மு. 30ல் கிழக்கு கிரேக்க அரசு முற்றிலும் அழிந்தது.

மேற்கு கிரேக்க அரசு பிளவுண்டு வலிமை இழந்தது. பார்த்தியர்கள் இவ்வரசின் மீது படையெடுத்து வந்து கி.மு.30ல் இதனை அழிவுக்கு உள்ளாக்கினர். இவ்வாறாக ஒரே காலத்தில் இந்தியாவில் இருந்த இரண்டு கிரேக்க அரசுகளும் அழிந்து போயின.

**கிரேக்க ஆட்சியின் விளைவுகள்:**

கிரேக்க ஆட்சியின் போது இந்தியாவில் பல நகரங்கள் தோன்றின. அவைகளில் சில இந்திய கிரேக்க மன்னர்களின் பெயராலேயே வழங்கப்பட்டன. இந்தியாவிற்கும் மேற்குப் பகுதி நாடுகளுக்குமிடையே வணிகத் தொடர்பு ஏற்பட இவர்களது ஆட்சி காரணமாக அமைந்தது. சிறப்பான முறையில் நாணயங்கள் அச்சிட்டு வெளியிடும் கலையை இந்தியர்கள் கிரேக்கர்களிடம் இருந்து கற்றுக் கொண்டனர். பிற்காலத்தில் புகழ் பெற்ற காந்தாரக் கலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இந்தக் கிரேக்க ஆட்சியிலேயே என்றால் மிகையாகாது.

**சாகர்களும், பகலவர்களும்:**

வடமேற்கு இந்தியாவில் கிரேக்கர்களின் ஆட்சி முடிவுற்ற பின் சாகர்கள், பகலவர்கள் ஆகியோர் தங்களது அரசுகளை அமைத்தனர். சாகர்கள் இந்தியாவில் இரண்டு அரசுகளை நிறுவினர். இவற்றுள் ஒரு அரசை நிறுவியவர் மாவெஸ் (Maves). மாவெஸின் அரசு பஞ்சாபில் புஷ்கலாவதியிலிருந்து தட்சசீலம் வரை பரவியிருந்தது. இவர் வெளியிட்ட நாணயங்களில் சிலவற்றில் சிவன், புத்தர் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

மற்றொரு சாக அரசை நிறுவியவர் வனோனஸ் (Vanones). இவரது அரசு காண்டகார் முதல் பலுசிஸ்தானம் வரையுள்ள பகுதிகளைக் கொண்டு திகழ்ந்தது.

**பார்த்தியர்கள்:**

பார்த்தியர்களுள் வரலாற்றுப் புகழ் மிக்க மன்னர் கான்டோபர்னஸ் (Gondepharnes) இவர் கி.பி.19 முதல் 45 வரை ஆட்சி செய்தார். இவரது காலத்தில் தான் செயின்ட் தாமஸ் என்ற கிருத்தவப் பாதிரியார் சமயத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்டுக் கொலையுண்டார். இந்த சக பார்த்தியர்களின் அரசுகளின் அரசுகளை குஷாணர்கள் அழித்தனர்.

# 12. குஷாணர்கள்

### குஷாணர்கள் தோற்றம்:

சிர்டாரியா (Syr Darya) ஆற்றின் கரைகளில் குடியேறியிருந்த சாகர்களை யுவேச்சிகள் கி.மு.165-ஆம் ஆண்டில் விரட்டியடித்து விட்டு அப்பகுதியைப் பிடித்துக் கொண்டனர் என *சீன* வரலாற்றிலிருந்து அறிந்து கொள்கிறோம். மற்றொரு நாடோடி இனமாகிய ஊசுன், யுவேச்சிகளை சிர்டாரியா ஆற்றங்கரைகளில் இருந்து ஆக்ஸஸ் ஆற்றங்கரைக்கு விரட்டியடித்தனர். ஆக்ஸஸ் ஆற்றங்கரையில் யுவேச்சிகள் ஐந்து சிற்றரசுகளை நிறுவி நாடோடி வாழ்க்கையை விட்டு விட்டு நிரந்தர வாழ்க்கையை மேற்கொண்டனர். அந்த ஐந்து அரசுகளில் ஒன்று தான் குயீ ஷாவ்ங் அரசு. இந்த அரசு பின்னர் குஷாண் அரசு எனப் பெயர் மருவி வழங்கலாயிற்று. இப்பிரிவைச் சார்ந்தவர்கள் குஷாணர்கள் எனப்பட்டனர்.

மௌரியர்களுக்குப் பின்னர் ஒரு வலிமைமிக்க அரசை நிறுவி அந்த அரசை மத்திய ஆசியாவரை பரவச் செய்வர்கள் குஷாணர்கள் ஆவர்.

### முதலாம் காட்பீசஸ்: (Kadphises I)

குஷாண மன்னர் முதலாம் காட்பீசஸ் பின்னர் மற்றைய நான்கு சிற்றரசுகளையும் வென்று தம் ஆட்சிக்குள் கொணர்ந்தார். இது கி.பி.48-ஆம் ஆண்டு நிகழ்ந்திருக்க வேண்டும் என வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். முதலாம் காட்பிசஸ் இந்துகுஷ் மலையைக் கடந்து பார்த்திய அரசுகளைத் தாக்கிக் கைப்பற்றினார் இதனால் சிந்து ஆற்றின் மேலைக்கரை வரை இவரது ஆதிக்கம் பரவிற்று. இவர் வெளியிட்ட செப்பு நாணயங்கள் நமக்குக் கிடைக்கின்றன. இந்நாணயங்கள் உரோமானியப் பேரரசர்களான அகஸ்டஸ், டைபீரியஸ் ஆகியவர்களின் நாணயங்களைப் போல் இருக்கின்றன. டைபீரியஸிக்குப் பின் ஆட்சி செய்த கிளாடியசின்(கி.பி.41-54) நாணயத்தைப்போல் முதலாம் காட்பீசஸின் நாணயங்கள் இருப்பதாக சில வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். முதலாம் காட்பீசஸ் மகாராஜா, மகாராஜாதிராஜா ஆகிய பட்டங்களைப் பெற்றிருந்தார். இவர் புத்த சமயத்தைப் பின்பற்றினார். இவர் தமது எண்பதாவது வயதில் கி.மு.64ல் இறந்தார்.

### இரண்டாம் காட்பீசஸ்: (Kadphises II)

முதலாம் காட்பீசஸ் இறப்புக்குப்பின், அவரது மகன் இரண்டாம் காட்பீசஸ் ஆட்சிக்கு வந்தார். இவர் கி.பி.64-ஆம் ஆண்டிலிருந்து கி.பி.78-ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தார். இந்தியப் பகுதிகளைப் பிடித்து இந்தியாவுக்குள் குஷாணப் பேரரசைப் பரவச் செய்தவர் இவரே ஆவார். காசிவரை இவரது நாணயங்கள் கிடைக்கின்றன. இவர் வெளியிட்டட தங்க நாணயங்களும், செப்பு நாணயங்களும் மதுராவில் கிடைக்கின்றன. ஆகவே தான் கிழக்கில் இவரது அரசு மதுரா வரையில் பரவி இருந்ததாகச் சொல்கின்றனர். இவரது காலத்து குஷாணப் பேரரசு *சீனப்* பேரரசிற்கும் உரோமானியப் பேரரசிற்கும் இடையில் அமைந்திருந்தது. குஷாணர்கள் *சீனாவுடனும்* உரோமுடனும் வணிகத் தொடர்பு கொண்டு இருந்தனர். பட்டு, விலையுயர்ந்த கறகள், மணிகள் நறுமணப் பொருட்கள் (Spices) ஆகியவை இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாயின. இவர் வெளியிட்ட நாணயங்களில் சிவன், காளை, சூலம் ஆகியவை பொறிக்கப்பட்டுள்ளன. ஆகவே இவர் சைவ சமயத்தைச் சாந்தவர் எனக் கொள்ளலாம். இவர் பெற்றிருந்த பட்டப் பெயர்கள் மகாராஜா, இராஜாதிராஜா, சர்வலோக ஈசுவரன், ஆகியவை ஆகும்.

### கனிஷ்கர் (Kanishkar) (கி.பி. 78-120)

குஷாண மன்னர்களிலே தலை சிறந்தவர் இரண்டாம் காட்பீசஸிற்குப்பின் ஆட்சிக்கு வந்த கனிஷ்கர் ஆவார். இவருக்கும் இரண்டாம் காட்பீசிற்கும் என்ன உறவு என்று சரியாகத்

தெரியவில்லை. இவர் போர் செய்வதில் ஆர்வமும் திறமையும் உடையவர். இவரது தலை நகரம் காந்தாரத்தில் இருந்த புருஷபுரம் (பெஷாவர்) ஆகும். காந்தாரம் முதல் வாரணாசி வரையிலான பரந்த பேரரசை இவர் ஆண்டார். சிந்து மாநிலத்தின் வட பகுதியும், மாளவமும் கூட இவரது ஆட்சிக்கு உட்பட்டிருந்தன காஷ்மீரமும் இவரது ஆட்சிக்குக் கீழ் இருந்ததாக கல்ஹணரது இராஜதரங்கிணி கூறுகிறது. இவர் கி.பி.87-ஆம் ஆண்டு "தேவ புத்திரர்" என்ற பட்டப் பெயரைச் சூட்டிச் கொண்டார்.

***சாகா சகாப்தம்:***

கன்னிங்காம், பிரங்கி, பீளீட் முதலியவர்கள் கி.மு. 58-ல் புதிய சாகா சகாப்தத்தை தோற்றுவித்தவர் கனிஷ்கர் என்று கருத்துத் தெரிவித்தனர். மார்ஷல் இக்கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் கனிஷ்கரின் காலம் கி.பி.125-ல் இருந்துதான் தொடங்குகிறது என்றார். அவரது கருத்தை டாக்டர் ஸ்மித் ஏற்றுக் கொண்டார். இந்த மார்ஷலின் கருத்தும் தற்போது பரவலாக ஒப்புக் கொள்ளப்படவில்லை. ஏனெனில் வட இந்தியாவில் கி.பி. 248ல் புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்தார் என்று சொன்ன கருத்தும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாய் இல்லை. அப்படியானால் சாகா சகாப்தத்தைத் தோற்றுவித்தவர் எவர்? எப்போது அச்சகாப்தம் தோற்றுவிக்கப்பட்டது? சாகா சகாப்தத்தை கி.பி.78-ல் தாம் ஆட்சிக்கு வந்த ஆண்டு தோற்றுவித்தவர் கனிஷ்கர் என்ற கருத்தை பெர்குசன், ஓல்டன்பர்க், இராப்சன், தாமஸ்ராய் சௌத்ரி, ஆர்.டி. பானர்ஜி ஆகியோர் தெரிவிக்கின்றனர். இவர்களின் கருத்து சரியானது என பல வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

***கனிஷ்கரது போர்கள்:***

கோட்டன் (Khotan), யார்கந்த் (Yarkhand) காஷ்கர் (Kashgar) ஆகிய பகுதிகள் சீனாவின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. அவற்றை சிற்றரசர்கள் ஆண்டு வந்தனர். அவர்களை வென்று தம் கீழ்க் கொணர்ந்து பின் அவர்களிடமிருந்து கப்பம் வசூலிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கனிஷ்கர் தம் படையுடன் பாமீர் மலையைக் கடந்து போரைத் துவக்கினார். இப்போரில் கனிஷ்கரை எதிர்த்துத் தோற்கடிக்க அனுப்பப்பட்ட சீனப் படைத் தளபதிதான் பான்சோ (Panchao). பான்சோ கனிஷ்கரை தோற்கடித்து அவரது பேரரசிலிருந்த சில மத்திய ஆசியப் பகுதிகளை கைப்பற்றினார். பான்சோவுக்குப்பின் வந்த சீனத்தளபதி பான்யாங்கை கனிஷ்கர் 70,000 குதிரைகளையும் வீரர்களையும் கொன்று இராணுவத்தை அனுப்பி சீனர்களை தோற்கடித்து காஷ்கர், கோட்டன் ஆகியவற்றைக் கைப்பற்றினார். போர்க் கைதிகள் பலரும் இந்தியாவிற்கு பிடித்து வரப்பட்டனர். அவர்கள் பௌத்த மடங்களில் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டனர். கனிஷ்கர் மகதத்தை வென்றார் என்பதற்கு நேரடி மூலங்கள் ஏதும் கிடைக்கவில்லை. சாகர்கள் பார்த்தியர்கள் ஆகியோர் கனிஷ்கரால் தோற்கடிக்கப்பட்டனர் எனக் கருத இடமுண்டு. பார்த்தியர்களை வென்ற வட இந்தியப்படையெடுப்பில் ஈடுபட்டு படு தோல்வியடைந்தார். பிறகு நோயுற்றார். அப்போது ஒரு மெத்தையால் அவரை மூடி ஒருவரை அவர்மீது அமரச் செய்து அவரை உயிர் துறக்க செய்தனர் மக்கள்.

***கனிஷ்கரும், பௌத்த சமயமும்:***

கனிஷ்கர் பௌத்த சமயத்திற்கு மாறினார் என்பதில் ஐயமில்லை. இவர் எப்போது ஏன் பௌத்த சமயத்தைச் சார்ந்தார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. இவர் பௌத்த சமயத்திற்கு ஆற்றிய தொண்டுகளே இவருக்கு வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுக் கொடுத்திருக்கிறது எனலாம். இந்திய மன்னர்களுள் பௌத்த சமயத்தை ஆதரித்த மன்னர்களில் அசோகருக்கு அடுத்த இடத்தை கனிஷ்கர் பெறுகிறார். ஆகவே கனிஷ்கர் 'இரண்டாம் அசோகர்' என அழைக்கப்படுகிறார். பெஷாவரில் கிடைக்கும் இவரது கல்வெட்டிலிருந்து இவர் பௌத்த சமயத்தை தனது ஆட்சியின் துவக்க காலத்திலேயே தழுவியிருந்தார் என அறிந்து கொள்கிறோம். பல கடவுள் வழிபாட்டை மேற்கொண்டிருந்த இவரை பௌத்த சமயத்திற்கு மாற்றியது எவர் என்பது தெரியவில்லை. அஷ்வகோஷரே (Asvaghosha) இவரைச் சமயம்

மாற்றியவர் என்ற கருத்து பரவலாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. கனிஷ்கர் பௌத்த சமயத்தைப் பின் பற்றினாலும் ஏனைய சமயங்களை வெறுக்கவில்லை. அவற்றையும் ஆதரித்துப் போற்றினார். இவர் தனது நாணயங்களில் இந்துக் கடவுள்கள், பண்டைய கிரேக்க உரோமானிய கடவுள்கள் ஆகியோரை பொறித்தார். இது அவரது சமயப் பொறையுடைமையைக் காட்டுகிறது. பௌத்த சமயத்தின் அடிப்படை கொள்கை அகிம்சை, அச்சமயத்தைப் பின்பற்றிய கனிஷ்கர் அமைதியில் நாட்டம் இன்றி போரில் ஆர்வம் மிக்கக் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

**கனிஷ்கரும் நான்காவது பௌத்த மாநாடும்:**

கனிஷ்கர் நான்காவது பௌத்த மாநாட்டை கூட்டினார் என யுவான்சுவாங் தமது பயணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். இம்மாநாட்டிற்கு வசுமித்திரர் தலைவராகவும், அசுவகோசர் துணைத் தலைவராகவும், இருந்தனர். இதில் சுமார் 500 பௌத்த பிக்குகள் கலந்து கொண்டனர். இது காஷ்மீரத்தில் கூடியதாக ஒரு சாராரும். ஜலந்தாராவில் கூடியதாக மற்றொரு சாராரும் குறிப்பிடுகின்றனர். இது கி.பி.100-ல் நடந்ததாக ஆர்.டி.பானர்ஜி குறிப்பிடுகிறார். பௌத்த மறை நூல்களான பீடகங்களுக்கு (Pitakas) விளக்க உரைகள் எழுதப்பட்டது இம்மாநாட்டில் தான், இவ்விளக்க உரைகள் செப்பு பட்டயங்களின் மீது எழுதப்பட்டு அவை ஒரு கல்லாலான பெட்டியில் வைத்துப் பூமியில் புதைக்கப்பட்டது. அப்பெட்டி புதைக்கப்பட்ட இடத்தை குறிக்கும் வகையில் அங்கு ஒரு தூண் எழுப்பப்பட்டது. திபெத்திய வரலாற்றாசிரியர் தாரநாத் இம்மாநாடு பற்றிக் குறிப்பிடுகிறார்.

**கனிஷ்கரின் சமயப்பணிகள்:**

இவர் பாழடைந்து கிடந்த பௌத்த விகாரங்களை செப்பனிட்டார் புதிய பல பௌத்த விகாரங்களைக் கட்டினார். அயல் நாடுகளுக்கு தூதுக் குழுக்கள் அனுப்பி அங்கும் பௌத்த சமயத்தைப் பரப்பினார் உருவமின்றி புத்தரை வழிபட்டு வந்தவர்கள் புத்தருக்கு உருவம் ஒன்று அளித்து வழிபடத் தொடங்கியது கனிஷ்கரது காலத்தில்தான். தமது தலைநகரான புருஷபுரத்தில் ஒரு பௌத்த ஆலயத்தை இவர் கட்டினார். பிற்காலத்தில் இந்தியா வந்த சீன யாத்திரிகர்கள் இதனை வியந்து பாராட்டி எழுதியுள்ளனர்.

**கனிஷ்கர் இரண்டாம் அசோகரா?**

1) அசோகரைப் போல இவரும் தூதுக்குழுக்களை மத்திய ஆசிய நாடுகளுக்கும், சீனாவிற்கும் அனுப்பி பௌத்த சமயம் பரவச் செய்தார்.

2) அசோகரைப்போல இவரும் பௌத்த சமயத்திற்கு மாற்றப்பட்டவர். பிறப்பாலே பௌத்த சமயத்தைச் சார்ந்தவர் அல்ல.

3) அசோகரைப் போல இவரும் பௌத்த மாநாடு ஒன்றைக் கூட்டினார். அசோகர் மூன்றாவது பௌத்த மாநாட்டையும் கனிஷ்கர் நான்காவது பௌத்த மாநாட்டையும் கூட்டினர்.

**கலையும் இலக்கியமும்:**

மகாயான பௌத்தப் பெரியாராகிய நாகர்ஜீனரை கனிஷ்கர் பெரிதும் ஆதரித்தார். அசுவகோசர் இவரால் ஆதரிக்கப்பட்ட இலக்கிய மேதையாவார். பண்டைய இந்திய மருத்துவப் பேரறிஞர் சரகர் (Charaka) கனிஷ்கரின் அரண்மனை மருத்துவராக இருந்து அவரது அன்பிற்குப் பாத்திரமானார். கிரேக்கக் கலையோடு கலந்து உருவான காந்தாரக் கலை கனிஷ்கரது காலத்திலேயே உருப்பெற்று உயர்வுற்றது. இவர் தமது பெயரில் கனிஷ்கபுரம் என்ற நகரத்தை உருவாக்கினார்.

கனிஷ்கர் கலையையும், கல்வியையும் ஆதரிக்க இவை இரண்டும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டது. மகாயானபௌத்த சமயத்தை போற்றி வளர்த்த பெருமை இவரையே சாரும். எனவே இவரை பௌத்தத்தின் கான்ச்டன்டைன் (Constantine) என்று அழைப்பது முற்றிலும் பொருந்தும்.

***குஷாணர்களின் ஆட்சியின் வீழ்ச்சி:***

கனிஷ்கரது இறப்புக்குப் பின் குஷாணர் அரசு வீழ்ச்சிப் பாதையை நோக்கி விரைவாக நடைபோட ஆரம்பித்தது. கனிஷ்கருக்குப் பின் ஆட்சி புரிந்த குஷாண மன்னர்கள் பற்றி ஆதார பூர்வமான செய்திகள் நமக்கு அதிகம் கிடைக்கவில்லை. பின் ஆட்சிப் பொறுப்பேற்ற வசிஷ்கரின் (Vashishka) கல்வெட்டுகளும் நாணயங்களும் மதுரா நகருக்கு அருகில் உள்ள இடங்களில் மட்டுமே கிடைத்தன. ஆகவே அவருடைய காலத்தில் குஷாண் அரசு நலிவுற்றிருந்தது என்பது நமக்குத் தெரிய வருகிறது. வசிஷ்கருக்குப்பின் ஹீவிஷ்கர் (*Huvishka*) ஆட்சிக்கு வந்ததும் குஷாண அரசு வலிமை பெறத் தொடங்கியது. ஆப்கானிஸ்தானத்திலிருந்து கங்கைவரை உள்ள பகுதிகள் இவரது ஆட்சிக்குட்பட்டிருந்தன. காந்தாராம், மதுரா, அமராவதி போன்ற இடங்கள் சிற்பத்துறையில் சிறப்புப் பெற்றது, இவரது காலத்திலேயே என்பது குறிப்பிடத்தக்கது. ஹீவிஷ்கருக்குப் பின் ஆட்சிக்கு வந்த முதலாம் வாசுதேவர் இன்றைய உத்திரப் பிரதேசத்தை மட்டுமே ஆண்டார். கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் குஷாணர்களின் ஆதிக்கம் அழிக்கப்பட்டது. இந்நூற்றாண்டில் யமுனைக்கரைப் பகுதியை நாகர்கள் குஷாணர்களிடமிருந்து கைப்பற்றிக் கொண்டனர். அதே நேரத்தில் அலகாபாத், அவுத், மகதம் ஆகிய பகுதிகளை குப்தர்கள் பிடித்துத் தங்களின் ஆதிக்கத்தை அங்கு நிலைநாட்டினர்.

மௌரியர் மரபிற்குப் பின் வட இந்தியாவில் ஒரு பேரரசை நிறுவிய சிறப்பு குஷாணர்களுக்கு உண்டு. இவர்களது பேரரசு மத்திய ஆசியாவில் இருந்து தொடங்கி கங்கைச் சமவெளி வரையில் விரிந்திருந்தது. இவர்களது காலத்தில் மகாயான பௌத்த சமயம் தோன்றியது. சைவ சமயம் குஷாணர்கள் காலத்தில் வளர்ச்சி அடையத் தொடங்கியது. சிவன் கார்த்திகேயன், கிருஷ்ணர் ஆகிய கடவுள்கள் மிகப்பிரபலமாயின. காந்தாரக் கலை என்ற ஒரு புதிய கலை அறிமுகப்படுத்தப்பட்டதும் இந்தியப் பண்பாடு மத்திய ஆசியாவிற்கும் கிழக்காசியாவிற்கும் பரவத் தொடங்கியதும் குஷாணர்கள் காலத்தில்தான்.

***மகாயான பௌத்த சமயம் ஏன் தோன்றியது:***

1) பௌத்த சமய சங்கங்களும், அதன் பிக்குகளும் சமயப் பணியை மறந்து ஆடம்பரமான வாழ்க்கை வாழ ஆரம்பித்தனர். ஆகவே பௌத்த சமயத்தில் சீர்திருத்தங்கள் கொணர்ந்து அதனைப் புனிதப்படுத்த மேற்கொண்ட முயற்சியின் விளைவாக மகாயான பௌத்த சமயம் என்ற பிரிவு ஏற்பட்டது.

2) பௌத்த சமயத்தை பின்பற்ற விரும்பிய அயல் நாட்டினர் அதன் கொள்கைகள் கடுமையாக இருப்பதாகவும் அவை எளிமைப்படுத்தப்பட்டு சாதாரண மனிதர்களும் பின்பற்ற ஏதுவாக ஆக்கப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தனர். அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க பௌத்த சமயத்தில் சில மாற்றங்கள் கொணரப்பட்டன. அம்மாற்றத்தின் விளைவாக மகாயான பௌத்த சமயம் என்ற புதிய பிரிவு ஏற்பட்டது.

3) பக்தி மார்க்கம் தோன்றி இந்து சமயம் தழைக்க துவங்கியது. அத்தருணத்தில் பௌத்த சமயத்தையும் செல்வாக்கு மிக்கதாக ஆக்க வேண்டி அதிலும் பக்தி மார்க்கத்தைக் கடைப்பிடிக்க துவங்கினர். புத்தருக்கு சிலைகள் வடித்து, மலர் அர்ச்சனை செய்து வழிபாடு செய்ய துவங்கினர். இதன் விளைவாக பௌத்த சமயத்தில் மகாயான பௌத்த சமயம் என்ற புதிய பிரிவு ஏற்பட்டது எனலாம்.

***மகாயான பௌத்த சமயம்:***

துவக்கத்தில் புத்தரின் தத்துவங்கள் மட்டுமே போதிக்கப்பட்டு வந்தன. அவரை வழிபடும் வழக்கம் ஏற்படவில்லை. சிறிது காலத்தில் புத்தரின் திருவடிகள் பதித்த ஆசனம் வழிபடப்பட்டு வந்தது. புத்தரது உருவம், வழிபடப்படவில்லை. இத்தகைய புத்தர் திருவடி வழிபாட்டை காஞ்சி சிற்பங்களில் காணலாம். பின்னர் தூபங்களில் புத்தரின் சாம்பலை வைத்து வழிபடும் வழக்கம் ஏற்பட்டது. போதிமரம், தரும சக்கரம் ஆகியவற்றை வழிபடும் முறை பின்னர்

ஏற்பட்டது. அதன் பின் புத்தரது சிலைகலையே பௌத்த சமயத்தினர் வழிபட துவங்கினர். புத்தரின் பிறப்போடு தொடர்புடைய இடங்களை புனித தலங்களாகக் கருதி அங்கு புனிதப்பயணம் மேற்கொள்வது, புத்தருக்கு உருவங்களை அமைத்து மலர்களைக் கொண்டு அர்ச்சனை செய்து வழிபடுவது ஆகியவை மகாயான பௌத்த சமயத்தில் வலியுறுத்தப்பட்டன. இம்மகாயான பௌத்த சமயம் புத்தரை இறைவனாக ஆக்கி அவருக்கு ஆலயங்கள் எழுப்பி மக்களிடையே பக்தி உணர்வை ஊட்டியது என்று கூறின் மிகையாகாது. பௌத்த சமயம் மேலை நாடுகளில் பரவி நிலை பெற மகாயானம் காரணமாக இருந்தது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

பழைய பௌத்த சமயத்தை ஹீனாயான சமயம் அல்லது 'குறுகிய பாதை' எனவும் மகாயான பௌத்த சமயத்தினர் அழைத்தனர் மகாயான பௌத்த சமயம் போதி சத்துவர்களை (புத்தமத துறவிகள்) மெய்ஞ்ஞானத்திற்கு வழி காட்டுபவர்களாக ஏற்றுக்கொண்டது. அவர்களை மக்கள் மலர்களாலும், வாசனைத் திரவியங்களாலும், குடைகளாலும், வழிபடும் படியும் கேட்டுக் கொண்டது. இக்கருத்து புத்தரது கருத்துக்கு மாறுபாடானது. ஏனெனில் புத்தர் ஒரு மனிதன், தன் முயற்சியால் மெய்ஞ்ஞானம் பெற வேண்டும் என்று சொன்னார். புத்தருக்கு கோயில்கள் அமைத்து, அர்ச்சித்து வழிபடுவதை இம்மார்க்கம் ஆதரித்தது. ஏழை எளியவர்களுக்கு ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற உதவியைச் செய்ய வேண்டும் என இது போதித்தது.

ஒரு மனிதன் தான் முக்தி அடைவதை இயன்றவரை ஒத்திப்போட்டு விட்டு மனித சமுதாயத்திற்கு உதவி செய்ய வேண்டும் என இம்மார்க்கம் வலியுறுத்தியது. மாமிசம் உண்பதை இம்மார்க்கம் அனுமதித்தது. இறப்புக்குப்பின் ஒரு மனிதன் தான் இப்பிறப்பில் செய்த கருமங்களுக்கு ஏற்ப சொர்க்கத்திற்கு அல்லது நரகத்துக்கு சென்று வாழ்வதாக நம்பியது எப்போது மகாயானம் தோன்றியது என்று கூறுவது கடினமே. கனிஷ்கரின் காலத்திற்கு முன்பே வளர்ச்சியுற்ற நிலையில் இருந்தது என்பதை தாரநாத்தின் கூற்றிலிருந்து அறிகிறோம். கி.மு. முதல் நூற்றாண்டில் மகாயானம் தோன்றியிருக்கலாம். பின்னர் அது காலப் போக்கில் செல்வாக்குப் பெற்று அயல்நாடுகளில் பரவியது. ஆனால் இந்தியாவில் அது செல்வாக்கு இழந்தது.

**காந்தாரக் கலை: (Gandhara Art)**

பெஷாவர் நகரைச் சுற்றி அமைந்திருந்த பகுதி காந்தாரம் என பண்டைக்காலத்தில் அழைக்கப்பட்டது. இப்பகுதியை சுமார் 300 ஆண்டுகள் கிரேக்கர்கள் ஆண்டனர். இப்பகுதியில் கி.மு. முதலாம் நூற்றாண்டின் இடையிலிருந்து கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுவரை சிறப்புப் பெற்றுத் திகழ்ந்த கலைப்பாணியே காந்தாரக் கலை ஆகும். இக்காந்தாரக் கலை குஷாணர்கள் காலத்தில் உச்ச நிலையை அடைந்தது. இந்திய மரபுகளோடு இணைந்த கிரேக்கக் கலையே காந்தாரக்கலை என அழைக்கப்படுகிறது. காந்தாரக் கலைப்பாணி சிற்பங்களில் காணப்படும் முத்திரைகள்; ஆசனங்கள் ஆகியன இந்திய மரபுகளை ஒட்டி வடிக்கப்பட்டுள்ளன. அச்சிலைகளின் ஆடை, அணிகலன்கள் மட்டுமே கிரேக்க மரபுகளை ஒட்டி அமைந்துள்ளன. ஆடைக்குள் அமைந்தள்ள உறுப்புகளின் சில பகுதிகள் ஆடையின் மூலமாக வெளியே தெரிவது போன்று அமைப்பது காந்தாரக் கலையின் சிறப்புத்தன்மையாகும். ஆடையின் மடிப்புக்கள் காந்தாரக்கலைச் சிற்பங்களில் தெளிவாகத் தெரியும். காந்தாரக்கலை இந்தியருக்குக் கிரேக்க மயமாகவும். கிரேக்கருக்கு இந்திய மயமாகவும் காட்சி அளிக்கும் ஒரு தனிச் சிறப்பு மிக்க கலையாகும். பௌத்த சமயம் அயல்நாடுகளில் பரவியது அச்சமயத்தில் சில மாற்றங்கள் ஏற்பட்டது. அவர்களது உருவச் சிலைகள் ஏராளமாக அயல் நாட்டினருக்குத் தேவைப்பட்டது. ஆகவே அச்சிலைகளைச் செய்ய அயல் நாடுகளிலிருந்து ஏராளமான சிற்பிகள் இந்தியாவிற்கு வரவழைக்கப்பட்டனர். அவர்கள் கடுமையாக இரவு பகல் பாராது உழைத்து ஒரே மாதிரிய உருவங்களை உருவாக்கினர். அவ்வுருவங்களில் அவர்களுக்குத் தெரிந்திருந்த அப்போலே ஜியூஸ் போன்ற கிரேக்கக் கடவுளர்களின் சாயல் பிரதிபலித்தது. மீன் கண்ணும், உருண்டைத்

தலையும், தட்டையான மூக்கும் கொண்ட புத்தரது வடிவம் கூரிய முகத்துடனும் வடித்தெடுக்கப்பட்டது. ஆனால் புத்தருடைய சாந்தம், கருணை, ஆன்மநேயம் முதலிய ஆன்மீகப் பண்புகள் அவ்வுருவங்களில் காட்டப்படவில்லை என்ற கருத்து ஒப்புக் கொள்ளத்தக்கதே.

ஒருசில பாரசீக கலைப்பண்புகளும் காந்தாரக் கலைச் சிற்பங்களில் காணப்படுகின்றன. அலெக்சாந்தரது வருகைக்குப் பின் பாக்டீரியாவில் கிரேக்கக் கலையும் பாரசீகக் கலையும் இணைந்து அதனால் விளைந்த ஒரு கலப்புக் கலையே காந்தாரக் கலை என்பது சர்ஜான் மார்ஷல் என்பவரது கருத்தாகும்.

உள்ளதை உள்ளபடியே காட்டும் கிரேக்கக் கலைப் பண்பு ஒரு சில காந்தாரக் கலைச் சிற்பங்களில் சிறப்பிடம் பெறுகிறது. இலாகூரில் உள்ள புத்தரது சிலை அவர் உபவாசத்தால் உடலை வருத்திய நிலையைச் சித்தரிக்கிறது. அதில் புத்தரின் விலா எலும்புகள் தெளிவாகத் தெரிகின்றன. அவரது முகத்தில் பெண்மை உணர்ச்சி வெளிப்பாடு நன்கு தெரிகிறது. கிரேக்க உரோமானியக் கலைப்பாணியின் அடிப்படையில் ஏற்பட்டது காந்தாரக்கலை என்றும் அது கி.பி. முதலாம் நூற்றாண்டு முதல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை தழைத்து வளர்ந்தது என டாக்டர் வி.ஏ. ஸ்மித் கருதுகிறார்.

இந்தியக் கலைக் கூறுகளை விட கிரேக்கக் கலைக் கூறுகள் அதிகம் பெற்றதே காந்தாரக்கலை என பால்மாசன் (Paul Masson) கருதுகிறார்.

**குஷாணர்கள் கால இந்தியா:**

குஷாணர்கள் வெளியிட்ட நாணயங்களையும், கல்வெட்டுக்களையும் ஆராய்ந்து அக்கால இந்திய நிலை பற்றி நாம் அறிந்து கொள்ளலாம். அவர்களின் நிருவாகத்தில் அயல் நாட்டினரின் சாயல் இருந்தது. ஒவ்வொரு மாநிலத்தின் நிருவாகமும் ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அமாத்தியர்களும், சேனாதிபதிகளும் மன்னருக்கு நிர்வாகத்தில் உதவி புரிந்தனர். மன்னர்கள் தேவபுத்திரன், கெய்சர் போன்ற பட்டப் பெயர்களைப் பெற்றுத் திகழ்ந்தனர். ஒரே நேரத்தில் நாட்டினை இரண்டு மன்னர்கள் ஆட்சி செய்யும் முறை குஷாணர்கள் காலத்தில் இருந்தது. இரண்டாம் கனிஷ்கரும், குவிஷ்கரும் ஒரே நேரத்தில் மன்னராக இருந்ததாக கல்வெட்டுகள் கூறுகின்றன. குஷாணப் பேரரசு பல இராட்டிரங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு இராட்டிரத்திலும் (Rashtra) பல அகாரங்கள் (Aharas) இருந்தன. ஒவ்வொரு அகாரத்திலும் பல ஜனபதங்கள் (Janapadas) இருந்தன. அயல்நாட்டினர் படையெடுப்பு இன்றி நாட்டில் அமைதி நிலவியமையால் அயல் நாடுகளுடன் வாணிபம் இவர்கள் காலத்தில் தழைத்து ஓங்கியது. உரோமானியர்கள் தங்கத்தைக் கொடுத்து இந்தியப் பொருட்களை குறிப்பாக மஸ்லின் துணியை தம் நாட்டிற்கு ஏற்றுமதி செய்து கொண்டனர் எனச் சொல்லப்படுகிறது. இந்தியாவின் மேலைப் பகுதியிலும், தெற்குப் பகுதியிலும் உள்ள துறைமுகப் பட்டிணங்களில் ஏராளமான உரோமானிய நாணயங்கள் நமக்குக் கிடைக்கின்றன. இவை நமக்கு இந்தியா உரோமுடன் கொண்ட வாணிபத் தொடர்புகட்கு மூலங்களாகத் திகழ்கின்றன. முதலாம் கனிஷ்கர், குவிஷ்கர், வாசுதேவர் ஆகிய குஷாண மன்னர்கள் தங்கத்திலும், செம்பிலும் நாணயங்கள் வெளியிட்டனர். அவர்கள் வெள்ளி நாணயங்கள் வெளியிட்டதாகத் தெரியவில்லை.

இவர்கள் காலத்தில் பௌத்த சமயம் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்தது. சமயச் சகிப்புத்தன்மை இக்காலத்தில் இருந்தது. இந்து சமயம், பௌத்த சமயம், சமண சமயம் ஆகிய அனைத்துச் சமயங்களும் சிறந்து விளங்கின. குஷாணர்களின் நாணயங்களில் இந்து சமயக் கடவுளர்கள், பௌத்த சமயக் கடவுளர்கள், கிரேக்கக் கடவுளர்கள் ஆகியோர் பொறிக்கப்பட்டன. குஷாண மன்னர்கள் தாங்கள் பின்பற்றிய சமயத்தை அரசு சமயமாக ஆக்கவில்லை. இரண்டாம் காட்பீசஸ், சைவசமயத்தைச் சார்ந்திருந்தார். கனிஷ்கர் பௌத்த சமயத்தைச் சார்ந்திருந்தார். அவர்கள் தங்கள் சமயத்தை வலுக்கட்டாயமாக தம் மக்கள் மீது திணிக்கவில்லை.

**இந்தியாவும் மேலை நாடும்:**

கி.மு. 516 முதல் கி.பி.220 வரை இந்தியாவிற்கும், மேலைநாட்டிற்குமிடையே நெருங்கிய தொடர்பு இருந்தது. இது எவ்வளவு தூரம் இந்து நாகரீகத்தை பாதித்தது என்பதை இவண் ஆய்வோம். இது ஒரு முக்கியமான, ரசமான வினாவாகும்.

முதலாவதாக பாரசீகர்கள் பஞ்சாபில் தங்களது ஆட்சியை ஏறக்குறைய இருநூறு ஆண்டுகள் ஏற்படுத்தி இருந்தனர். இதன் விளைவாக இந்தியர்கள் எழுத்துக்கலையையும், அசோகரின் ஆணைகளையும் பாரசீக மன்னர்களாகிய சைரஸ், தாரியஸ் ஆகியோரை பின்பற்றி உருவாக்கி இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. அசோகரது காலத்திற்கு முன்பு இந்தியாவில் கட்டிடங்கள் அனைத்தும் மரத்தினால் ஆனவை பாரசீகர்களிடமிருந்துதான் அசோகர் கல்கட்டிட முறையை அறிந்தார். பாரசீகத்தில் உள்ள கட்டிடங்களைப் போலவே அசோகர் உருவாக்கிய ஸ்தூபிகள்; ஏனைய பௌத்த கட்டிடங்களும் இருந்தன.

பஞ்சாப்பில் தங்கியிருந்த கிரேக்கர்களிடமிருந்து இந்துக்களும், பௌத்தர்களும் சிலை வழிபாட்டு முறையை அறிந்ததாகத் தெரிகிறது. மேலும் இந்திய கட்டிடக்கலை நிபுணர்களும், சிற்பிகளும் கிரேக்கர்கிடமிருந்து பல கட்டிட நுணுக்கங்களை அறிந்தனர்.

நாணயத்துறையில் மேலைநாட்டின் தாக்கம் கூடுதலாக இருந்தது. அலெக்சாண்டிரியா நாட்டிலிருந்து இந்தியா சில வானவியல், கணித சொற்களை அறிந்து கொண்டதாகக் கருதப்படுகிறது. கிறித்துவச்சகாப்தத்தின் முதல் நான்கு நூற்றாண்டுகளில் இந்தியாவிற்கும், கிரேக்க உரோமானிய நாட்டிற்குமிடையே நெருங்கிய வணிகத்தொடர்பு இருந்ததாக தெரிகிறது. மேலும் இந்தியவணிகர்கள் ஆண்டியாக், பல்மேரா, அலெக்சாந்திரியா போன்ற மேலைநாட்டு நகரங்களுக்கு அடிக்கடி வணிகம் காரணமாக கப்பல்களில் சென்று வந்ததாகத் தெரிகிறது. அதேபோல் கிரேக்க கப்பல்களும் இந்தியதுறைமுகங்களுக்கு வந்ததாகத் தெரிகிறது. இந்தியாவிலிருந்து உரோமானியா நாட்டை 16 வாரங்களில் அடைந்து விடுவதற்கான புதிய மார்க்கமும் கண்டு பிடிக்கப்பட்டது. இதன் விளைவாக கிழக்கும், மேற்கும் அடிக்கடி சந்தித்தன. பயனடைந்தன.

# 13. குப்தர்கள்

**இலக்கிய மூலங்கள்**

மச்ச புராணமும் வாயு புராணமும் கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டன. இவை குப்தர்களின் எழுச்சி பற்றிய சில செய்திகளை நமக்குத் தருகின்றன.

இரண்டாம் சந்திர குப்தரின் அமைச்சராக இருந்தவர் சிகரர் (Sikhera). இவர் எழுதிய 'காமண்டக நீதி சாத்திரம் குப்தர்கள் காலத்து சமுதாயத்தையும், சட்ட முறைகளையும் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது.

'கௌதமி மகோத்சவம்' என்ற நாடகத்தின் கதாநாயகன் சந்திரசேனன் மன்னர் ஆவார். இந்த சந்திரசேனன் மகர நாட்டைக்கைப்பற்றி அதனை லிச்சாவி அரச குடும்பத்தின் ஆதரவோடு ஆண்டார் என இந்த நாடகம் சொல்கிறது. இந்த சந்திரசேனன் என்ற மன்னர் முதலாம் சந்திரகுப்தரே என சிலர் சொல்கின்றனர்.

விசாகதத்தர் 'முத்ராராட்சசம்' என்ற நாடக நூலை குப்தர்கள் காலத்தில் எழுதினார். இந்நாடகத்திலிருந்து குப்தர் கால சமய நிலையை ஓரளவு தெரிந்து கொள்ள முடிகிறது. இவர் எழுதிய மற்றொரு அரசியல் நாடகமாகிய 'தேவி சந்திரகுப்தம்' இரண்டாம் சந்திர குப்தர் சாக மரபு மன்னரை கொன்று விட்டு அரியணையைக் கைப்பற்றிய செய்தியை நமக்குச் சொல்கிறது.

குப்தர் காலத்தில் இந்தியாவிற்கு வந்த *சீனயாத்திரிகர்* பாகியான் ஒரு பௌத்த சமயத் துறவியாவார். இவர் எழுதிய குறிப்புகளிலிருந்து குப்தப் பேரரசின் நகரங்களைப் பற்றியும், சமய , சமுதாய பொருளாதார நிலைகளைப் பற்றியும் அறிந்து கொள்கிறோம்.

**கல்வெட்டுகள்:**

குப்தர்கள் காலக் கல்வெட்டுகள் அனைத்தையும் திரட்டி, தொகுத்து, பதிப்பித்தவர் டாக்டர் பிளீட் (Dr. Fleet). குப்த மன்னர்களின் போர்கள், வெற்றிகள், ஆட்சி முறை பற்றி இக்கல்வெட்டுகள் மூலம் அறிந்து கொள்கிறோம். சமுத்திர குப்தரால் வெளியிடப்பட்ட அலகாபாத் தூண் கல்வெட்டு இவரது படையெடுப்புகளையும், வெற்றிகளையும் பற்றி பல சுவையான தகவல்களை நமக்குத் தருகிறது உதயகிரி குகைக் கல்வெட்டு, சாஞ்சி கல்வெட்டு, மதுரா கல்வெட்டு ஆகியவை இரண்டாம் சந்திர குப்தரது ஆட்சியைப் பற்றிச் சொல்கின்றன.

**நாணயங்கள்:**

செம்பு, வெள்ளி, தங்கம் ஆகிய உலோகங்களால் செய்யப்பட்ட ஏராளமான குப்தர் காலத்து நாணயங்கள் நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றை ஆராய்ந்து வகைப்படுத்திய பெருமை ஜே. ஆலன் (J. Allan) அவர்களையே சாரும். சந்திரகுப்தர் தாயார் குமார தேவி ஆகியோரின் உருவங்களைப் பொறித்து வெளியிட்டார். குப்தர்கள் நாணயங்கள் கிடைக்கும் இடங்களைக் கொண்டு குப்தப் பேரரசின் பரப்பளவை அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் இந்நாணயங்கள் இப்பேரரசர்களின் பட்டப்பெயர்களையும், அவர்களது கலை ஆர்வத்தையும், பேரரசின் பொருளாதார நிலையையும் நமக்கு உணர்த்துகின்றன.

**ஸ்ரீகுப்தர்:**

இவரே குப்த மன்னர் மரபினை நிறுவியவர் எனக் கூறப்படுகிறது. கல்வெட்டுகள் இவரை மகாராஜா் எனக் குறிப்பிடுகின்றன. *சீன* யாத்திரிகர் இத்சிங் ஸ்ரீகுப்தர் கட்டிய கோவில் ஒன்றைத் தாம் பார்த்ததாக தனது பயணக் குறிப்பில் எழுதியிருக்கிறார்.

**கடோத்கசர் (Ghtotkacha)**

இவர் ஸ்ரீகுப்தரின் மகன் ஆவார். இவரே ஸ்ரீகுப்தருக்குப் பின் குப்த அரசின் மன்னர் பொறுப்பேற்றுக் கொண்டார். இவரும் 'மகாராஜா' என்றே பட்டப்பெயர் சூட்டிக் கொண்டிருந்தார்.

இவ்விரு குப்த மன்னர்களும் ஒரு பேரரசின் கீழ் சிற்றரசர்களாக இருந்திருக்கக் கூடும் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அவர்கள் எந்தப் பகுதியை ஆண்டு வந்தனர் என்பது தெளிவாகத் தெரியவில்லை. இவர்கள் வடமேற்கு வங்கத்தின் ஒரு பகுதியை ஆண்டிருக்க கூடும் அல்லது மகதத்திலேயே ஒரு பகுதியை ஆண்டிருக்கலாம். கடோத்கசரின் ஆட்சி கி.பி. 320-ஆம் ஆண்டு வாக்கில் முடிவுற்றிருக்க வேண்டும்.

**முதலாம் சந்திரகுப்தர்:**

இவர் தான் குப்த மரபின் முதலாவது சிறந்த மன்னர் இவர் மகாராஜாதிராஜா என்ற பட்டத்தைப் பெற்றிருந்தார் ஆகவேதான் வரலாற்று ஆசிரியர்கள் இவரை பேரரசர் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்ட மன்னர் என வருணிக்கின்றனர். லிச்சாவி மன்னர் குலத்து இளவரசியான குமாரதேவியை இவர் மணந்து கொண்டார். பாடலிபுத்திரத்திலோ அல்லது அதற்கு அருகிலோ சிறிய பகுதி ஒன்றுக்கு மன்னராக இருந்த முதலாம் சந்திரகுப்தர் இம்மண உறவின் விளைவாக மகதத்தின் மன்னரானார் என டாக்டர் வின்செண்ட் சுமித் கூறுகிறார். முதலாம் சந்திரகுப்தர் வலிமை பெற்றுத் திகழ்ந்தமைக்கு இந்த மண உறவு வழிப்பெற்ற ஆதரவே காரணம் என்பது மறுக்க முடியாத உண்மை. முதலாம் சந்திரகுப்தர் காலத்தில் குப்த அரசில் வங்கம், பீகார், உத்திரப்பிரதேசத்தின் கிழக்குப் பகுதி ஆகியவை அடங்கியிருந்தது.

குப்த சகாப்தத்தினை (Gupta Era) தோற்றுவித்தவர் முதலாம் சந்திரகுப்தரே எனப் பலரும் கருதுகின்றனர். இந்த சகாப்தம் அவரது முடிசூட்டு விழா நாளிலிருந்து தொடங்குகிறது என்பர். இவரது முடிசூட்டு விழா நடந்த தேதி டிசம்பர் 20, கி.பி. 318 என்பர் சிலர். இக்கருத்தை மறுப்பவர்கள் அவரது முடிசூட்டு விழா கி.பி. 326-ல் பிப்ரவரி 26-ஆம் தேதி நடந்ததாகக் கணக்கிடுகின்றனர்.

'கௌதமி மகோத்சவம்' என்ற சமஸ்கிருத நாடகத்தில் வரும் சந்திரசேனர் மகத நாட்டு அரியணையை கைப்பற்றிக் கொண்டு லிச்சாவி அரச மரபின் படை உதவியோடு அதனை கொடுங்கோல் ஆட்சி செய்தார் என்றும் இதனை விரும்பாத மக்கள் புரட்சி செய்து அவரை பதவியிலிருந்து நீக்கிவிட்டு ஒரு புதிய மன்னரை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தினர் என்றும் சொல்லுகிறது. டாக்டர் K.P.ஜெயஸ்வால் இந்நாடகம் குறிப்பிடும் சந்திரசேனன் முதலாம் சந்திரகுப்தர் தான் என்றும் புரட்சிக்குப் பின் மக்களால் அமர்த்தப்பட்ட மன்னர் சமுத்திரகுப்தர் என்றும் கூறுகிறார்.

டெல்லிக்கு அருகில் உள்ள மெஹ்ராலியில் உள்ள இரும்புத்தூண் ஆணையில் சந்திரர் என்ற மன்னர் சிந்து ஆற்றைக் கடந்து சென்று வெற்றி வாகை சூடினார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது இந்த சந்திரர் என்ற மன்னர் முதலாம் சந்திரகுப்தரே என்பர் சில வரலாற்று ஆசிரியர்கள். வேறு சிலரோ இதில் குறிப்பிடப்பட்டுள்ள மன்னர் இரண்டாம் சந்திரகுப்தர் என்பர். இரண்டாவது கருத்தே ஏற்றுக்கொள்ளத் தக்கதாக உள்ளது. ஏனெனில் இரண்டாம் சந்திரகுப்தரே சந்திரர் என்ற தனது சுருக்கப் பெயரில் நாணயங்கள் வெளியிட்டிருக்கிறார். சமீப காலத்தில் இந்த மெஹ்ராலி இரும்புத்தூண் ஆணையை வெளியிட்டவர்கள் குப்தர்கள் இல்லை என்றும் இதில் குறிப்பிடப்பட்டுள்ள 'சந்திரர்' முதலாம் சந்திரகுப்த மௌரியரைக் குறிக்கும் என்றும் சொல்கின்றனர். இந்த ஆணையை வெளியிட்டவர் எவர் என்பது இன்னும் புரியாத புதிராகவே இருக்கிறது.

***சமுத்திர குப்தர்: (கி.பி. 330 - 380)***

***வரலாற்று மூலங்கள்:***

முதலாம் சந்திரகுப்தர் இறந்ததும் அவரது இளைய மகன் சமுத்திரகுப்தர் மன்னரானார். இளைய மகனாக இருந்தும் அரியணை ஏறும் வாய்ப்புத் தந்தையாரால் இவருக்கு அளிக்கப்பட்டதிலிருந்தே இவருடைய ஆற்றலையும், பெருமைகளையும் அறியலாம். மத்திய பிரதேசத்தில் உள்ள ஏரான் (Eran) செப்பேடு, கயை செப்பேடு, நாளந்தா செப்பேடு ஆகியவை இவரது வரலாற்றை அறிந்து கொள்ள துணைபுரிகின்றன. அலகாபாத் தூண் மீது காணப்படும்

ஆணை சமுத்திர குப்தரின் வெற்றிகளை விளக்கமாகக் கூறுகிறது. இத்தூண் அசோகரது காலத்தது. இதில் அசோகரது ஆணை ஒன்று பொறிக்கப்பட்ட நிலையில் கௌசாம்பியில் வைக்கப்பட்டிருந்தது. இத்தூணின் வெற்றிடத்திலேயே பின்னர் சமுத்திரகுப்தரின் ஆணை பொறிக்கப்பட்டது. பின்னர் அலகாபாத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. இந்த அலகாபாத் ஆணை சமஸ்கிருத கவிதை அமைப்பிலும், உரைநடையிலும் உள்ளது இதனை இயற்றியவர் ஹரிசேனர் (Harisena) என்ற சமுத்திரகுப்தரின் படைத்துறை அமைச்சராவார். இத்தூணின் ஒரு பகுதியில் அன்பு, அமைதி, அறம் பற்றி அசோகர் வெளியிட்டட ஆணை காணப்படுகிறது. மற்றொரு பகுதியில் சமுத்திர குப்தரின் போர் வெற்றிகள் குறிக்கப்பட்டுள்ளமை நல்ல நகைச்சுவைதான். இப்பட்டயம் எப்போது வெளியிடப்பட்டது என்பது பற்றி கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. டாக்டர் பிளீட் இப்பட்டயம் சமுத்திரகுப்தர் மறைவுக்குப் பின் வெளியிடப்பட்டது என்று கூறும் கருத்து ஏற்புடையதாக இல்லை. ஏனெனில் இப்பட்டயத்தில் சமுத்திரகுப்தர் செய்த அசுவமேதயாகம் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. சமுத்திரகுப்தரை அவரது தந்தை முதலாம் சந்திரகுப்தர் வாரிசாக நியமித்ததை குப்த பேரரசின் அமைச்சர்கள் வரவேற்றனர். ஆனால் சமுத்திரகுப்தரின் உடன்பிறப்புகளுக்கு இதில் உடன்பாடில்லை. ஆகவே சமுத்திரகுப்தர் தாம் அரச பதவியை அடைய போரை மேற்கொண்டிருக்கலாம் என வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். சமுத்திரகுப்தர் ஆட்சிக்கு வந்த ஆண்டு எது எனத் தெளிவாகத் தெரியவில்லை. கி.பி.340-லிருந்து 350-க்குள் அவரது முடிசூட்டு விழா நடந்திருக்கலாம் என டாக்டர் மஜீம்தார் கருதுகிறார் கி.பி. 335ல் சமுத்திர குப்தர் மன்னராக ஆகியிருக்கலாம் என ஆர்.கே. முகர்ஜி கூறுகிறார்.

**சமுத்திரகுப்தரின் வெற்றிகள்:**

ஹரிசேனர் இயற்றிய அலகாபாத் ஆணையின் மெய்கீர்த்தி அவரது வெற்றிகளைப் பற்றி தெளிவாகக் கூறுகிறது, அவ்வாணை சில இடங்களில் சிதைந்து காணப்படுவதால் இதில் குறிக்கப்பட்டுள்ள பெயர்களை வைத்துக் கொண்டு ஒருசில மன்னர்களை அடையாளம் கண்டு கொள்வது கடினமாக உள்ளது. சமுத்திரகுப்தர் கங்கை சமவெளி மன்னர்களையும் தோற்கடித்து அவர்களது அரசுகளை தம் அரசோடு இணைத்துக் கொண்டார். இவ்வெற்றிகள் திக் விஜயம் என அழைக்கப்படுகிறது. ஆனால் தென்னிந்திய மன்னர்களைத் தோற்கடித்து அவர்களிடம் இருந்து கப்பம் வாங்கிக் கொண்டு அவரவர்களின் அரசுகளை அவரவர்களிடமே ஒப்படைத்து விட்டு வந்து விட்டார். இவரது தென்னிந்திய வெற்றிகள் 'தர்ம விஜயம்' என வழங்கப்படுகிறது. போக்குவரத்து வசதிகள் கூடுதலில்லாத அக்காலத்தில் வடகிழக்கு இந்தியாவில் இருந்து கொண்டு தென் இந்தியாவை ஆளுவது கடினம் என எண்ணினார் போலும் சமுத்திரகுப்தர். வடஇந்தியாவில் சமுத்திரகுப்தரிடம் தோற்றுப்போன மன்னர்களின் பெயர்கள் பின் வருமாறு'

1. உருத்திர தேவர், வாகாடக மன்னர்
2. மடிலர் (Matila), உத்திரப்பிரதேசத்து சிற்றரசர்
3. நாகதத்தர், நாகவம்சத்து மன்னர்
4. சந்திரவர்மர், மேற்கு வங்கத்து சிற்றரசர்
5. கணபதிநாகர், மதுராபுரியை ஆண்ட நாக மன்னர்
6. நாகசேனர், பத்மாவதி நகரை ஆண்ட நாக மன்னர்
7. அச்சுதர், உத்திரப்பிரதேசத்தின் இன்றைய இராம் நகர் பகுதியை ஆண்ட மன்னர்
8. பாலவர்மன், அசாமை ஆண்ட மன்னர்.

இந்த மன்னர்கள் அனைவரையும் வென்று இவர்களது பகுதிகளை தமது பேரரசோடு சமுத்திரகுப்தர் இணைத்துக் கொண்டார். தென்னிந்திய மன்னர்கள் பன்னிரண்டு பேரை சமுத்திரகுப்தர் தோற்கடித்து அவர்களை சிறையிலடைத்தார் என அலகாபாத் அறிக்கை கூறுகிறது. அம்மன்னர்கள் பின் வருமாறு:

1. தென் கோசல நாட்டு மன்னர் மகேந்திரர்
2. மகா காந்தார நாட்டு மன்னர் வியாக்கிரகராஜர்
3. கௌரலா (Kaurela) நாட்டு மன்னர் மாந்த ராஜா
4. பிஸ்த்தபுரத்து மன்னர் மகேந்திர கிரி
5. கோட்டூராவின் (Kottura) மன்னர் சுவாமிதத்தர்
6. எரண்ட பல்ல மன்னர் தாமனர் (இன்றைய விசாகபட்டின பகுதி)
7. சாஞ்சிபுரத்து மன்னர் விஷ்ணுகோபர்.
8. அவமுக்த மன்னர் நீலராஜர்
9. வேங்கியை ஆண்ட ஹஸ்த்திவர்மர்
10. பாலக்கா (Plakka) மன்னர் உக்கிரசேனர்.
    (பல்லவருக்கு சிற்றரசராய் இருந்து நெல்லூர் பகுதியை ஆண்டவர்)
11. தேவராட்டிர மன்னர் குபேரர்.
12. குஸ்த்தலபுரத்து மன்னர் தனஞ்செயர்

இம்மன்னர்களிடம் இருந்து திறையைப் பெற்றுக்கொண்டு அவரவர்களிடம் அவரவர்களது அரசுகளை ஒப்படைத்துவிட்டு தம் தலைநகரம் வந்து சேர்ந்தார் சமுத்திரகுப்தர். இவ்வாறு இந்திய முழுவதும் வெற்றி கொண்ட அவரை இந்திய நெப்போலியன் என Dr.ஸ்மித் அழைப்பது பொருத்தமே. அவர் தம் வெற்றியை கொண்டாடும் முகத்தான் அசுவமேத வேள்வி ஒன்றைச் செய்தார். அந்த வேள்வியை குறிக்கும் வகையில் அவர் வெளியிட்ட நாணயங்களில் குதிரையின் உருவமும், வேள்வி பற்றிய வாசகமும் பொறிக்கப்பட்டுள்ளன. தற்கால பிலாச்பூர், சம்பல்பூர் பகுதிகள் அக்காலத்தில் 'கோசலம்' என அழைக்கப்பட்டது. மத்திய பிரதேசத்தின் வடபகுதி மகாகாந்தாரம் எனப்பட்டது. மேலே சொன்ன பிஸ்தாபுரம் தற்போது 'பிஸ்தாபுரம்' என்றே அழைக்கப்படுகிறது. அது கோதாவரி மாவட்டத்தில் உள்ளது. கஞ்சம் மாவட்டத்தில் உள்ள கோத்தூரே கோட்டுரா எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. காஞ்சி என்பது பல்லவர்களின் காஞ்சிபுரமேயாகும். பாலாக்கா என்பது குண்டூர் அல்லது நெல்லூர் பகுதியாகும். குஸ்த்தலபுரம் என்பது வட ஆற்காடு மாவட்டத்தில் போருளூக்கு அருகில் உள்ள குட்டலூர் ஆகும். எல்லைப்புற அரசுகளாகிய சாமதார், காமரூபா, நேபாளம், நாவகா ஆகியவை சமுத்திர குப்தருக்கு அடிபணிந்து அவரது மேலாண்மையை ஏற்றுக் கொண்டன. அபிராக்குடியரசு, காசுக்குடியரசு, கர்ப்பாரிகக் குடியரசு, மாளவக் குடியரசு, மத்ரகக் குடியரசு, சனகானிகக் குடியரசு ஆகியவையும் சமுத்திர குப்தரின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டன.

**சமுத்திரகுப்தர் காலத்தில் இலங்கை-இந்திய உறவு:**

இலங்கையில் இருந்து இந்தியா வந்த பௌத்த துறவிகள் தங்குவதற்கு இடவசதி இன்றி மிக இன்னலுற்றனர். இவர்கள் இலங்கைக்குச் சென்று தம் மன்னர் ஸ்ரீமேகவர்ணனைச் சந்தித்து தாம் இந்தியாவில் பட்ட துன்பத்தை எடுத்துரைத்தனர். உடனே ஸ்ரீமேகவர்ணன் இலங்கையில் இருந்துவரும் பௌத்த துறவிகள் தங்க ஒரு பௌத்த விகாரம் இந்தியாவில் கட்ட சமுத்திரகுப்தரின் அனுமதியைக்கேட்டுப் பெற்றார். இந்தச் செய்திகள் அலகாபாத் பட்டயத்தில் சொல்லப்பட்டுள்ளன. இந்த பௌத்த விகாரத்தில் ஆயிரம் பேர் தங்கலாம் என்றும் இதற்கு 'மகாபோதி சங்காராமா' எனப்பெயர் என்றும் யுவான்சுவாங் குறிப்பிடுகிறார். கிழக்கே பிரம்மபுத்திரா முதல் மேற்கே யமுனை வரையிலும், வடக்கே இமயமலையின் அடிவாரத்தில் இருந்து தெற்கே நர்மதை ஆறு வரையிலும் உள்ள பகுதிகள் சமுத்திரகுப்தரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன என டாக்டர் சுமித் கருதுகிறார்.

சமுத்திரகுப்தர் எட்டு வகையான நாணயங்களை வெளியிட்டார். இலட்சுமி, சரஸ்வதி, கங்கை ஆகிய இந்திய கடவுளர்களின் உருவங்கள் அவற்றின் மீது பொறிக்கப்பட்டு உள்ளன.

சமுத்திரகுப்தரின் உருவம் ஒரு நாணயத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இவர் உயரமாகவும் உடல் பருமனாகவும் காணப்படுகிறார். இவர் தாம் வீணை இசைக் கருவியை மீட்டிக்கொண்டிருப்பது போல நாணயங்கள் வெளியிட்டிருக்கிறார். இவர் வெளியிட்ட சில நாணயங்களில் அம்பு, வில், வாள் ஆகியவை பொறிக்கப்பட்டிருப்பதிலிருந்து இவர் வேட்டையாடுவதில் நாட்டம் உடையவராயிருந்தார் என்பதை அறிந்து கொள்கிறோம். இவர் பெற்றோரை மதிக்கும் பெருந்தகை என்பதை இவர் தம் பெற்றோர் உருவம் பொறித்த நாணயங்கள் வெளியிட்டதில் இருந்து தெரிந்து கொள்கிறோம் ஒருபுறம் குதிரையின் உருவம் ஒன்றும் மற்றொரு புறம் அரசியின் உருவம் பொறித்த நாணயத்தை அசுவமேதவேள்வி செய்த போது அதன் நினைவாக வெளியிட்டார் எனலாம். இவர் இந்து மதத்தைப் பின்பற்றினார் இருப்பினும் பௌத்தசமய அறிஞர் வசுபந்துவை இவர் ஆதரித்தார். பௌத்தசமயக் கொள்கைகளையும், தத்துவங்களையும் வசுபந்துவிடமிருந்து இவர் கற்றுக்கொண்டார். வசுபந்து இவரது அமைச்சராகவும் இருந்தார்.

**சமுத்திரகுப்தரின் நற்குணங்கள்:**

இவர் கவிதை இயற்றும் ஆற்றல் பெற்றிருந்தார். ஆகவே தான் இவரை கவிராஜா என அழைத்தனர். இவர் தோற்ற மன்னர்களையும் பண்புடன் நடத்தினார். தாம் வைணவ சமயத்தை சார்ந்திருந்தாலும் மற்ற சமயங்களை அடக்கி ஒடுக்கவில்லை. குப்த பேரரசர்களிலேயே மிகவும் சிறப்புப் பெற்ற மன்னரான சமுத்திரகுப்தர் சுமார் 50 ஆண்டுகள் மன்னராக இருந்துவிட்டு தனது முதிய வயதில் கி.பி.380 ஆம் ஆண்டில் இறந்தார். இவருக்குப் பின் இவருடைய மகனான இரண்டாம் சந்திரகுப்தர் மன்னரானார்.

**இரண்டாம் சந்திர குப்தர் (விக்கிரமாதித்தியர்):**

### இராமகுப்தர் என்ற பெயரில் ஒரு குப்த மன்னர் இருந்தாரா?

சமுத்திர குப்தருக்குப்பின் குப்த மன்னராக பொறுப்பு ஏற்றுக் கொண்டவர் எவர் என்பது பற்றி வரலாற்று ஆசிரியர்களிடையே ஒருமித்த கருத்து நிலவவில்லை. இதற்குக் காரணம் ‘தேவி சந்திரகுப்தம்’ என்னும் நாடக நூலேயாகும். இந்நாடகத்தில் சமுத்திரகுப்தருக்குப்பின் இராமகுப்தர் என்ற மன்னர் ஆட்சிக்கு வந்தார் என்றும், இவரை இரண்டாம் சந்திரகுப்தர் கொன்றுவிட்டு ஆட்சியையும், இவரது பட்டத்து அரசி துருவாதேவியையும் கைப்பற்றிக் கொண்டாகச் சொல்லப்பட்டு உள்ளது. (இந்நாடகம் முழுமையாக நமக்குக் கிடைக்கவில்லை இதன் சில பகுதிகள் மட்டுமே கிடைத்து உள்ளன). மாளவத்தில் பெச் நகரத்தில் இராமகுப்தர் என்ற மன்னரால் வெளியிடப்பட்ட செப்பு நாணயங்கள் சில கிடைத்துள்ளன. ஆகவே இந்நாடகக் கருத்தை அல்டேகர் ஏற்றுக் கொண்டுள்ளார். அல்டேகர் சமுத்திர குப்தருக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர் இராமகுப்தரே என்ற கருத்தை வெளியிட்டுள்ளார். அல்டேகரின் கருத்தை பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில் இராமகுப்தர் வெளியிட்ட கல்வெட்டு ஒன்று கூடி நமக்கு இதுவரை கிடைக்கவில்லை. இவர் வெளியிட்ட நாணயம் இவரை குப்த மன்னர் என அழைக்கவில்லை. இவர் ஒரு சிற்றரசராக இருக்கக்கூடும். சமுத்திரகுப்தர் தனது வாரிசாக இரண்டாம் சந்திரகுப்தரை நியமித்ததாக பல வரலாற்று ஆசிரியர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். ஆக இராமகுப்தர் என்ற பெயரில் ஒரு குப்த மன்னர் ஆட்சி செய்யவில்லை எனலாம்.

**இரண்டாம் சந்திரகுப்தரின் வெற்றிகள்:**

இரண்டாம் சந்திரகுப்தர் சமுத்திரகுப்தருக்கும் தத்ததேவி என்ற அரசிக்கும் பிறந்தவர் ஆவார். இவர் கி.பி. 308ல் மன்னரானார். இவர் போர் செய்வதில் ஆர்வம் மிக்கவராகத் திகழ்ந்தார். சாகர்களையும், குஷாணர்களையும் வெல்லத் திட்டம் தீட்டினார். அத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முன்னர் தன்னை வலுப்படுத்திக்கொள்ள நினைத்து சில திருமணங்களைச் செய்து கொண்டார். நாகர்கள் தன்னை எதிர்க்காதபடி இருக்க வேண்டும் என்பதற்காக நாக இளவரசி குவேரநாகா என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். தனக்கும் குவேரநாகாவிற்கும் பிறந்த மகள் பிரபாவதியை வாகாடக மன்னர் இரண்டாம் உருத்திரசேனருக்கு மணம் முடித்துக் கொடுத்தார். இத்திருமண உறவின் மூலம் வாகாடர்களின் உதவியைப் பெற்றார். இரண்டாம்

உருத்திரசேனர் திருமணமான ஓரிரு ஆண்டுகளிலேயே கைக்குழந்தையையும், மனைவியையும் தவிக்க விட்டுவிட்டு இறந்து போனார். இவரது இறப்புக்குப்பின் இவரது மனைவி பிரபாவதி (இரண்டாம் சந்திரகுப்தரின் மகள்) தன் மகனின் சார்பில் ஆட்சி நடத்தி வந்தார். அவ்வமயம் தன் தந்தைார் போர்கள் செய்வதற்கு தனது படையைக் கொடுத்து உதவினார்.

இரண்டாம் சந்திரகுப்தர் அரேபியக் கடல் வரை தமது படையைக் கொண்டு சென்று க்ஷத்ரபர்களை (Kshatrapas) வென்று அவர்களது ஆட்சிக்கு உட்பட்டிருந்த கத்தியாவார் தீபகற்பத்தினை தனது ஆட்சிக்குகீழ் கொணர்ந்தார். கிழக்கு மாளவத்தை இராணுவத்தளமாக அமைத்துக்கொண்டு சாகர்களை எதிர்த்துப் போர் புரிந்து வெற்றியும் பெற்றார். அவ்வெற்றியின் நினைவாக விக்கிரமாதித்தன் என்ற பட்டப் பெயரைச் சூட்டிக்கொண்டார். இறுதி மேலைச் க்ஷத்திரபு மன்னரான மூன்றாம் உருத்திர சிம்மரை இவர் தோற்கடித்து கொன்றுவிட்டு மேற்கிந்தியா முழுவதையும் தன் ஆதிக்கத்தின் கீழ்க்கொணர்ந்தார். இந்த மேற்கிந்திய வெற்றியின் அடையாளமாக அசுவமேதவேள்வி ஒன்றைச் செய்தார். பாணர் எழுதிய ஹர்ஷசரிதம் எனும் நூல் மேற்கிந்தியாவில் க்ஷத்ரபர் ஆட்சியை இரண்டாம சந்திரகுப்தர் அழித்ததைப் பற்றி விரிவாகப் பேசுகிறது. இவ்வெற்றிக்கு பின் புரோச் (Broach) சொபாரா (Sopara) ஆகிய துறைமுகப் பட்டிணங்கள் குப்தர்களின் ஆட்சிக்குக் கீழ் கொணரப்பட்டன. இத்துறை முகங்களிலிருந்து ஐரோப்பிய நாடுகளுடன் குப்தர்கள் வாணிபத் தொடர்பு கொண்டனர்.

மதுரா நகரில் உருத்திரசேனர் என்ற சகக் குஷாண மன்னர் ஆட்சி செய்து வந்தார். அவரையும் இரண்டாம் சந்திர குப்தர் வென்றார் என மதுரா கல்வெட்டு கூறுகிறது. மெகரௌலியில் உள்ள இரும்புத்தூண் கல்வெட்டு 'சந்திரர்' என்ற மன்னர் வங்கத்தை வென்றாகக் கூறுகிறது. இதில் கூறப்பட்டுள்ள 'சந்திரர்' இரண்டாம் சந்திரகுப்தரே என்று சிலரும் இல்லை' என்று சிலரும் கூறுகின்றனர்.

***சில முக்கிய நகரங்கள்:***

இரண்டாம் சந்திரகுப்தரின் காலத்தில் பாடலிபுத்திரமே தலைநகரமாக விளங்கிற்று. இவர் உஜ்ஜியினியின் தலைவர் என்று கல்வெட்டுகளில் சிறப்பித்துச் சொல்லப்படுகிறார். அயோத்தியும் இவரது காலத்தில் சிறப்புமிக்க நகரமாகத் திகழ்ந்தது என வசுபந்து குறிப்பிடுகிறார். உஜ்ஜியினியும், பாடலிபுத்திரமும் இவருடைய இரண்டாம் தலைநகரங்களாக இருந்தன என இலக்கியங்கள் கூறுகின்றன.

**நாணயங்கள்:**

தம் தகப்பனாரைப் போல இரண்டாம் சந்திரகுப்தரும் தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களில் நாணயங்கள் வெளியிட்டார். இவரது நாணயங்களில் சிங்கத்தை கொல்வது போன்ற உருவம் பொறிக்கப்பட்டிருந்தது, இங்கு நினைவிற் கொள்ளத்தக்கது. குஜராத் காடுகளில் சிங்கங்கள் அதிகமாக வாழ்ந்தன. அக்குஜராத் பகுதியை வென்ற பின் அவ்வெற்றியின் நினைவாக இரண்டாம் சந்திரகுப்தர் சிங்கம் பொறித்த நாணயங்களை வெளியிட்டார் போலும். இவரது சில நாணயங்களில் மலர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவரது நாணயங்கள் பலவற்றில் விக்கிரமாதித்தர் என்ற இவரது பட்டப்பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

**பாஹியான் வருகை:**

இரண்டாம் சந்திரகுப்தர் காலத்திலேதான் சீனப்பயணி பாகியான் இந்தியாவிற்கு வந்தார். கி.பி. 399ல் சீனாவை விட்டுப் புறப்பட்டு தரைவழியாக இந்தியாவுக்கு இவர் வந்தார். இவர் இந்தியாவில் தங்கி இருந்த 12 ஆண்டுகளில் 6 ஆண்டுக் காலத்தை பயணம் செய்வதில் கழித்தார். எஞ்சிய 6 ஆண்டுகளில் இவர் குப்தப் பேரரசில் தங்கி மூன்று ஆண்டுகள் சமஸ்கிருதம் படித்தார். எஞ்சிய மூன்று ஆண்டுகளில் பௌத்த சமயக் கோட்பாடுகள் அடங்கிய நூல்களைச் சேகரித்து அவற்றில் சிலவற்றை சீன மொழியில் மொழி பெயர்த்தார். பாதுகாப்பான சாலைகள் இல்லாததால் இவர் தென்னிந்தியா வராது வட இந்தியாவிலிருந்து கடல் வழியாக

கி.பி.411ல் தம் தாய் நாடாகிய *சீனாவிற்குச்* சென்றார். இவர் தாம் எழுதிய இந்தியா பற்றிய குறிப்புகளில் இரண்டாம் சந்திரகுப்தரின் பெயரைக் குறிப்பிடாமல் இருப்பது நமக்கு வியப்பைத் தருகிறது. இவரது குறிப்புகளிலிருந்து கீழ்க்காணும் செய்திகளை நாம் அறிகிறோம்.

மன்னர் இந்து சமயத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் பௌத்த சமயத்தினரைப் பேணிப் பாதுகாத்தார்.

காந்தாரம், தட்சசீலம் ஆகிய இடங்களில் ஏராளமான பௌத்த துறவிகள் வாழ்ந்தனர்.

பௌத்த சமயத்தின் புனித இடங்களாக லும்பினி தோட்டம், வைசாலி, நாளந்தா, புத்தகயா, இராஜகிருகம் ஆகியவை கருதப்பட்டன.

மதுராவிற்கு தெற்கே அமைந்திருந்த மாளவம் பகுதியில் பிராமணர்கள் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தனர்.

மேலைக் கங்கைப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். மன்னருடைய நிலங்களை வேளாண்மை செய்வோர் விளைச்சலில் ஒரு பகுதியை மன்னருக்கு நிலவரியாகக் கொடுத்தனர். இங்கு மன்னருக்கு எதிராக கிளர்ச்சி செய்வோரின் வலக்கை துண்டிக்கப்பட்டது. இம்மக்கள் உயிர்களைக் கொலை செய்யவில்லை, மது அருந்தவில்லை, வெங்காயம், பூண்டு முதலியவற்றை பயன்படுத்தவில்லை. சண்டாளர் எனும் பிரிவினர் மட்டும் வெங்காயம், பூண்டு, மாமிசம் ஆகியவற்றை உண்டு வந்தனர். ஆகவே அவர்கள் சமுதாயத்திலிருந்து நீக்கி வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் கடைவீதி முதலிய பொது இடங்களுக்குச் செல்லும் போது கட்டை ஒன்றைத் தட்டி ஒலி எழுப்பும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார்கள் அவ்வொலியைக் கேட்டு மற்றவர்கள் வழியில் இருந்து விலகிக் கொண்டனர். வேட்டையாடுதல், மீன் பிடித்தல், இறைச்சிக்காக ஆடு, மாடு கொல்லுதல் ஆகியவற்றை சண்டாளர்கள் மட்டுமே செய்தனர்.

அரசின் முக்கிய வருவாய் நிலவரியேயாகும். அரசு அலுவலர்களுக்கு ஊதியம் கொடுக்கப்பட்டது.

மடங்கள் பல ஒவ்வொரு ஊரிலும் இருந்தன. அங்கு வழிப்போக்கருக்கு உணவும், தங்குமிடமும், உடையும் இலவசமாக அளிக்கப்பட்டன.

பாடலிபுத்திரத்தில் அசோகரின் அழகிய மாளிகை ஒன்று இருந்தது.

நாட்டில் குற்றங்கள் கூடுதலில்லை. மரணதண்டனை போன்ற கொடிய தண்டனைகள் வழங்கப்படவில்லை.

ஒவ்வொரு ஆண்டிலும் இரண்டாம் மாதத்தின் எட்டாம் நாளில் பாடலிபுத்திரத்தில் ஒரு திருவிழா கொண்டாடப்பட்டது அத்திருவிழாவின் போது இருபதுக்கும் மேற்பட்ட தேர்களில் தெய்வ விக்கிரங்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன.

செல்வர்கள் ஆலயங்கள் கட்டி அவற்றின் நிருவாகச் செலவுக்கென நிலம், வீடு, தோட்டம் ஆகியவற்றை மானியமாகக் கொடுத்தனர்.

### இரண்டாம் சந்திரகுப்தர் பற்றிய மதிப்பீடு:

இவரது காலத்தில் அயல்நாட்டு வாணிபம் தழைத்தோங்கியது. கலை, சிற்பம், இலக்கியம் ஆகியவை இவரது காலத்தில் வளர்ச்சியுற்றது. நவரத்தினங்களில் ஒருவரான காளிதாசர் இவரது காலத்தில் வாழ்ந்தவர் எனலாம். விஷ்ணு பக்தராக இருந்த இரண்டாம் சந்திரகுப்தர் பிற சமயத்தவரிடம் சகிப்புத்தன்மையைக் கொண்டிருந்தார். இவர் விக்கிரமாதித்ததர், சிம்ம விக்கிரமர், சிம்மசந்திரர், பரம பாகவதர், மகாராஜாதி ராஜா, தேவகுப்தர், தேவராஜர் போன்ற பட்டப் பெயர்களைப் பெற்றிருந்தார். டாக்டர் வின்செண்ட் சுமித் 'இரண்டாம் சந்திரகுப்தரைப்-போல் சிறப்பாக எவரும் ஆட்சி செய்யவில்லை' எனப் புகழ்ந்து பேசுகிறார். இரண்டாம் சந்திரகுப்தருக்கு பிரபாவதி என்ற மகளும் இரண்டு மகன்களும் இருந்தனர். ஒரு மகன் குமாரகுப்தர் ஆவார். மற்றொருவர் கோவிந்த குப்தர் ஆவார். கி.பி. 412 ஆம் ஆண்டு

இரண்டாம் சந்திரகுப்தர் இறந்தார். அவரை அடுத்து அவருடைய மகனான முதலாம் குமாரகுப்தர் குப்த மன்னரானார்.

**முதலாம் குமாரகுப்தர்:**

இவர் இரண்டாம் சந்திரகுப்தரின் மகனாவார். இவர் கி.பி. 414 ஆம் ஆண்டு வரை சுமார் நாற்பது ஆண்டுகள் குப்த மன்னராயிருந்தார். இவர் வெளியிட்ட நாணயங்களும் கல்வெட்டுக்களும் ஏராளமாக நமக்குக் கிடைத்துள்ளன. ஆனால் அவை இவரது வரலாற்றை எழுதத் தேவையான நிகழ்ச்சிகளை நமக்குத் தெரிவிக்கவில்லை. ஆகவே தான் இவரது ஆட்சிக்காலம் வரலாற்றில் ஒரு இருண்டகாலமாகவே காட்சியளிக்கிறது. இவர் ஸ்ரீமகேந்திரர், அசுவமே மகேந்திரர், மகேந்திர கல்பர், ஸ்ரீமகேந்திர சிம்மன், மகேந்திர குமார், மகேந்திர ஆதித்தியர் எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டார். இவர் ஸ்ரீமகேந்திராதித்தியர் என்ற பட்டப்பெயரைச் சூட்டிக்கொண்டார். இவர் ஒரு அசுவமேதவேள்வி செய்ததாக கல்வெட்டுக்கள் கூறுகின்றன. எவரை எதிர்த்துப் போர் செய்து வெற்றி பெற்ற பின் இவர் அந்த அசுவமேத வேள்வியைச் செய்தார் என்பது தெரியவில்லை. வடக்கே இமயமலையும் தெற்கில் விந்திய மலையும், கிழக்கிலும் மேற்கிலும் கடல்கள் இவரது நாணயங்கள் ஆயிரக்கணக்கில் தக்காணத்திலும் கிடைப்பதால் இவரது ஆட்சி தக்காணத்தின் சில பகுதிகளிலும் பரவி இருந்திருக்க வேண்டும் என சில வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

**புஷ்யமித்திரர் படையெடுப்பு:**

முதலாம் குமார குப்தரின் கல்வெட்டுக்களில் போர்கள் பற்றிய குறிப்பே இல்லை. ஆகவே இவரது காலத்தில் அமைதி நிலவியது எனக்கருத இடமுண்டு. இவரது பேரரசின் மீது பகைவர் படையெடுத்து வந்து தாக்கினர் என பிதாரி (Bhitari) தூண் கல்வெட்டு கூறுகிறது. இக்கல்வெட்டு சற்று சிதைந்து இருப்பதால் படையெடுப்பாளர் எவரென்று உறுதியாகச் சொல்ல இயலவில்லை. இக்கல்வெட்டை ஆராய்ந்த டாக்டர் பிளீட் (Dr. Fleet) புஷ்யமித்திரர்கள் என்பவர்களே, குப்த பேரரசின் மீது படையெடுத்து வந்து தாக்கியவர்கள் எனச் சொல்லுகிறார். இந்த புஷ்யமித்திரர்கள் விந்தியமலைப் பகுதியில், நர்மதை ஆற்றுப் பள்ளத்தாக்கில் வசித்து வந்த ஒரு குலத்தினர் ஆவர். இந்த படையெடுப்புக்களை எதிர்த்து முதலாம் குமார குப்தர் போரைத் தொடங்கி அதில் வெற்றியும் பெற்றார். இவ்வெற்றியின் நினைவாக ஜுனாத்தில் (Junagadh) ஒரு கல்வெட்டு வெளியிட்டார். அக்கல்வெட்டில் குமார குப்தர் பகைவரைத் தான் வென்றதாகக் குறிப்பிடுகிறாரேயொழிய பகைவர் எவர் என்று குறிப்பிடப்படவில்லை. ஆகவே குமார குப்தரின் காலத்தில் குப்தப் பேரரசைத் தாக்கியவர்கள் எவர் என்பது உறுதியாகத் தெரியவில்லை.

**சுணர்கள் படையெடுப்பு: (Invasion of Huns)**

கூணர்கள் குப்தப் பேரரசைத் தாக்கியதாக பிதாரி கல்வெட்டு கூறுகிறது. இப்படையெடுப்பு சமயத்தில் குமாரகுப்தர் வயது முதிர்ந்து நோய் வாய்ப்பட்டிருந்தார். ஆகவே அவரால் கூணர்கள் குப்தப் படையைத் தோற்கடித்து குப்தப்பேரரசின் பல பகுதிகளைப் பிடித்துக் கொண்டனர்.

**மதிப்பீடு:**

குமாரகுப்தரின் காலம் வரலாற்று முக்கியத்துவம் இல்லாத காலம் என்ற தவறான கருத்து நிலவுகிறது இவரது காலத்தில் போர்கள் ஏதும் இன்றி குப்தப்பேரரசு அமைதியில் திளைத்தது. நாளந்தா பல்கலைக்கழகத்தை நிறுவிய சக்ராதித்தியர் என்ற மன்னரென யுவான் சுவாங் கூறுகிறார். மகேந்திராதித்தியர் என்ற பெயரின் மறுவடிவமே சக்ராதித்தியர் என்று கொண்டால் குமாரகுப்தரே நாளந்தா பல்கலைக்கழகத்தை நிறுவியவராவார். குமார குப்தரின் ஆட்சியின் இறுதி ஆண்டுகளில் மாளவத்தைக் குப்தப்பேரரசு இழந்தது எனச் சில வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர். ஏனெனில் வாகாடக மன்னர் நரேந்திர சேனர் மாளவம் தனது ஆட்சியில் இருந்தது என்று தனது கல்வெட்டில் கூறுகிறார். குமாரகுப்தர் சமயப் பொறையுடையவராய்த் திகழ்ந்தார். சமண சமத்தினருக்கும், புத்த சமயத்தினருக்கும் அந்தணர்களுக்கும்

அறநிலையங்கள் அவரால் ஏற்படுத்தப்பட்டிருந்தமை அவர் சமயச் சகிப்புத்தன்மை உடையவராய் இருந்தார் என்பதைக் காட்டுகிறது.

**ஸ்கந்த குப்தர்: (கி.பி.455 - 467)**

முதலாம் குமார குப்தரின் இறப்பிற்குப்பின் குப்தப் பேரரசில் வாரிசு உரிமைப் பூசல் ஏற்பட்டது. இதில் ஸ்கந்த குப்தர் வெற்றி பெற்று தாம் குப்த மன்னரானார். பாக்கிய தேவதை தன்னை குப்தமன்னராகத் தேர்ந்தெடுத்தென ஸ்கந்த குப்தர் தான் வெளியிட்ட ஜீனாத் கல்வெட்டில் குறிப்பிடுகிறார். இந்த நிகழ்ச்சியை நினைவு கூறும் வகையில் இவரது நாணயங்களில் பாக்கிய தேவதையாகிய இலட்சுமி இவருக்கு முடிசூட்டுவது போலப் பொறிக்கப்பட்டுள்ளது. இந்நாணயத்தில் ஸ்கந்த குப்தரின் உருவம் வில்லுடனும் அம்புடனும் தோற்றமளிக்கிறது. இலட்சுமி தனது இடக்கையில் தாமரையும் வலக்கையில் மன்னர் தலையில் அணியும் நாடாவும் ஏந்திக் கொண்டு நிற்பதாகக் காட்டப்பட்டுள்ளது. முதலாம் குமார குப்தருக்குப்பின் ஆட்சிக்கு வந்தவர் புருகுப்தரே என்றும் ஸ்கந்த குப்தர் இல்லையென்றும் சில ஆராய்ச்சி நிபுணர்கள் கருதுகின்றனர். ஆனால் வரலாற்று மூலங்களின் அடிப்படையில் பார்க்கின்ற போது அவர்களின் கூற்றில் உண்மையில்லை எனத் தெரிகிறது. ஸ்கந்த குப்தருடைய இறப்புக்குப் பின்னர் புரு குப்தர் மன்னரானார் என்று கொள்ளலாம் வரலாற்றுப் பேரறிஞர் டி ஆர் பண்டார்கர் (D.R. Bandarkar) ஸ்கந்த குப்தரும், புரு குப்தரும் ஒருவரே என்ற புரட்சிகரமான கருத்ததைச் சொல்கிறார். அது பொருத்தமாக இல்லை. இவரது கருத்தை பலர் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்.

முதலாம் குமார குப்தருக்குப்பின் குப்தப் பேரரசு இரண்டாகப் பிரிந்தது என்கின்றனர். மற்றொரு சாரார். அவர்களின் கூற்றுப்படி ஸ்கந்த குப்தர், இரண்டாம் குமார குப்தர், புருகுப்தர் ஆகியோர் மற்றொரு மரபின் மன்னர்கள். இக்கருத்தை நிலைநாட்ட நமக்கு போதிய வரலாற்று மூலங்கள் கிடைக்கவில்லை. ஆகவே நாம் முதலாம் குமார குப்தருக்குப் பின் ஸ்கந்த குப்தரும் அவருக்குப்பின் புரு குப்தரும் குப்த மன்னர்களானர்கள் என்ற முடிவுக்கு வருகிறோம்.

**கூணர்களை எதிர்த்துப் போர்:**

பிதாரி கல்வெட்டும், ஜீனாத் கல்வெட்டும் ஸ்கந்த குப்தர் தன் தந்தையின் ஆட்சிக் காலத்திலேயே கூணர்களை வென்ற செய்தியை நமக்குச் சொல்கின்றன. இவ்வெற்றிக்குப் பின் ஸ்கந்த குப்தர் விக்கிரமாதித்தியர் என்ற பெயரைச் சூட்டிக் கொண்டார். மேலும் இவர் குப்த மன்னராக இருந்தபோது மீண்டும் கூணர்கள் குப்தப் பேரரசைத் தாக்கினார். அத்தாக்குதலையும் இவர் முறியடித்து வெற்றிவாகை சூடினார். இவர் கூணர்களுக்கு எதிராகப் பெற்ற வெற்றியை சோம தேவர் எழுதிய 'கதாசரித் சாகரம்' என்ற கதைக் கொத்து விவரிக்கிறது.

இவர் கூணர்களை எதிர்த்துப் போர் புரிய ஏராளமான பணத்தைச் செலவிட்டமையால் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்தது. ஆகவேதான் இவர் தங்கத்தினால் ஆன கூடுதலான நாணயங்களை வெளியிடவில்லை. வெளியிட்ட சில தங்க நாணயங்களிலும் தரமான தங்கம் பயன்படுத்தப்படவில்லை.

**நிருவாகம்:**

ஸ்கந்த குப்தர் மன்னர் பொறுப்பேற்றுக் கொண்டதும் அனைத்து மாநிலங்களுக்கும் புதிய ஆளுநர்களை நியமித்தாரென அறிகிறோம். பர்ணதத்தர் என்பவர் சௌராட்டிர மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டடார். இவரது மகன் சக்ர பாலிதா ஜீனாத் நகரின் தலைமை அதிகாரியாக இருந்தார். அப்பொழுது பெருமழையின் காரணமாக சுதர்சன ஏரிக்கரை உடைந்து போயிற்று. ஆகவே பொருட்சேதமும் உயிர்சேதமும் ஏற்பட்டது. அந்த ஏரியின் கரைகளை சக்கர பாலிதா வலுவாகக் கட்டி முடித்தார் என கல்வெட்டு கூறுகிறது.

**மதிப்பீடு:**

ஸ்கந்தகுப்தர் கூணர்களைத் தோற்கடித்து விரட்டியது மிகப்பெரிய சாதனையாகும். ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் கூணர்களைத் தோற்கடித்து விரட்டிய ஒரே மன்னர் ஸ்கந்த குப்தர் என அவருக்கு புகழ்மாலை சூட்டுகிறார். வரலாற்றுப் பேராசிரியர் ஜெயஸ்வால்,

ஸ்கந்தகுப்தர் கிருஷ்ண பக்தராக இருந்தார். ஆனால் அவர் மக்களின் சமய விவகாரங்களில் தலையிடாமல் அவர்களுக்கு முழுவிடுதலை கொடுத்திருந்தார். அவர் சிறந்தவர் என்ற பொருளில் 'சிரேஷ்ட்' என்றும் தர்ம வத்சலன் (நீதியைப் போற்றுபவர்) என்றும் அழைக்கப்பட்டார்.

**குப்த பேரரசின் வீழ்ச்சி:**

ஸ்கந்தகுப்தருக்குப் பின் குப்தப் பேரரசு வீழ்ச்சி அடையத் தொடங்கியது. அவ்வீழ்ச்சிக் 'காலத்தில் குப்தப் பேரரசின் நிலையை அறிந்து கொள்ள நமக்கு வரலாற்று மூலங்கள் கூடுதலாக கிடைக்கவில்லை. கூணர்கள் குப்தப் பேரரசை அடிக்கடி தாக்கி அதன் அமைதிக்கு பங்கம் விளைவித்தனர். அவர்கள் வடமேற்கு இந்தியப் பகுதிகளை குப்தர்களிடமிருந்து கைப்பற்றிக் கொண்டனர். குப்தப் பேரரசில் வாரிசுரிமைப் போர்களும் ஏற்பட்டன.

ஸ்கந்தகுப்தருக்குப் பின் அவருடைய தம்பி புருகுப்தர் குப்த மன்னரானார். அவர் ஆறு ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவருக்குப் பின் குப்த மன்னரானவர் எவர் என்பது குழப்பமாக உள்ளது. இரண்டாம் குமாரகுப்தர் என்று ஒரு மன்னர் ஆட்சி செய்திருக்கிறார். இவர் ஸ்கந்தகுப்தருடைய மகனாகவோ, புருகுப்தருடைய மகனாகவோ இருக்கலாம்.

**புதகுப்தர்:**

இவர் புருகுப்தரின் மகனாவார். இவருடைய தாயார் பட்டத்து அரசியான சந்திரதேவி என்பர். இவர் 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சி செய்தார். இவரது காலத்தில் குப்தப் பேரரசு மாளவத்திலிருந்து வங்கம் வரை பரந்து விரிந்து காணப்பட்டது. இவரது சிற்றரசர்கள், அலுவலர்கள் ஆகியோர் இவருடைய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு தனியாக புதிய அரசுகள் நியமிக்க முயற்சிகள் மேற்கொண்டு வெற்றியும் பெற்றனர்.

குப்தர்களின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டு கத்தியவார் தீபகற்பத்தில் ஆட்சி நடத்தி வந்த மைத்ரர்கள் (Maitrakas) தலைவர் பட்டார்கர் (Bhatarkar) தன்னை விடுதலை பெற்ற மன்னர் என அறிவித்துக் கொண்டார்.

பந்தல்கண்டிலும் (Bundelkhand) இதே நிலைமை ஏற்பட்டது. அங்கு குப்தப் பேரரசுக்கு கட்டுபட்டு ஆட்சி நடததி வந்த ஹஸ்தின் (கி.பி. 475 - 517) புத குப்தரின் பெயரைக் குறிப்பிடாது தன் பெயரிலேயே பல கல்வெட்டுகளை வெளியிட்டார். இவ்வாறு குப்தப் பேரரசின் பல்வேறு பகுதிகள் விடுதலைபெற்ற சிற்றரசுகளாக மாறின.

புத குப்தருக்குப் பின் அவருடைய மகனான நரசிம்ம குப்தரும், நரசிம்மரின் மகனான மூன்றாம் குமாரகுப்தரும், மூன்றாம் குமாரகுப்தரின் மகனான விஷ்ணுகுப்தரும் கி.பி. 500-க்கும் 570-க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆட்சி நடத்தினர். இதே காலத்தில் வைன்ய குப்தர் (Vainya Gupta) கிழக்கு வங்கத்தில் மன்னராய் இருந்தார். பானுகுப்தர் ஏரானின் மன்னராய் இருந்தார். இவர் கூணர்களை எதிர்த்துப் போர் செய்து வெற்றி பெற்றார் எனக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

நரசிம்மகுப்தர் தோரமானரின் மகனான மிகிர குலரைத் தோற்கடித்து விரட்டினார். இந்த நரசிம்மகுப்தர் பாலாதித்தியர் என்ற பட்டப்பெயரைப் பெற்றுத் திகழ்ந்தார். இவர் மௌகாரிகளின் படை உதவியோடு மிகிர குலரை தோற்கடித்தாரென யுவான் சுவாங் தனது பயணக் குறிப்பில் எழுதி வைத்திருக்கிறார். மேலும் யுவான்சுவாங் இந்த பாலாதித்தியர் பௌத்த சமயத்தை ஆதரித்தாகவும் நாளந்தாவில் சங்கராமா என்ற பௌத்த மடலாயத்தை ஏற்படுத்தியதாகவும் கூறுகிறார். குப்த மன்னர்களில் இறுதி முக்கிய மன்னர் நரசிங்ககுப்தரே.

கி.பி. 500-க்கும் 570-க்கும் இடைப்பட்ட காலத்தில ஆட்சி செய்த குப்த மன்னர்கள் கலப்படம் கூடுதலாக கொண்ட தங்கத்தில் நாணயங்கள் வெளியிட்டனர். இதிலிருந்து நாம் அக்காலத்தில் பொருளாதாரம் வீழ்ச்சியடைத் தொடங்கியது, என்பதை அறிந்து கொள்கிறோம். பொருளாதார நிலை சீர் கெட்ட குப்தப் பேரரசு பின்னர் வீழ்ச்சியடைந்தது.

கி.பி. 550-ஆம் ஆண்டுவாக்கில் குப்தர்களுக்கு அடங்கி இருந்த மகதம் விடுதலை பெற்றது. அதைத் தொடர்ந்து கலிங்கமும் விடுதலை பெற்ற நாடாயிற்று. இதனால் குப்தப் பேரரசு சீர் குலைந்தது. குப்த மன்னர்கள் ஒவ்வொருவரும் பலதாரமணம் செய்து கொண்டிருந்தனர். ஆகவே பல இளவரசர்கள் சம காலத்தில் இருந்தனர். இவர்களுக்கிடையே ஒற்றுமையில்லை ஆகவே வாரிசுரிமைப் போர்கள் பல ஏற்பட்டன. இதனால் பேரரசு வலிமை இழந்து வீழ்ச்சியடைந்தது.

ஹூணர்களின் படையெடுப்பும் குப்தர்களின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்தது. ஆனால் இது மட்டும் காரணமல்ல. அனைத்துப் பேரரசுகளும் அழிந்ததற்கான பொதுவான காரணங்கள் பலவும் செயல்பட்டுக் கொண்டிருந்தன என்பதை உணர்த்துகின்றன.

**குப்தர்களின் நிருவாகம், சமயம், பொருளாதார நிலை, சமுதாய வாழ்வு, பண்பாடு:**

குப்தர்கள் சுமார் முன்னூற்று ஐம்பது ஆண்டுகள் ஆட்சி செய்தனர். அவர்களின் ஆட்சிக் காலத்தில் நிர்வாகம், சமுதாயம், பொருளாதாரம், சமயம், பண்பாடு ஆகியவை எவ்வாறு இருந்தது என்பதை இவண் காண்போம்.

***சமய சார்பற்ற அரசு:***

குப்த மன்னர்கள் அனைத்துச் சமயங்களையும் சமமமாக நடத்தினர். அவர்கள் சமயப் பொறையுடையவர்களாக இருந்தார்கள். அவர்களின் அரசை சமய சார்பற்ற அரசு (Secular state) எனலாம்.

**கடவுளின் அவதாரம் மன்னர்:**

மன்னரை கடவுளின் அவதாரம் என மக்கள் கருதினர், குப்த மன்னர்கள் பரமேஸ்வரன், மகாராஜாதிராஜா போன்ற பட்டங்களைப் பெற்றிருந்தனர். பரமேஸ்வரன் என்ற சொல்லிற்கு 'தன்னிகரற்ற தலைவன்' என்பது பொருளாகும். மகாராஜாதிராஜா என்றால் மன்னர்களில் 'தலை சிறந்தவன்' என்பது பொருளாகும்.

மன்னரை உலகில் வாழும் இறைவனென அலகாபாத் ஆணை குறிப்பிடுகிறது. கயா செப்பேடுகள் சமுத்திர குப்தரை குபேரன், இந்திரன், வருணன் ஆகிய கடவுளர்களின் மொத்த உருவம் என்கிறது. இதிலிருந்து மன்னர் அக்காலத்தில் கடவுளுக்குச் சமமமாக மதிக்கப்பட்டார் என அறிகிறோம்.

**வாரிசுரிமை:**

மன்னரின் மூத்த மகனே அரசுரிமையைப் பெறுவது என்கின்ற நியதியே சாதாரணமாக அனைத்துக் காலத்திலும் இந்தியாவில் பின்பற்றப்பட்டது. ஆனால் அந்த முறை குப்தர்களிடையே பின்பற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. குப்த மன்னர் தான் இறக்கும் தருவாயில் தன் மைந்தர்களில் திறமையானவரை தனது வாரிசாக நியமித்தார். இவ்வாறு நியமித்ததால் சில நேரங்களில் மன்னரின் இரண்டாவது அல்லது மூன்றாவது மகன் கூடி மன்னராக நியமிக்கப்பட்டதாக நாம் அறிகிறோம். அரசுகுமாரர்களில் திறமையானவரை மன்னராக ஆக்கிய அவர்களின் அரசியல் அறிவு போற்றுதற்குரிய தன்றோ!

***அரசு அலுவலர்கள்:***

அரசு அலுவலர்கள் மகா சேனாதிபதி, மகா சர்வ தண்டநாயகா என்ற பட்டங்களைப் பெற்றிருந்தனர். அவர்கள் மரபுப்பட்டியல்படி அலுவலர்களாக நியமிக்கப்பட்டனர். தக்சன் என்ற அமைச்சர் ஓர் அமைச்சர் குடும்பத்தைச் சார்ந்தவர் எனக் கூறப்படுவதிலிருந்து அரசு அலுவலர்களும் வாரிசுரிமைப்படி நியமிக்கப்பட்டனர் என்பதை அறிந்து கொள்ளுகிறோம்.

***சிற்றரசுகள்:***

போரில் தோற்ற மன்னர்கள் தங்கள் அரசுகளை குப்தப் பேரரசர்களிடம் ஒப்படைத்து விடும்படி கட்டாயப்படுத்தப்படவில்லை. அவர்கள் குப்தப் பேரரசுக்குத் திறை செலுத்திக் கொண்டு சுயேச்சை மன்னர்களாக இருக்க அனுமதிக்கப்பட்டனர். இவர்களின் திறைப்பணத்தையே நம்பி குப்த மன்னர் இருந்தமையால் அவரது பொருாதார நிலை மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்ததென பாகியான் குறிப்பிடுகிறார்.

**மாநில ஆளுநர்கள்:**

குப்தப் பேரரசின் ஆளுநர்கள் உபாரிக மகாராஜா என்ற பட்டத்தைப் பெற்றிருந்தனர். அவர்கள் 'விஷயபதி' என அழைக்கப்பட்ட மாவட்ட அலுவலர்களை நியமிக்கும் அதிகாரம் பெற்றிருந்தனர். ஒவ்வொரு விஷயபதிக்கும் நிர்வாகத்தில் ஆலோசனை கூற ஒரு ஆலோசனைக்குழு இருந்தது. அக்குழுவில் நகரத்தின் பெருஞ் செல்வர், தலைமை வணிகர், தலைமை கைவினைஞர், தலைமை எழுத்தர் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர்.

**அமைச்சரவை:**

மன்னருக்கு நிருவாகத்தில் உதவி செய்ய ஒரு அமைச்சரவை இருந்தது. அதில் இளவரசர்கள், அரசின் உயர் அலுவலர்கள், சிற்றரசர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர். இந்த அமைச்சரவையின் ஒப்புதலோடு தான் மன்னர் தனது வாரிசை நியமித்தார். இந்த அவை அயல் நாட்டுக் கொள்கையை வகுத்தது நாட்டின் நிதி நிர்வாகத்தையும் நீதித்துறையையும் கூட இந்த அவை கவனித்துக் கொண்டது.

**தண்டனைகள்:**

குற்றவாளிகள் யானைக் காலால் இடரப்பட்டு கொலை செய்யப்பட்டனர் என்றும் அரசத்துரோகம் செய்தவர்கள் கண்கள் குருடாக்கப்பட்டன என்றும் காளிதாசர், விசாகதத்தர் ஆகியோர் குறிப்பிடுகின்றனர். ஆனால் பாஹியானோ வேறு விதமாகச் சொல்கிறார். அவர் தமது நூலில் குப்தப் பேரரசில் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படவில்லையென்றும் அபராதமே விதிக்கப்பட்டதென்றும் கூறுகிறார். பெரிய குற்றங்களுக்கு கடுமையான தண்டனைகளும் சிறிய குற்றங்களுக்கு அபராதமும் விதிக்கப்பட்டதாக முடிவுக்கு வருவது சாலப் பொருந்தும்.

**நகர ஆட்சியும் கிராம ஆட்சியும்:**

நகர ஆட்சியின் தலைவர் 'நகர ரட்சகர்' என அழைக்கப்பட்டார். கிராமத்தின் தலைவர் கிராமிகா என அழைக்கப்பட்டார். இவர்கள் எப்படி பதவியைப் பெற்றார்கள் என்பது தெரியவில்லை. இவர்கள் வாரிசுரிமைப்படியோ, பொது மக்களின் கருத்துப்படியோ அல்லது மன்னரின் விருப்பப்படியோ நியமிக்கப்பட்டிருக்கலாம். கிராமத்தில் கணக்கர், எழுத்தர் ஆகியோர் இருந்தனர். இவர்களின் உதவியோடு கிராமத் தலைவர் அரசுக்குச் சேர வேண்டிய வரிகளை வசூலித்து அனுப்பியுள்ளனர்.

**சமுதாய நிலை:**

குப்தர் காலச் சமுதாயம் நான்கு வருணங்களை (பிரிவுகளைப்) பெற்றிருந்தது. அந்த வருணங்களாவன. 1) அந்தணர் 2) சத்திரியர் 3) வைசியர் 4) சூத்திரர். ஒரு வருணத்தார் மற்றொரு வருணத்தாரின் தொழில்களைச் செய்தனர். ஆனால் ஒரு வருணத்தார் மற்றொரு வருணத்தாருடன் திருமண உறவு கொள்ளவில்லை. சூத்திரர்கள் சமூகத்தில் இழிந்தவர்களாகக் கருதப்பட்டனர் என பாஹியான் கூறுகிறார். அவர்களில் ஒரு பிரிவினர் சண்டாளர்கள் என அழைக்கப்பட்டனர். அவர்களைப் பார்ப்பதும், தொடுவதும் பாவம் என மற்ற வருணத்தார் கருதினர். தீண்டாமை குப்தர்கள் காலத்திலும் இருந்தது என்பதை அறியும் போது மனம் வேதனை அடைகிறதல்லவா?

**திருமணம்:**

திருமணங்கள் பெரும்பாலும் பெற்றோர்களினால் நிச்சயிக்கப்பட்டன. ஆண்களும் பெண்களும் பருவம் அடையும் முன்பே திருமணம் செய்து கொள்ளும் பால்யவிவாக முறை பின்பற்றப்பட்டது. காந்தர்வணம் எனப்படும் காதல் திருமணம் பரவலாகக் காணப்படவில்லை-யாயினும் முதலிரண்டு வருணத்தார் இம்முறையை பின்பற்றினர். ஒருவனுக்கு ஒருத்தி என்ற விதிமுறை கடுமையாகப் பின்பற்றப்படவில்லை. ஒருவன் பல பெண்களை மணந்து கொண்டதாக செய்திகள் கிடைக்கின்றன.

**பெண்கள்:**

பெண்கள் சமுதாயத்தில் முக்கிய இடம் வகித்தனர். அவர்கள் கல்வி, கேள்விகளில் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தனர். அவர்களுக்கு நுண் கலைகள் கற்பிக்கப்பட்டன. கணவன் இறந்ததும்

மனைவி உடன்கட்டை ஏறும் சதி என்னும் பழக்கம் இக்காலத்தில் வழக்கத்தில் இருந்தது. ஆனால் இவ்வழக்கம் பரவலாகக் காணப்படவில்லை. பெரும்பாலும் விதவையான பெண்கள் விரதங்கள் மேற்கொண்டு அடக்கமான வாழ்க்கை வாழ்ந்து வந்தனர்.

இக்காலத்தில் தாசிகள் என்று சிலர் வாழ்ந்தனர். இவர்கள் ஆடவரைத் தங்கள் அழகாலும், இனிமையான பேச்சினாலும் கவர்ந்து அவர்களின் செல்வத்தைப் பெற்று வாழ்ந்து வந்தனர்.

தேவதாசிகள் என்ற மற்றொரு வகைப் பெண்கள் ஆலயங்களில் இறைப்பணி செய்ய நியமிக்கப்பட்டனர். காளிதாசர் தனது நூலில் தேவதாசிகள் பற்றிக் குறிப்பிடுகிறார்.

***வாழ்க்கை முறை:***

இக்கால மக்கள் மாமிச உணவை மிக விரும்பி உண்டனர். மது வகைகள் பலவற்றை அவர்கள் அருந்தினர். பெண்கள் கூட மது அருந்தியதாக நாம் அறிகிறோம். மக்கள் சகுனங்களில் நம்பிக்கையுடைவர்களாக இருந்தனர். அரச குடும்பத்தினரும் உயர் குடியினரும் ஆடம்பரமான உடைகளையும்,. விலையுயர்ந்த ஆபரணங்களையும் அணிந்தனர். ஆடைகள் பஞ்சு, கம்பளி, பட்டு ஆகியவற்றால் தயாரிக்கப்பட்டன. வண்ண உடைகளை இளைஞர்கள் பயன்டுத்தினர். வயதானவர்கள் வெள்ளை நிற உடைகளை மட்டுமே அணிந்தனர். ஆண்களும், பெண்களும் பலவகை வாசனைத் திரவியங்களையும் அழகு சாதனங்களையும் பயன்படுத்தினர்.

***பொருளாதார நிலை:***

***விவசாயம்:***

இக்காலத்தில் மக்களின் முக்கியத் தொழில் விவசாயமே, நெல், கோதுமை, பார்லி, பட்டாணி, எண்ணெய் வித்துக்கள் ஆகியவை பயிரிடப்பட்டன. கரும்பு பயிரிடப்பட்டு சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது.

***தொழில்:***

நெசவுத் தொழிலே அவர்களின் முக்கியத் தொழிலாக இருந்தது. மதுரா நெசவுத் தொழிலுக்கு பெயர் பெற்ற இடமாக இருந்தது. மெல்லிய துணிகளும் முரட்டுத் துணிகளும் தயாரிக்கப்பட்டன. தங்கம், வெள்ளி ஆகியவை தேவையான அளவு உள் நாட்டிலிருந்தே கிடைத்தன. செம்பு, ஈயம் ஆகிய உலோகங்கள் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. பழைய டெல்லியில் உள்ள மெஹ்ராலி இரும்புத்தூண் குப்தர்கள் கால உலோகத் தொழில் கலைஞர்களின் திறமைக்கு சான்றாக இன்று விளங்குகிறது.

***வியாபாரம்:***

குப்தர்கள் காலத்தில் சீனா, இந்தோனேசியா, இலங்கை ஆகிய நாடுகளோடு கடல் வழியாக வியாபாரம் நடை பெற்றது. குப்தப் பேராசிலிருந்து சந்தனம், குங்குமப்பூ, ஏலக்காய், மிளகு, இரும்பு, வைரம், மெல்லியதுணி ஆகியவை ஏற்றுமதி செய்யப்பட்டன. அரேபியா, பாரசீகம், ஆப்கானிஸ்தானம் ஆகிய நாடுகளிலிருந்து குப்தர்கள் குதிரைகளை இறக்குமதி செய்து கொண்டனர். சீனாவிலிருந்து பட்டு இறக்குமதி செய்யப்பட்டது. எத்தியோப்பியாவிலிருந்து தந்தமும் மேற்கு மத்திய தரைக்கடல் நாடுகளிலிருந்து செம்பும் இறக்குமதி செய்யப்பட்டன்.

***குப்தர்களின் காலம் பொற்காலம்:***

எந்தக்காலத்தில் மக்களின் வாழ்கையில் மகிழ்ச்சி நிலவுகிறதோ, கலைகள் சிறப்பாக வளர்ச்சி பெற்றிருக்கிறதோ அந்தக்காலம் பொற்காலம் என அழைக்கப்படும். பெரிக்கிளிஸின் காலம் ஏதன்ஸின் பொற்காலம். அகஸ்ட்டஸீன் காலம் உரோமின் பொற்காலம். அதுபோல குப்தர்களின் காலம் இந்திய வரலாற்றின் பொற்காலமாகும். அவர்களின் காலத்தில் வட இந்தியாவில் ஒற்றுமை நிலவியது. நிலையான அரசு இருந்தது அயல் நாடுகளோடு நல்ல வாணிப உறவு நிலவியது. கல்வி கற்பதிலும், இலக்கியங்கள் உருவாக்குவதிலும், அறிவியல் துறை ஆய்வுகளை மேற்கொள்வதில் ஒரு வேகம் இருந்தது. நல்லாட்சி நிலவியது நாட்டின் அமைதி குடி கொண்டிருந்தது. ஆகவே நாட்டில் கலை, சிற்பம், இலக்கியம் ஆகியவை வளர்ச்சியுற்றது.

***சமய சகிப்புத்தன்மை:***

குப்த மன்னர்கள் சமய சகிப்புத்தன்மை உடையவர்களாக இருந்தனர். மக்கள் தாங்கள் விரும்பிய சமயத்தைப் பின்பற்ற உரிமை பெற்றிருந்தனர். எந்த சமயத்திற்கும் தடைவிதிக்க

படவில்லை. குப்த மன்னர்கள் இந்த சமயத்தைப் பின்பற்றினாலும் ' மற்ற சமயங்களை வெறுக்கவில்லை.

**இந்து *சமயம்:***

குப்தர்கள் காலத்தில் இந்து சமயம் புத்துயிர் பெற்றது. ஆகவே தான் இக்காலத்தை இந்துமத மறுமலர்ச்சிக்காலமென பேராசிரியர் த.ஓ.முகர்ஜி கூறுகிறார். வெகு காலமாகச் செய்யப்படாமலிருந்த அசுவமேத வேள்வியை சமுத்திரகுப்தர் தம் காலத்தில் செய்து அவ்வேள்விக்கு புத்துயிர் அளித்தார். அவரைத் தொடந்து மற்ற குப்த மன்னர்களும் அசுவமேதயாகம் செய்தனர் குப்த மன்னர்கள் வைணவ மதத்தைப் பின்பற்றினர். விஷ்ணுவின் வாகனமாகிய கருடனை அவர்கள் தங்கள் அரசின் முத்திரையாகக் கொண்டனர். விஷ்ணுவை அவர்கள் சக்கரபாணி, கோவிந்தன், நாராயணன், ஜனார்த்தனன் மாதவன், மதுசூதனன், வாசுதேவன் என்ற பல பெயர்களில் அழைத்து வழிபட்டனர். விஷ்ணுவுக்கு பல கோவில்களைக் கட்டினர்.

சிவ வழிபாடும் அவர்கள் காலத்தில் சிறப்புப் பெற்றிருந்தது. சிவனை மகாதேவன், மகேஷ்வரன், பசுபதி என அழைத்து லிங்க வடிவத்தில் வழிபட்டனர் சக்தியை அவர்கள் பவானி, பகவதி, தேவி, கௌரி, துர்க்கை என்று அழைத்தனர். சக்திக்கு பல கோயில்கள் கட்டி வழிபட்டனர்.

**புத்த *சமயம்:***

குப்த பேரரசர்கள் அரசுப் பணத்திலிருந்து பௌத்த விகாரங்களுக்கு நன்கொடை அளித்தனர். இருந்த பொதிலும் பௌத்த சமயம் வீழ்ச்சியடையத் தொடங்கியது. ஏனெனில் பௌத்த சமயத்தில் பிரிவுகள் தோன்றின. பௌத்தத் துறவிகள் முறையற்ற வாழ்க்கை நடத்தினர். ஆகவேதான் அச்சமயம் தனது செல்வாக்கை இழக்கத் தொடங்கியது.

***சமணசமயம்:***

சமண சமயம் குப்தர்கள் காலத்தில் தேக்க நிலையில் இருந்தது. ஆனால் அது அழிந்துவிடவில்லை. அதன் கொள்கைகள் பின்பற்ற மிகக் கடினமாக இருந்தமையால் அதனை மக்கள் பின்பற்ற முன்வரவில்லை.

***மக்கள் தொண்டே மகேசன் தொண்டு:***

ஆண்டவனுக்கு ' செய்கின்ற தொண்டினை விட அவரால் படைக்கப்பட்ட மக்களுக்குச் செய்யும் தொண்டே சிறந்ததென குப்தர்கள் காலத்தில் கருதப்பட்டது. ஆகவே தான் மக்கள் நலன் கருதி ஓய்வு விடுதிகள் அமைக்கப்பட்டன. அங்கு இலவசமாக ஏழைகளுக்கு உணவும், உடையும் வழங்கப்பட்டன.

***கல்வி முறை:***

குப்தர்களின் காலம் சமஸ்கிருத இலக்கியத்தின் பொற்காலமெனலாம். ஆசிரியர்கள் இக்காலத்தில் சுவடிகள் உதவியின்றி பாடம் கற்பித்தனர் என்றும் மாணவர்கள் பாடங்களைக் கவனமாகக் கேட்டு அவற்றை உடனுக்குடன் மனப்பாடம் செய்து கொண்டனர் என்றும் பாஹியான் தமது குறிப்பில் எழுதியிருக்கிறார். ஆசிரியர்கள் ஆச்சாரியர்கள் என்றும் உபாத்தியாயர் என்றும் அழைக்கப்கட்டனர். மாணவர்கள் 'சிஷ்யர்கள்' என்றும் 'பிரமச்சாரிகள்' என்றும் அழைக்கப்பட்டனர். தேர்ச்சி பெற்ற அந்தண ஆசிரியர்கள் பட்டர்கள் எனப்பட்டம் பெற்றனர். நான்கு வேதங்கள், ஆறு வேதாகமங்கள், புராணங்கள், ஸ்மிருதிகள், இலக்கணம் சமஸ்கிருதம், பிராகிருதம், தத்துவம், கணிதம், மருத்துவம், வானநூல் ஆகிய பாடங்கள் மாணவர்கட்குக் கற்பிக்கப்பட்டன. முதலாம் குமாரகுப்தர் நாளந்தா பல்கலைக் கழகத்தை நிறுவியது கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் துணை புரிந்தது. மேலும் மதுரா, காசி, பாடலிபுத்திரம், ஆகிய இடங்களிலும் கல்வி நிலையங்கள் இருந்தன.

**இலக்*கியம்:***

இந்திய ஷேக்ஸ்பியர் எனப் பெருமையாக அழைக்கப்படும் காளிதாசர் இக்காலத்தில் வா ' ந்தார். அவர் காளியின் அருளினால் சிறந்த கல்விமானாக ஆனார் என்பர். அவர் எழுதிய சாகுந்தலம் நாடகம் உலகப்புகழ் பெற்றது என்பது யாவரும் அறிந்ததே. உலகின் மிகச் சிறந்த நூறு புத்தகங்கள் பட்டியலில் அதுவும் இடம் பெற்றிருக்கிறது. அவரின் மற்றைய நூல்களாவன:

ரிது சம்ஹாரம், மாளவிகாக்னி மித்திரம், குமார சம்பவம், மேகதூதம், இரகுவம்சம், விக்ரம ஊர்வசியம் சூத்ரகிரி என்பவர் இக்காலத்தில் மிருச்ச கடிகம் என்ற சமஸ்கிருத நாடகத்தை எழுதினார். இந்நாடகத்தின் கதாநாயகன் சாருதத்தன் என்ற ஒரு அந்தணர் ஆவார். அவர் வசந்தசேனா என்ற பெண்ணை காதலித்து மணம் செய்து கொண்டார். அவர் ஏழைகளுக்கு உதவி செய்து தன் பொருளனைத்தும் இழந்து வறியவரானார் அந்த வறுமை நிலையிலும் அவரும் அவரது மனைவி வசந்தசேனாவும் இனிமையான இல்லறம் நடத்தியாக இந்நாடகக் கதை சொல்கிறது. விசாகதத்தர் எழுதிய முத்திராராட்சசம், தேவி சந்திர குப்தம் ஆகிய நாடகங்கள் வரலாறு எழுதப் பயன்படும் மூலங்களாகத் திகழ்கின்றன. முதல் நாடகம் நந்தமரபு வீழ்ச்சி பற்றியும், மௌரிய பேரரசு எழுச்சி பற்றியும், சொல்கிறது. இரண்டாவது நாடகம் குப்த மன்னர் இரண்டாம் சந்திரகுப்தர் ஆட்சிக்கு வந்த சூழ்நிலையைப் பற்றிப்பேசுகிறது. பவபூதி பாரவி, மேகா ஆகிய நாடக ஆசிரியர்கள் குப்தர்கள் காலத்தில் வாழ்ந்தனர். தண்டி தனது காவிய தரிதனம் என்ற நூலில் பத்து இளவரசர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சொல்கிறார். சுபாந்து தனது வாசவதத்தம் என்ற நூலில் காதலனும் காதலியும் கனவிலேயே ஒருவரையொருவர் சந்தித்து காதலிப்பதாகவும் பின்னர் ஒரு கிளியின் உதவியால் இருவரும் சந்தித்து மாயக் குதிரையில் ஏறிச்சென்று திருமணம் செய்து கொள்வதாக கதையைக் கொண்டு செல்கிறார். வாமனர், சந்திரர் ஆகிய இலக்கணநூல் ஆசிரியர்களும் அமரா என்ற அகராதி தயாரித்த ஆசிரியரும் இக்காலத்தில் வாழ்ந்த மிகச் சிறந்த அறிஞர்களாவர். ஆரியப்பட்டர் வராக மிகிரர், பிரம்ம குப்தர் ஆகிய வான நூல் வல்லுநர்களும் வாழ்ந்தது குப்தர்கள் காலத்தில் தான். ஆரியப்பட்டர் தனது ஆரியபட்டியம் என்ற கணித நூலில் பூச்சியம் முதல் ஒன்பது வரை உள்ள எண்களின் மதிப்பை விவரிக்கிறார். வராக மிகிரர் பஞ்ச சித்தாந்தம் என்ற நூலில் ஐந்து வானவியல் பிரிவுகள் பற்றிச் சொல்கிறார். அவருடைய மற்றொரு புத்தகமாகயி பிரிகித சம்கிதம் 106 அத்தியாயங்களைக் கொண்டிருக்கிறது. இதை ஒரு கலைக் களஞ்சியம் எனலாம். இதில் வானவியல், சோதிடம், புவியியல் மிருகங்கள், பறவைகள் பெண்கள், திருமணமுறை, சகுனங்கள் ஆகிய பலவற்றைப் பற்றி ருசிகரமான தகவல்கள் அடங்கியுள்ளன. குப்த கவிதை இயற்றும் ஆற்றல் பெற்றிருந்தமையால் 'கவிராஜா' என அழைக்கப்பட்டார். அவர் வேதங்களுக்கும் சாத்திரங்களுக்கும் விளக்கம் சொல்லும் அளவுக்கு இலக்கிய அறிவு பெற்றிருந்ததாக கல்வெட்டுகள் கூறுகின்றன. இரண்டாம் சந்திரகுப்தர் நவரத்தினம் எனப்படும் ஒன்பது தேர்ச்சி பெற்ற புலவர் குழுவில் ஒருவராக இருந்தார் எனச் சொல்லப்படுகிறது. ஸ்கந்த குப்தர் இசைத்துறையில் ஒரு பேரறிஞராக விளங்கினார்.

குப்தர்கள் காலத்தில்தான் புராணங்கள், தர்ம சாத்திரங்கள், மகாபாரதம் ஆகியவை ஒழுங்குபடுத்தப்பட்டு முறையாக வெளியிடப்பட்டன. விஷ்ணு சர்மா பஞ்ச தந்திரக் கதைகளை இராஜகுமாரர்களுக்கு அரசியல் அறிவு போதிப்பதற்காக எழுதினார். அக்கதைகள் குப்தர் காலத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டு முறையான வடிவம் பெற்றன.

**உலோகக்கலை:**

டெல்லயில் உள்ள இரும்புத்தூண் வெயிலில் காய்ந்து மழையில் நனைந்த போதும் துரு ஏறாது புதுப்பொலிவுடன் காலத்தை வென்று காட்சியளிக்கிறது. இத்தூண் நமக்கு அக்கால உலோகத் தொழில் நேர்த்தியையும் சிறப்பையும் எடுத்துக் காட்டுகிறது.

**மருத்துவம்:**

அம்மைத் தடுப்பு ஊசி குத்திக் கொள்ளும் முறை அவர்களுக்குத் தெரிந்திருந்தது. விலங்குகளுக்கு ஏற்பட்ட நோய்களைக் கூட அவர்கள் கண்டறிந்து அவற்றிற்கு மருந்துகள் கொடுத்து குணப்படுத்தினர். முறிந்த எலும்புகளை ஒட்டி வளரச் செய்யும் முறையும், அறுவைச் சிகிச்சை முறையும் அவர்களுக்கு தெரிந்திருந்தது. அவர்கள் அறுவைச் சிகிக்சைக்கு 127 கருவிகளைப் பயன் படுத்தியதாக ராய் (Roy) தனது இந்துக்களின் வேதியல் வரலாறு, (History of Hindu Chemistry) என்ற நூலில் கூறுகிறார்.

**வானநூல்:**

உலகம் உருண்டையானது. அது தன்னுடைய அச்சில் சுற்றி வருகிறது. ஆகவே தான் இரவு பகல் ஏற்படுகின்றன என்ற உண்மையை உலகுக்குக் காட்டிய ஆரியப்பட்டர் வாழ்ந்தது

குப்தர்கள் காலத்தில்தான், புவியின் நிழல்படுவதாலேயே கிரகணங்கள் உண்டாகின்றன என்ற உண்மையையும் இவரே உலகுக்கு உணர்த்தினார். வராக மிகிரர் சோதிட நூல் வித்தகராகவும் திகழ்ந்தார். இவர் தான் எழுதிய பிருஹத் சமிதை என்ற சோதிட நூலில் விண்மீன்கள், கோள்கள் பற்றி விரிவாகச் சொல்கிறார்.

### கட்டடக்கலை:

குப்தர் காலக் கட்டிடடங்களில் பெரும்பாலானவற்றை கூணர்களும் முசுலீம்களும் அழித்துவிட்டனர். எஞ்சிய கட்டிடங்கள் அக்காலக் கட்டிடகலைச் சிறப்பை நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது. திகாவாவிலுள்ள விஷ்ணு ஆலயம், புத்தகயாவில் உள்ள புத்த விகாரம் ஆகியவை குப்தர்களின் கட்டிடக் கலைக் சிறப்பை நமக்கு உணர்த்துகின்றன.

அஜந்தா, எல்லோரா ஆகிய இடங்களில் மலையைக் குடைந்து குகைகள் அமைக்கப்பட்டன. ஒவ்வொரு குகையிலும் அழகு மிக்க தூண்களை நாம் காண்கிறோம். அஜந்தாவில் 16-வது குகையில் காணப்படும் இறக்கும் இளவரசி ஓவியமும், 17-வத குகையில் காணப்படும் புத்தரின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் ஓவியங்களும் அவர்களின் ஓவியக்கலை வளர்ச்சியை நமக்குக் காட்டுகின்றன. ஆண்கள் காதில் வளையங்கள் அணிந்திருந்தனர் என்பதும் பெண்கள் இக்காலத்தில் உதட்டுக் சாயம் பூசிக் கொண்டனர் என்பதும் இந்த ஓவியங்களிலிருந்து தெரிய வருகிறது.

### நாணயங்கள்:

சமுத்திரகுப்தர் எட்டு வகையான தங்க நாணயங்களை வெளிட்டார் அவையாவன: நிற்கும் சமுத்திரகுப்தர் நாணயம், வில்வீரர் நாணயம், போர்க்கோடாரி நாணயம் கச்சா என்ற பெயர் பொறித்த நாணயம், புலிவேட்டை நாணயம், முதலாம் சந்திரகுப்தரும் அவரது மனைவி குமார தேவியின் உருவங்கள் பொறித்த நாணயம், அசுவமேதவேள்வி நினைவாக வெளியிட்ட நாணயம், சமுத்திரகுப்தர் வீணை வாசிப்பதாகக் காட்டப்பட்டுள்ள நாணயம், முதலாம் குமார குப்தர் வெளியிட்ட மயில் பொறித்த நாணயங்களும், கருடன் பொறித்த நாணயங்களும் நமக்குக் கிடைத்துள்ளன. இத்துணை சிறப்புக்கள் பொருந்திய குப்தர்கள் காலத்தினை பொற்காலம் எனச் சொல்வது சாலப்பொருத்தமே.

### இந்திய பண்பாட்டில் அன்னியர் செல்வாக்கு:

இந்தியர்கள் கிரேக்கர்களிடமிருந்து சாஸ்த்திரத்தைக் கற்றனர். வான சாஸ்திரத்தில் கிரேக்கர்கள் பயன்படுத்திய சொற்களை (terms) இந்தியர்கள் அப்படியே பயன்படுத்தி உள்ளனர். மேலும் இந்தியர்கள் கிரேக்கர்களிடமிருந்து ஜாதகம் கணிக்கும் முறையை அறிந்து கொண்டனர். கிரேக்க தொடர்பு ஏற்படுவதற்கு முன்னர் இந்தியர்கள் மெருகு ஏற்றாத (கரடு முரடான) நாணயங்களை வெளியிட்டனர். பின்னர் அவர்கள் கிரேக்கர்களிடமிருந்த வழவழப்பான நாணயங்களை அச்சிடும் முறையை கற்றுக்கொண்டனர். நாணயத்தின் ஒரு பக்கம் பேரரசரின் பெயரையும் அல்லது பட்டத்தையும் மறுபக்கம் அரசு சின்னத்தையும் பொறித்த நாணயத்தை அச்சிடும் முறையையும் இந்தியர்கள் கிரேக்கர்களிடமிருந்தே கற்றுக்கொண்டனர்.

கணிதத்தில் பத்தின் அடிப்படை அட்டவணையை (தசாம்சம்) கிரேக்கர்களிடமிருந்து இந்தியர்கள் கற்றனர். காந்தாரக்கலை இந்தியக்கலையும், கிரேக்கக்கலையும் சேர்த்து உருவாக்கப்பட்ட கலையன்றோ! கிரேக்கக் கருத்துக்களைப் பெற்று இந்தியர்கள் அவற்றை இந்தியமயமாக்கி ஏற்றுக் கொண்டனர் என பேராசிரியர் த.சத்திய நாதய்யர் கருதுகிறார்.

---

# 14. கூணர்கள்

கூணர்கள் நாடோடி இனத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் சீனாவின் எல்லைபுறப் பகுதிகளில் கி.மு.இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்தனர். சீன மொழியில் இவர்கள் ஹியூங்நு (Hiung-nu) என அழைக்கப்பட்டனர். இதுவே காலப் போக்கில் கூணர் என மாறிற்று. அவர்கள் மேற்கு சீனாவில் அப்போது வாழ்ந்து கொண்டிருந்த மற்றொரு இனமாகிய யுவேச்சிகளை (Uveh-chi) தோற்கடித்துவிட்டு அவர்களின் பகுதிகளைப் பிடித்துக் கொண்டனர். பின்னர் கூணர்கள் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்தனர். ஒரு பிரிவு வால்கா ஆற்றை நோக்கி நகர்ந்தது மற்றொரு பிரிவு ஆக்சன் ஆற்றை நோக்கிச்சென்றது. முதல் பிரிவு கூணர்கள் உரோமப் பேரரசைத் தாக்கி இன்னல்கள் விளைவித்தனர். இரண்டாவது பிரிவு கூணர்கள் இந்தியா மீது படையெடுத்து வந்தனர்.

**கூணர்களின் இந்தியப் படையெடுப்பு:**

கூணர்கள் முதலில் இந்துகுஷ் மலையைக் கடந்து காந்தாரத்தைத் தாக்கி அதனைக் கைப்பற்றினர். இதன் பின் அவர்கள் கி.பி.454 ஆம் ஆண்டு குப்தப் பேரரசைத் தாக்கினர் அப்போது குப்த அரசராக இருந்த முதலாம் குமாரகுப்தர் தனது மகன் ஸ்கந்தகுப்தரை அனுப்பி கூணர்களைத் தோற்கடித்தார். பின்னர் ஸ்கந்தகுப்தர் குப்த அரசராக இருந்த போது மீண்டும் கூணர்கள் குப்த பேரரசைத் தாக்கினர். இந்த முறையும் அவர்களால் குப்தப்பேரரசின் பகுதிகளைப் பிடிக்க முடியவில்லை. கூணர்கள் கி.பி.ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் பாரசீகத்தைப் பிடித்து ஆட்சி செய்து வந்தனர். அது சமயம் அவர்கள் இந்தியாவில் காந்தாரம் பகுதியை மட்டும் ஆட்சி செய்து கொண்டிருந்தனர்.

**கூணர்கள் வரலாறு பற்றி அறிய உதவும் சான்றுகள்:**

சுங்யுன் (Sung-Yun) என்ற சீனத்தூவர் கி.பி.520ஆம் ஆண்டு காந்தாரத்துக்கு வந்தார். அது சமயம் காந்தாரத்தை கூண அரசர் தோரமாணர் ஆட்சி செய்து கொண்டிருந்தார். சுங்யுன் தோரமாணர் பற்றி கீழ்க்காணும் கருத்துக்களைத் தெரிவிக்கிறார். "கூண அரசர் தோரமாணர் மிகவும் கொடியவர் பழி பாவங்களுக்கு கொஞ்சமும் அஞ்சாதவர். புத்த சமயத்தை அவர் பின்பற்றவில்லை. காஸ்மீரத்தை எதிர்த்து அவர் மூன்று ஆண்டுகள் போர் புரிந்தார்".

கி.பி. 550 ஆம் ஆண்டு வாகில் காஸ்மஸ் (Conmas) என்பவர் இந்தியாவுக்கு வந்து தங்கியிருந்து அப்போதைய இந்திய அரசியல் நிலை பற்றி குறிப்புகள் எழுதிச்சென்றுள்ளார். அவர் தமது குறிப்பில் கொல்லாஸ் (Gollas) என்ற கூண அரசரைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இந்த கொல்லாஸ் கூண அரசர் மிகிரகுலரே என்பர் வரலாற்று ஆசிரியர்கள் கொல்லாஸ் வடமேற்கு இந்தியாவை ஆண்டு கொண்டிருந்தார். அவர் மக்களிடம் மிக அதிகமாக வரி வசூலித்தார். கூணர்கள் அரசிற்கும் இந்திய அரசுக்கும் எல்லையாக சிந்து ஆறு அமைந்திருந்தது என காஸ்மஸ் குறிப்பிடுகிறார். சமண நூலான 'குவலயமாலா' தோரமாணர் உத்தராபதத்தை ஆண்டு கொண்டிருந்ததாகக் குறிப்பிடுகிறது. தோரமாணர் வெளியிட்ட இரண்டு கல்வெட்டுகள் நமக்குக் கிடைக்கின்றன. அவற்றில் ஒன்று ஏரானிலும் (மத்தியப்பிரதேசம்), மற்றொன்று பஞ்சாபில் உள்ள குரா (Kura) என்ற இடத்திலும் இருக்கின்றன. மிகிரகுலர் வெளியிட்ட கல்வெட்டு குவாலியரில் உள்ளது. கி.பி. 633-ல் மிகிரகுலரது தலை நகரான சாகாலாவுக்கு (Sakala) யுவான் சுவாங் வந்தார். அவருடைய குறிப்புக்களிலிருந்து மிகிரகுலர் கொடிய ஆட்சி நடத்தினார் என்றும் அவர் பாலதித்தியரிடம் தோற்றுப்போனார் என்றும் அறிந்து கொள்கிறோம்.

**தோரமாணர்: (Toramana)**

அவர் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் சிந்து ஆற்றைக் கடந்து குப்தப் பேரரசைத் தாக்கினார். மத்தியப் பிரதேசத்தில் சாகர் (Saugor) மாவட்டத்தில் உள்ள ஏரான் (Eran) என்ற

இடம் வரை அவரது படை முன்னேறிச் சென்றது. அப்போது குப்த மன்னராக இருந்த பானு குப்தர் தோரமாணரை எதிர்த்து போர் செய்தார். அப்போரில் அவர் தோரமாணரைத் தோற்கடித்து கூணர்களிடமிருந்து மாளவத்தைக் கைப்பற்றினார்.

தோரமாணர் பற்றி வரலாற்றுச் செய்திகள் நமக்கு அதிகம் தெரியவில்லை. அவர் வெளியிட்ட நாணயங்கள் உத்திரப் பிரதேசம், இராஜஸ்தான், பஞ்சாப், காஷ்மீரம் போன்ற பகுதிகளில் மேற்கொண்ட அகழ்வாய்வுகளில் கிடைத்திருக்கின்றன. காந்தாரத்தில் இருந்த கூண அரசை இவர் ஆண்டு கொண்டிருந்தார் என்ற கருத்தை பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்கள் ஒப்புக்கொள்கின்றனர். இவர் தனது இறுதிக் காலத்தில் சமண சமயத்தைத் தழுவினார் என குவலய மாலா (சமணநூல்) கூறுகிறது.

**மிகிரகுலர்:**

இவர் தோரமாணரின் மகனாவார். இவர் வடஇந்தியாவின் மீது படையெடுத்து வந்து பல பகுதிகளைக் கைப்பற்றினார். கி.பி.515-ஆம் ஆண்டில் இவர் மன்னரானர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. மாளவத்தை ஆண்ட யசோதர்மர் இவரை கி.பி. 532-ல் தோற்கடித்தார். யசோதர்மர் இறப்புக்குப் பின் மீண்டும் மிகிரகுலர் தனது படையெடுப்புக்களை நிகழ்த்தினார்.

மிகிரகுலரின் சம காலத்து குப்த மன்னர் நரசிம்ம குப்த பாலாதித்தியர் ஆவார். பாலாதித்தியர் வலிமை மிக்க மன்னரில்லை. இவரது படை மிக நலிவுற்றுப் இருந்தது. இவரை மிகிரகுலர் தோற்கடித்ததாக யுவான் சுவாங் குறிப்பிடுகிறார்.

மௌகரி மன்னரான யசோதர்மர் மிகிரகுலரைத் தோற்கடித்தார். இதனை அறிந்த மிகிரகுலரின் தம்பி சாகாலாவில் மிகிரகுலரின் அரியணையைக் கவர்ந்து கொண்டார். உடனே மிகிரகுலர் காஷ்மீர மன்னரிடம் தஞ்சம் புகுந்தார். தனக்கு தஞ்சம் அளித்த காஷ்மீர மன்னருக்கு எதிராகவே சதி செய்து மிகிரகுலர் காஷ்மீரத்தைக் கைப்பற்றிக் கொண்டார். பின்னர் அவர் படையைப் வலிமைப்படுத்திக் கொண்டு சாகாலா சென்று தம் தம்பியை வென்று நாட்டையும் கைப்பற்றினார். இவர் கி.பி.542 ஆம் ஆண்டு வாகில் இறந்தார்.

கி.பி. 563-க்கும் 568-க்கும் இடையில் ஏதோ ஒரு ஆண்டில் பாரசீகரும், துருக்கியரும் ஒன்று சேர்ந்து கூணர்களைக் தாக்கி அவர்களது ஆதிக்கத்துக்கு முடிவு கட்டினர்.. இருந்தபோதிலும் கூணத்தலைவர்களில் சிலர் மட்டும் சிறு சிறு அரசுகளை ஆண்டு கொண்டிருந்தனர். அவர்களை சுதேசி மக்கள் தாக்கினர். அண்டை மன்னர்களும் தாக்கினர் இறுதியில் அவர்கள் சுதேசி மக்களோடு ஒன்றாகச் கலந்தனர் எனக் கருதப்படுகிறது.

**யசோதர்மன்: (Ysodharman)**

புத குப்தர் இறந்ததும் குப்த பேரரசில் குழப்பமும், நிருவாகச் சீர்கேடும் ஏற்பட்டது. கூணர்கள் அப்பேரரசை தாக்கி அதன் அமைதிக்குக் கேடு விளைவித்துக் கொண்டிருந்தனர். இக் குழப்பான சூழ்நிலையை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு குப்த பேரரசின் கட்டுபாட்டுக்குக் கீழ்படிந்து நடந்து கொண்டிருந்த சில சிற்றரசர்கள் தங்களைச் விடுதலை பெற்ற மன்னர்களென அறிவித்துக் கொண்டனர். அப்படி குப்தப் பேரரசின் மேலாண்மையை உதறித் தள்ளிவிட்டு விடுதலைப் பெற்று மன்னரானவர்களில் ஒருவர் தான் யசோதர்மர்.

மாளவம் குப்தப் பேரரசின் ஒரு சிறு மாநிலமாகும். இதன் மன்னராக இருந்தவரே யசோதர்மர். இவரைப்பற்றி அறிந்து கொள்ள நமக்கு கி.பி.533-ல் வெளியிட்ட இரண்டு கல்வெட்டுக்கள் பயன்படுகின்றன. இவ்விரண்டு கல்வெட்டுக்களும் பழைய குவாலியர் சமஸ்தானத்தில் உள்ள மாண்டசோரில் (Madasor) உள்ளன.

யசோதர்மனின் பூர்வீகம் பற்றி ஏதும் தெரியவில்லை. இவர் அவுலிக்கரக் (Avlikara) குடும்பத்தை சார்ந்தவர் எனக் கல்வெட்டு பகர்கிறது.

இவர் குப்தப் பேரரசுக்கு கட்டுப்பட்டு மாளவத்தை ஆண்டு வந்ததாகவும் கல்வெட்டுக்களிலிருந்து அறிகிறோம். இவர் சாம்ராட் (உலகம் முழுவதையும் ஆள்பவர்) என்ற பட்டத்தைப் பெற்றிருந்தார். இவர் தனது சிற்றரசை விரிவுபடுத்தக் கருதிபடையெடுப்பை மேற் கொண்டு பல அண்டை நாடுகளை வென்றார். இவருடைய அரசு வடக்கில் இமயமலை முதல் தெற்கில் மகேந்திர மலைவரை இருந்தது. கிழக்கே பிரமபுத்திரா ஆறும் மேற்கில் கடல்களும் இவரது அரசின் எல்லைகளாக அமைந்திருந்தன. கூண மன்னர் மிகிர குலர் இவருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி இவரின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டார் என சொல்லப்படுகிறது. இவர் குப்தர்களையும், கூணர்களையும் ஏதிர்ந்துப் போர் புரிந்து வெற்றி பெற்றார். இவருடைய இறப்பு பற்றி உறுதியாக ஏதும் தெரியவில்லை. இவர் கி.பி. 530-ல் இருந்து கி.பி. 540 வரை ஆண்டார் எனத் தெரிகிறது. இவர் இறப்புக்குப் பின் மாளவப் பகுதியை மைத்ரகர்கள், குப்தர்கள் ஆகியோர் ஆண்டனர்.

**மௌகாரிகள்:**

மகாபாரதத்தில் வரும் மத்ரநாட்டை (இன்றைய பஞ்சாப் மாநிலம்) ஆண்ட அஸ்வபதி என்ற மன்னரது வழி வந்தோர் பிற்காலத்தில் மௌகாரிகள் என அழைக்கப்பட்டனர். கயை முதல் இராஜஸ்தானம் வரை உள்ள நிலப்பரப்பில் மௌகாரிகள் பண்டைக் காலத்தில் வாழ்ந்து வந்தனர். பராபர் குன்றுகளிலும், நாகார்ஜினக் குன்றுகளிலும் கிடைக்கும் மூன்று கல்வெட்டுக்களிலிருந்து நாம் மூன்று மௌகாரிக மன்னர்களின் பெயர்களைத் தெரிந்து கொள்கிறோம். அம்மன்னர்கள் பெயர்களாவன.

யக்ஞவர்மன், சார்த்தூலவர்மன் (யக்ஞவர்மனின் மகன்) அனந்தவர்மன், (சார்த்தூலவர்மனின் மகன்) இவர்கள் மூவரும் கி.பி.ஆறாம் நூற்றாண்டின் முதல் பாதியில் குப்தர்களுக்குக் கட்டுப்பட்டு ஆட்சி நடத்தி வந்தனர். அவர்களைப் பற்றி வேறு தகவல் எதுவும் நமக்குத் தெரியவில்லை.

மௌகாரிக மன்னர்களின் மற்றொரு கிளை உத்திரப் பிரதேசத்தில் கங்கை ஆற்றுக்கும் சோக்ரா ஆற்றுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பில் ஆட்சி நடத்தினர். இக்கிளையின் ஆறு மன்னர்களின் பெயர்கள் நமக்குத் தெரிய வருகின்றது அவையாவன:

மகாராஜா ஹரிவர்மன், மகராஜா சர்வவர்மன், மகாராஜாதிராஜா ஈசானவர்மன், மகாராஜாதி ராஜா சர்வவர்மன், மகாராஜராஜா அவந்தி வர்மன்.

மேலே கண்ட மன்னர்களில் முதல் மூன்று மன்னர்கள் குப்த பேரரசிற்கு கட்டுப்பட்டு ஆட்சி நடத்தினர். புதகுப்தர் காலத்தில் மௌகாரி மன்னர்கள் குப்தர்கள் கட்டுப்பாட்டிவிலிருந்து விடுபட்டு விடுதலைப் பெற்ற மன்னர்களானார்கள். இறுதி மூன்று மன்னர்கள் மகாராஜாதிராஜா பட்டம் பெற்று, விடுதலைப்பெற்ற மன்னர்களாகத் திகழந்தார்கள் எனக் கொள்ளலாம்.

**ஈசானவர்மன்:**

இவரே மௌகாரி மன்னர்களில் முதல் விடுதலை பெற்ற மன்னர் ஆவார். இவர் ஆந்திரர்களையும் கௌடர்களையும் சாளுக்கியர்களையும் வென்றார். இவர் பிற்கால குப்த மன்னர்களாகிய குமாரகுப்தர், தாமோதரகுப்தர் ஆகியோரிடம் தோற்றுப் போனார். இவர் கூணர்களையும் தோற்கடித்தார்.

ஈசானவர்மனுக்குப் பின் ஆட்சிக்கு வந்த மௌகாரி மன்னர்கள் பற்றி நமக்கு தெளிவாக ஏதும் தெரியவில்லை. அவர்கள் மகாராஜாதி ராஜா என்ற பட்டப்பெயரைப் பெற்றிருந்தமையால் அவர்களும் ஓரளவு வலிமை பெற்ற மன்னர்களாக இருந்தனர் எனலாம். அவர்களின் நாணயங்கள் பெருமளவில் உத்தரப் பிரதேசத்தில் கிடைக்கின்றன. அவந்தி வர்மனுக்குப் பிறகு அவரது மூத்த மகன் கிரகவர்மன் ஆட்சிக்கு வந்தார். இவரே ஹர்ஷரின் சகோதரி ராஜ்யஸ்ரீயை மணந்து கொண்டார். இவர் இறப்புக்குப்பின் மௌகாரி அரசை ஹர்ஷரே ஆளத்தொடங்கினார். இவ்வாறு ஏழாம் நூற்றாண்டின் முன் பாதியில் மௌகாரி அரசு முடிவுக்கு வந்தது.

**பிற்கால குப்தர்கள் அல்லது மகதகுப்தர்கள்:**

குப்தப் பேரரசின் மாநில தலைவர்கள் அப்பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் தன்னிச்சையாக இயங்கும் அரசை நிறுவினர். அவர்கள் பிற்கால குப்தர்கள் என அழைக்கப்பட்டார்கள் பேரரசை ஆண்ட குப்தமரபினரும் இந்த பிற்காலக் குப்தர்களும் வெவ்வேறானவர்கள். இவர்கள் மகதத்தை ஆண்டதனால் மகத குப்தர்கள் எனப் பெயர் பெற்றனர். கயைக்கு அருகில் உள்ள அப்சா (Aphsad) என்ற இடத்தில் காணப்படும் கல்வெட்டு இந்த பிற்கால குப்தர்களின் மரபுப் பட்டியலை நமக்குத் தருகிறது. அதில் குறிப்பிட்டுள்ள எட்டு பிற்கால குப்த மன்னர்களின் பெயர்கள் பின் வருமாறு:

கிருஷ்ண குப்தர், ஹர்ஷ குப்தர், ஜீவித குப்தர், குமார குப்தர், தாமோதரகுப்தர், மகாசேன குப்தர், மாதவகுப்தர், ஆதித்ய சேனர், இக்கல்வெட்டில் முதல் மூன்று குப்தர்களின் போர் வெற்றிகள் பற்றி கூறப்பட்டுள்ளது. ஜீவித குப்தர் இமய மலையிலிருந்து கடல்கள் வரையில் சென்று வெற்றி பெற்றார் என பெருமையாகச் சொல்லப்பட்டுள்ளது. குமார குப்தர் மௌகாரி மரபின் ஈசானவர்மனைத் தோற்கடித்தார். இவர் பிரயாகை படையெடுப்பின்போது இறந்தார்.

குப்தப் பேரரசின் கிழக்குப் பகுதியிலும் மாளவத்திலும் இப்பிற்கால குப்தர்கள் ஆட்சி புரிந்தனர். தாமோதர குப்தரின் மகனான மகாசேன குப்தர் காமரூபத்தை ஆண்ட சுச்தித வர்மனை தோற்கடித்தார். இவர் மாளவத்தை ஆண்டதாக ஹர்ஷசரிதம் கூறுகிறது. இவர் வலாபியை ஆண்ட மைத்ரக மன்னரான முதலாம் *சீலாதித்தியரிடம்* தோற்றுப் போனார். இவருக்கு அடி பணிந்து இருந்த *சசாங்கர்* (Sasankar) என்ற வங்க மன்னர் தம்மை விடுதலைபெற்ற மன்னர் என அறிவித்துக் கொண்டார். ஆகவே இவர் தனது இறுதிக் காலத்தில் தனது அரசின் பெரும்பகுதியை இழந்தார். இதனால் இவருடைய பிள்ளைகளாகிய குமாரகுப்தர், மாதவ குப்தர் ஆகிய இருவரும் ஹர்சரின் தந்தையார் பிரபாக வர்த்தனரிடம் தஞ்சம் புகுந்தனர் இவர்கள் இராஜ்யவர்த்தனர், ஹர்ஷவர்த்தனர் ஆகியோருக்கு தோழர்கள் ஆயினர்.

இப்பிற்கால குப்தர்கள் மகதம், வங்கம், மாளவம் ஆகிய பகுதிகளை ஆண்டனர் மகதமே இவர்களது அரசியல்மையமாக இருந்தது. இவர்களது தலை நகரம் எதுவெனத் தெரியவில்லை.

# 15. ஹர்ஷவர்த்தனர்

ஹர்ஷர் வரலாற்றை அறிய உதவும் மூலங்களை இலக்கிய மூலங்கள். தொல்பொருள் ஆய்வு மூலங்கள், அயல்நாட்டார் குறிப்புக்கள் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். இம்மூலங்கள் அளவில் கூடுதலாக இருப்பதால் ஹர்சரின் வரலாற்றை நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

**இலக்கிய மூலங்கள்:**

பாணர் ஹர்ஷரின் வரலாற்றை 'ஹர்ஷ சரிதம்' என்ற நூலாக எழுதினார். ஹர்ஷசரிதத்தில் ஹர்ஷரின் இளமைக்கால வாழ்க்கை, அவர் அரசுப் பொறுப்பேற்றுக் கொண்ட சூழ்நிலை ஆகியவை தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன. சொல்வல்லவரான பாணர் ஹர்ஷ சரிதத்தில் ஹர்ஷரின் பண்புகள், சாதனைகள் அவரது காலத்து சமுதாய நிலை ஆகியவற்றை சுவைபடக் கூறுகிறார்.

பாணருடைய காதம்பரி, பார்வதி பரிணயம் ஆகியவை ஹர்ஷர் காலத்து கல்வி நிலை, சமுதாய வாழ்வு முறை ஆகியவற்றைப் பற்றி நமக்குச் சொல்கின்றன. ஹர்ஷர் எழுதிய நாடகங்கள் மூன்று. அவையாவன: 1. இரத்னாவளி 2. பிரியதர்சிகா நாகானந்தம், முதல் இரண்டு நாடகங்கள் ஹர்ஷரது காலத்து அரசியல் நிலையைத் தெளிவாக நமக்குக் காட்டுகின்றன. நாகானந்தம் புத்த சமயக் கொள்கைகளையும், பௌத்த விகாரங்களைப் பற்றியும் நமக்குச் சொல்கிறது.

ஆரிய மஞ்சுஸ்ரீ மூலகல்பா என்னும் நூலில் வங்க மன்னர் சசாங்கனின் வாழ்க்கை வரலாறு கூறப்பட்டுள்ளது. மேலும் இந்நூல் ஹர்ஷரின் அண்ணன் இராச்சிய வர்த்தனர் போர் ஆற்றல் மிக்கவர் எனக் குறிப்பிடுகிறது. இந்நூலில் சசாங்கன் "சோமா" எனவும், இராச்சியவர்த்தனர் 'ரா' எனவும், ஹர்ஷர் 'ஹா' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

**தொல் பொருள் ஆய்வுகள்:**

நாளந்தாவில் (Nalanda) ஹர்ஷர் கட்டிய கட்டிடம் ஒன்று அகழ்வாய்வின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பிரயாகையில் ஹர்ஷரத பேரவை கூடிய இடம் இன்றும் உள்ளது. இந்த இடத்தில் தான் தற்போது கும்பமேளா நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

ஹர்ஷர் வெளியிட்ட சில செப்பேடுகளும், முத்திரைகளும் கிடைத்துள்ளன. அவற்றில் முக்கியமானவை பன்ஸ் கேரோச் செப்பேடு, மதுபெண் செப்பேடு, நாளந்தா முத்திரைகள் சோனாபட் முத்திரைகள் ஆகும். சாளுக்கிய மன்னர் புலிகேசி வெளியிட்ட அல்கோலி (Ahole) பட்டயங்கள் அவர் ஹர்ஷரைத் தோற்கடித்த செய்தியை நமக்குத் தெரிவிக்கின்றன.

ஒரு பக்கம் குதிரை வீரனும் மறுபக்கம் அமர்ந்த தேவியின் உருவமும் கொண்ட காசை ஹர்ஷர் வெளியிட்டதாக கன்னிங்காம் தமது 'இடைக்கால இந்தியக் காசுகள்' என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

**அயல் நாட்டார் குறிப்புகள்:**

ஹர்ஷரின் காலத்தில் இந்தியாவிற்கு வந்த அயல் நாட்டுப் பயணி யுவான் சுவாங்கு ஆவார். இந்த சீனப்பயணி எழுதிய நூல் 'சியூகி' என்று அழைக்கப்படுகிறது. இவர் 'சென்' என்ற பழமையான சீனக் குடும்பத்தில் பிறந்தார். இவரது தாத்தா காங் (Kang) கல்லூரி ஒன்றில் போராசிரியராகப் பணியாற்றினார். யுவான் சுவாங்கின் தந்தை ஹய் (Hui) என்பவர் கன்பூசியசின் கொள்கைகளைக் கடைப்பிடித்து வந்தார். யுவான் சுவாங்கு கி.பி. 600-ல் பிறந்தார். கி.பி. 629-ல் இந்தியாவிற்கு வந்தார். ஏறக்குறைய பதினாறு ஆண்டுகள் அவர் இந்தியாவில் தங்கியிருந்தார். தம் தாய் நாடு திரும்பிய அவர் சில காலம் கழித்து கி.பி. 664-ல் இறந்தார். இவரது

குறிப்புக்களிலிருந்து இந்திய சமூகம், சமயம், பொருளாதாரம் ஆகியவற்றை அறிந்து கொள்ளுகிறோம். மேலும் நீட்டல் அளவு, கால அளவு, பருவ காலங்கள், நகர அமைப்பு, கட்டடக்கலை, மக்களின் உடை, உணவு, கல்வி, ஆகியவற்றையும் அறிந்து கொள்கிறோம்.

**ஹர்சரின் முன்னோர்கள்:**

**மன்னர் புசிய பூபதி:**

இவர் சிவ பக்தர். இவரை 'பரமமகேசுவரர்' என்ற பாணர். தனது ஹர்ஷ சரிதத்தில் குறிப்பிடுகிறார்.

**முதல் இராச்சிய வர்த்தனர்:**

இவர் நரவர்த்தனருக்கும் வஜ்ரினி தேவிக்கும் பிறந்தார் இவர் சூரியனை வழிபட்டார். ஆகவே தான் இவர் 'பரமாதித்ய பக்தர்' என அழைக்கப்பட்டார். இவர் 'மஹாராஜா' என்ற பட்டம் பெற்றிருந்தார். இவர் பிற்கால குப்த மரபு அரசி அப்சரா தேவியை மணந்து கொண்டார். இவர் ஒரு சிற்றரசராகவே இருந்தார்.

**ஆதித்ய வர்த்தனர்:**

முதல் இராச்சிய வருத்தனருக்கும் அப்சரா தேவிக்கும் பிறந்தவரே ஆதித்ய வர்த்தனர். இந்த ஆதித்ய வர்த்தனர் மகாசேன குப்த தேவியை மணந்த கொண்டார். இவரும் 'பரமாதித்ய பக்தர்' என்ற பட்டம் பெற்றிருந்தமையால் சூரியன் கடவுளை வழிபடுவராக இருந்தார் எனலாம்.

**பிரபாகரவர்த்தனர்:**

இவர் ஆதித்ய வர்த்தனரின் மகனாவார். 'மகாராஜாதி ராஜா' என்ற சிறப்புப்பட்டம் பெற்றிருந்தார். இவர் சுயேச்சை மன்னராக விளங்கினார். இவருடைய புகழ் நான்கு கடல்களுக்கும் அப்பால் பரவியிருந்தது என்பதை 'சதுஸ் ஸமுத்திர திகராந்த கீர்த்திஸ்' என்ற இவரது கல்வெட்டு வாசகம் காட்டுகிறது.

'கூணமான்களுக்கு சிங்கம், சிந்து அரசருக்கு கடுமையான காய்ச்சல், கூர்ஜர மன்னரின் தூக்கத்தைக் கெடுப்பவர், காந்தார மன்னருக்கு கொடிய நோய் மாளவ மன்னர்களின் பாக்கியக் கொடியைக் கத்திரிக்கும் கோடாரி' என பாணர் தனது ஹர்ஷ சரிதத்தில் பிரபாக வர்த்தனரை புகழ்ந்து கூறுகிறார்.

***ஹர்சரின் பிறப்பு:***

பிரபாக வர்த்தனருக்கும் அவரது பட்டத்து அரசி யசோமதிக்கும் இரண்டு ஆண் குழந்தைகளும், ஒரு பெண் குழந்தையும் பிறந்தன. முதல் ஆண் குழந்தை கி.பி 576-ல் பிறந்தது. இதற்கு இராச்சிய வர்த்தனர் எனப் பெரிட்டனர். இரண்டாவது ஆண் குழந்தை கி.பி. 590-ஆம் ஆண்டு பிறந்தது. அக் குழந்தைக்கு ஹர்ஷர் எனப் பெயரிட்டனர். பெண் குழந்தை கி.பி. 592-ல் பிறந்தது. அதற்கு இராச்சியஸ்ரீ எனப் பெயரிட்டனர். ஹர்ஷர் ஜெயச்சத மாத்தில் பன்னிரண்டாம் நாள் பிறந்தார் எனக் குறிப்பிடும் பாணர் பிறந்த ஆண்டைக் குறிப்பிடாதது வியப்பாகவும், வேடிக்கையாகவும் இருக்கிறது. பேராசிரியர் சி.வி. வைத்யா ஹர்ஷர் சாக வருஷம் 512-ல் ஜெயச்சத மாதம் பன்னிரண்டாம் நாளில் பிறந்திருக்க வேண்டும் எனக் கருதுகிறார். சாக ஆண்டை கிறித்துவ ஆண்டாக மாற்றிப் பார்த்தால் ஹர்ஷர் கி.பி. 590-ல் ஜூன் மாதம் 4-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை பிறந்தார் எனத் தெரிந்து கொள்ளலாம்.

ஹர்சரின் பிறப்பு கோலாகலமாக கொண்டாடப்பட்டது. அந்தணர்கள் வேதம் ஓதி வாழ்த்தினர். கைதிகள் விடுவிக்கப்பட்டனர். தலைநகரில் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியில் திளைத்து கூத்தாடினர் என ஹர்ஷ சரிதம் குறிப்பிடுகிறது.

**ஹர்ஷர் கல்வி கற்றல்:**

பாணர் ஹர்ஷரின் இளமைக் காலத்தையும் கல்வியையும் தனியாகக் குறிப்பிடாது இராச்சியவர்த்தனரின் இளைமைக் காலத்தோடு சேர்ந்தே குறிப்பிடுகிறார். அவரின் குறிப்புக்களிலிருந்து கீழ்க்காணும் கருத்துக்களை அறிந்துகொள்கிறோம்.

1) ஹர்ஷரின் கல்வி ஏழுவயதில் தொடங்கி 14 வயதில் முடிவடைந்தது.

2) அவர் சுருதி, சுமிருதி ஆகியவற்றைக் கற்றுத்தேர்ந்தார்.

3) குதிரையேற்றம், யானையேற்றம், கத்திச்சண்டை, வில் அம்புப்போர் ஆகியவற்றையும் அவர் கற்றார்.

**ஹர்ஷர் மன்னராதல்:**

கூணர்களை எதிர்த்துப் போர் புரிய இராஜ்யவர்த்தனரையும், ஹர்ஷரையும் அவர்களது தந்தையாகிய பிரபாகவர்த்தனர் அனுப்பி வைத்தார். அவர்கள் இருவரும் போர்க்களத்தில் இருந்தபோது பிரபாகவர்த்தனர் உடல்நிலை மிகக் கவலைக்கிடமாயிற்று. ஆகவே ஹர்ஷவர்த்தனரை போர்க் களத்திலிருந்து வரும்படி செய்தி அனுப்பினர். அவரும் தலை நகர் வந்து சேர்ந்தார். இராச்சியவர்த்தனர் போர்க்களத்தில் இருந்தமையால் தனது இளைய மகன் ஹர்ஷரிடம் தனது ஆட்சியை ஒப்படைத்துவிட்டு பிரபாகவர்த்தனர் உயிர் நீத்தார். இராச்சியவர்த்தனர் கூணர்களை தோற்கடித்து விட்டு வெற்றியோடு தலைநகர் நுழைந்தபோது அவரை வரவேற்று, வாழ்த்தி ஆசி வழங்க அவரது தந்தையார் உயிரோடில்லை. தந்தையாரின் இறப்பினால் வாழ்வில் விரக்தி அடைந்த இராச்சியவர்த்தனர் அரசப்பொறுப்பை ஏற்க மறுத்து விட்டார் மன அமைதி வேண்டி தனிமையை நாடி துறவறம் மேற்கொள்ளத் திட்டமிட்டார். அண்ணனின் இம் முடிவு ஹர்ஷருக்கு மிகுந்த அதிர்ச்சியையும் கவலையையும் அளித்தது. தானும் அண்ணனோடு துறவறம் மேற்ககொள்ள முடிவெடுத்தார்.

இத்தகைய குழப்பமான சூழ்நிலையில் இராச்சியஸ்ரீயின் உதவியாள் சம்வாதகா இராச்சியவர்த்தனரைச் சந்தித்து இராச்சியஸ்ரீயின் கணவர் கிரகவர்மன் மாளவத்தின் மன்னர் தேவகுப்தரால் கொல்லப்பட்டார் என்றும், இராச்சியஸ்ரீ கைது செய்யபட்டு கன்யாகுப்சத்தில் சிறையில் அடைக்கப்பட்டு இருப்பதாகவும் சொன்னார். இத்துயரச் செய்தி இராச்சிய வர்த்தனரை கோபத்திற்குள்ளாக்கியது. துறவற ஆசையைத் தூர விரட்டியது. தங்கையின் கணவரைக் கொன்றவரைம் பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்ற வெறியைத் தூண்டி விட்டது. மாளவ மன்னர் தேவகுப்தரை எதிர்த்து போர் புரிய இராச்சியவர்த்தனர் 10,000 குதிரை வீரர்களுடன் போர்க்களம் சென்றார். தேவகுப்தரை போர்க்களத்தில் இராச்சியவருத்தனர் கொன்றார். ஆனால் கெட்டநேரம் காரணமாக அவரும் மாளவ மன்னரின் நண்பராகிய கௌடாவின் மன்னர் சசாங்கனால் கொல்லப்பட்டார்.

ஹர்ஷருக்கு சோதனை மேல் சோதனை வந்து கொண்டேயிருந்தது. இவரது தந்தை மறைந்தார். தாய் தற்கொலை செய்து கொண்டார். தங்கையின் கணவர் கிரகவர்மன் கொலை செய்யப்பட்டார். சகோதரர் இராச்சியவர்த்தனரும் போர்க்களத்தில் மாண்டார். தங்கை இராச்சியஸ்ரீ சிறையில் அடைக்கப் பட்டிருந்தார். இவ்வளவு இன்னல்களுக்கிடையே ஹர்ஷர் மன்னர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். தன் அண்ணனைக் கொலை செய்தவர்களை பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட ஹர்ஷர் அதற்கான முயற்சியில் ஈடுபட்டார். தன் தங்கை இராச்சியஸ்ரீயையும் சிறையிலிருந்து மீட்க வேண்டியது அவரது தலையாய பணியாயிற்று.

சசாங்கனின் பக்கத்து நாடான காம ரூபத்தில் மன்னராக இருந்த *** ஹர்ஷரோடு ஓர் நட்பு உடன்படிக்கை செய்து கொண்டார். அவரின் உதவியோடு இராச்சியஸ்ரீயைத் தேடி விந்தியக்காடுகளை அடைந்தார் ஹர்ஷர். அங்கிருந்த பௌத்த துறவிகள் வாயிலாக இராச்சியஸ்ரீ தீக்குளிக்கப் போகிறாள் என்ற செய்தியை அறிந்தார். உடன் தீக்குளிக்கும் இடம் சென்று அங்கு இராச்சியஸ்ரீயைச் சந்தித்து அவளுக்கு ஆறுதல் சொல்லி தீக்குளிப்பதை கைவிடும்படி வேண்டிக் கொண்டமையால் அவளும் சம்மதித்து பௌத்த துறவியாக மாறி வாழ ஒப்புக் கொண்டாள்.

**ஹர்ஷரும் சசாங்கனும்:**

ஹர்ஷர் சசாங்கனை எதிர்த்துப் போர் புரிந்ததாக பாணரின் ஹர்ஷ சரிதத்தில் சொல்லப்படவில்லை. ஹர்ஷர் பௌத்த சமயத்தைச் சார்ந்தவராதலால் சசாங்கனை அவர் மன்னித்து விட்டு விட்டார் என சி.வி. வைத்யா கூறுகிறார். இக்கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை. ஏனென்றால் ஹர்ஷர் விந்தியக் காடுகளில் தன் தங்கையைச் சந்தித்தபோது தமக்கு ஒரு மிகப்பெரிய கடமை இருக்கிறது எனக் குறிப்பிடுகிறார். அவர்

குறிப்பிடும் கடமை அண்ணனைக் கொன்ற சசாங்களை பழிக்குப்பழி வாங்குவதாகத்தான் இருக்க வேண்டும்.

சசாங்கன் ஹர்ஷரின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டதாகவும், அவர் ஹர்ஷருக்கு கப்பம் கட்டிக் கொண்டு தன் நாட்டை ஆண்டதாகவும் பேராசிரியர் பணிக்கர் குறிப்பிடுகிறார்.

காசுகளின் அடிப்படையில் ஆராய்ந்த பேராசிரியர் பசாகா, சசாங்கன் ஹர்ஷரால் தோற்கடிக்கப்பட்டார் என்று கூறுகிறார்.

'ஆரிய மஞ்சுஸ்ரீ மூல கல்பா' என்ற நூல் ஹர்ஷர் சசாங்கனைத் தோற்கடித்ததாகக் கூறுகிறது. டாக்டர்.ஜெயஸ்வால் இக்கருத்தை தெரிவித்துக் கொள்ளுகிறார். ஹர்ஷர் சசாங்கனைத் தோற்கடித்தார் என்ற கருத்தே ஏற்றுக் கொள்ளத்தக்கதாக உள்ளது.

***கன்னோசி அரியணை:***

கன்னோசி அரசு இராச்சியஸ்ரீக்கு உரியது. இதனைப் பற்றிய குறிப்பு எதும் பாணரின் ஹர்ஷ சரிதத்தில் இல்லாதது வியப்பாக இருக்கிறது. கன்னோசி அரசை தம் தங்கையிடமிருந்து ஹர்ஷர் பெற்றுக் கொண்டார். இது பாணருக்கு பிடிக்காமல் இருந்திருக்கலாம். ஆகவே இது பற்றி ஏதும் தம் நூலில் குறிப்பிடவில்லை எனலாம். அல்லது பாணர் ஹர்ஷ சரிதத்தில் கன்னோசி பற்றி எழுதுவற்கு முன்னர் உயிர் துறந்திருக்கலாம். ஹர்ஷ சரிதம் ஒரு முற்றுப்பெறாத நூல் என்பது இங்கு நினைவு கொள்ளத் தக்கது.

***ஹர்ஷ சகாப்தம்:***

ஹர்ஷர் கி.பி. 606-ல் அரியணையேறினார். அக்காலம் முதல் "ஹர்ஷ சகாப்தம்" தொடங்கிற்று என்ற கருத்து வரலாற்று வல்லுநர்களிடையே பரவலாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் பாணரின் ஹர்ஷ சரித்தத்திலும், யுவான் சுவாங்கின் குறிப்புக்களிலும் 'ஹர்ஷ சகாப்தம்' பற்றி எதுவும் குறிப்பிடப் படவில்லையாதலால் அப்படி ஒரு சகாப்தம் இருந்ததை ஒப்புக் கொள்ள முடியாதென த.இ.மகும்தார் கருத்து தெரிவித்துள்ளார். ஆகவே ஹர்ஷர் ஒரு சகாப்தத்தை ஏற்படுத்தினாரா இல்லையா என்பது நமக்கு தற்போது தெளிவாகத் தெரியவில்லை.

***ஹர்ஷரின் வெற்றிகள்:***

ஹர்ஷர் செய்த போர்களையும், வெற்றிகளையும் அறிய நமக்கு கிடைக்கும் மூலங்கள் மிகக் குறைவே. ஆகவே அவர் வெற்றியைப் பற்றி நம்மால் ஏதும் தெளிவாகக் கூற இயலவில்லை. பாணர் தான் எழுதிய ஹர்ஷ சரிதத்தை முழுமையாக எழுதி முடிக்கவில்லை. யுவான் சுவாங்கின் குறிப்புகள் ஹர்ஷரது வெற்றிகள் பற்றி குழப்பமான கருத்துக்களைத் தருகின்றன. ஹர்ஷர் வெளியிட்ட சாசனங்கள் அவரது அரசியல் வெற்றிகள் பற்றி அறிந்து கொள்ள சிறிதும் உதவவில்லை.

***ஹர்ஷ சரிதம் கூறும் சில படையெடுப்புகள்:***

அனைத்துப் பேரரசர்களுக்கும் ஹர்ஷர் தலைவர். பிற மன்னர்களின் முத்திரை இரத்தினங்கள் ஹர்ஷரது கால் விரல்களை அலங்கரித்தன எனப் பாணர் பெருமையாகக் குறிப்பிடுவதிலிருந்து ஹர்ஷரின் போராற்றல் நமக்குத் தெரிய வருகிறது.

சிந்து மன்னரை வென்று அவர்தம் செல்வத்தை தமதாக்கிக் கொண்டார் ஹர்ஷர் என்கிறது ஹர்ஷ சரிதம். மேலும் இந்நூலில் பனி படர்ந்த மலைகளின் மன்னர்களிடமிருந்து திறை பெற்றார் எனச் சொல்லுகிறது. பனி படர்ந்த மலை இமயமலை. ஆகவே ஹர்ஷர் இமயமலையை ஒட்டி அமைந்துள்ள நேபாளத்தை வென்று அதன் மன்னரிடமிருந்த திறை பெற்றிருக்கலாம் என்பது சி.வி. வைத்யாவின் கருத்து.

பாணரின், குறிப்புகள் ஹர்ஷரின் வெற்றிகளை நேரடியாகக் குறிப்பிடவில்லை. எந்த மன்னர்களை அவர் வென்றார்! எப்போது வென்றார் என்பது பற்றி ஏதும் சொல்லப்படவில்லை.

**யுவான் சுவாங்கின் குறிப்புகள்:**

பாணரைப் போல யுவான் சுவாங்கும் ஹர்ஷரது வெற்றிகள் பற்றி பொதுப் படையாகவே குறிப்பிடுகிறார். ஹர்ஷர் கிழக்கில் படையெடுத்து ஆறு ஆண்டுகள் தொடர்ந்து போரி புரிந்து ஐந்து இந்தியாவையும் தனது ஆட்சிக்குக் கீழ்க் கொணர்ந்தார் என்கிறார் யுவான் சுவாங்கு.

மேலும் ஹர்ஷரது படையில் 60,000 யானைகளுகம். 1,00,000 குதிரைகளும் இருந்ததாக யுவான் சுவாங்கு குறிப்பிடுகிறார்.

***வல்லபி வெற்றி:***

முதலாம் *சீலாதித்தியர்* வல்லபியின் மன்னராக இருந்தார். இவர் மேற்குக் கடற்கரையிலிருந்து கிழக்கு மாளவம் வரையிலான பகுதியை ஆட்சி செய்தார்கள். நௌசாரிச் செப்பேடுகள் (Nausari Copper Plates) வல்லபி மன்னரை ஹர்ஷர் வெற்றி பெற்றார் என்றும் தோல்வியடைந்த வல்லபி மன்னர் இரண்டாம் தத்தா என்ற மன்னரிடம் தஞ்சம் புகுந்ததாகக் குறிப்பிடுகின்றன.

**புலிகேசியுடன் போர்:**

ஹர்ஷரின் போர்களில் மிகக் குறிப்பிடத்தக்கது அவர் சாளுக்கிய மன்னரான இரண்டாம் புலிகேசியை எதிர்த்துச் செய்த போராகும். இப்போரில் ஹர்ஷர் இரண்டாம் புலிகேசியிடம் தோற்றுப்போனார். இப்போரை சிறப்பாகச் செய்து வெற்றி பெற ஹர்ஷர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அனைத்தையும் விவரிக்கும் யுவான் சுவாங்கு இப்போரின் முடிவினைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. யுவான்சுவாங்கின் குறிப்புக்களிலிருந்து ஒன்று நமக்குத் தெள்ளதெளிவாகத் தெரிகிறது. அதாவது இப்போரைத் தொடங்கியவர் ஹர்ஷரேயாவார். புலிகேசி ஹர்ஷரைத் தோற்கடித்து விட்டு 'பரமேசுவரர்' என்ற பட்டத்தைக் சூட்டிக் கொண்டாரென அவரின் வாரிசுகளின் கல்வெட்டுக்களில் பெருமையாகச் சொல்லப் பட்டிருக்கிறது. இந்திய வரலாற்றில் முதன் முதலாக வடநாட்டு மன்னர் ஒருவரை தென்னாட்டு மன்னர் வெற்றி பெற்றார் என இந்த ஹர்ஷ-புலிகேசிப் போரை விவரிக்கிறார். டாக்டர். திரிபாதி (DR. Tripathi). இப்போர் கி.பி. 612-ல் நடைபெற்றதாக பேராசிரியர் பிளீட் (Prof. Fleet) கருகிறார். இக்கருத்தை மறுத்துக் கூறும் டாக்டர் திரிபாதி இப்போர் கி.பி. 630க்கும் கி.பி. 633க்கும் இடைப்பட்ட காலத்தில் நடந்ததாகக் கூறுகிறார்.

**ஹர்ஷரும் காசுமீரும்:**

புத்தரின் ஒன்றரை அங்குல நீளமுள்ள மஞ்சள் கலந்த வெள்ளை நிறப்பல் காஷ்மீரத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டு இருந்தது. அதைக் கண்டு வணங்க காஷ்மீர் மன்னரிடம் ஹர்ஷர் அனுமதி கேட்டார் என யுவான் சுவாங்கின் குறிப்பில் சொல்லப்பட்டுள்ளது. இதிலிருந்து காஷ்மீர் ஹர்ஷரின் கட்டுப்பாட்டுக்குக் கீழ் இல்லாது சுயேச்சை மன்னராக இருந்தது என்பது தெளிவாகிறது.

ஹர்ஷர் இப்பல்லை தன் நாட்டிற்கு கொண்டு வந்து அதற்கு அஞ்சலி செலுத்த விரும்பினார். ஆனால் காஷ்மீரத்து பௌத்த சங்கத்தினர் அப்பல்லை கொடுக்க மறுத்து மறைத்து வைத்தனர். உடனே ஹர்ஷர் தம் படையோடு சென்று அப்பல்லைத் தம் நாட்டிற்கு கொண்ர்ந்தார் என்கிறார் யுவான் சுவாங்கு. இந்நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்துக்கொண்டு 'ஹர்ஷரின் மேலாண்மையை ஒரு வழியாக காஷ்மீர் ஏற்றுக் கொண்டது' என டாக்டர் முகர்ஜி சொல்கிறார். அவரின் கருத்து பொருத்தமாகவில்லை. காஷ்மீர் மன்னரே பெருந் தன்மையோடு பௌத்த சங்கத்தினரிடமிருந்து அப்பல்லைப் பெற்று ஹர்ஷரிடம் ஒப்படைத்திருக்கலாமல்லவா?.

**கன்னோசிப் பேரவை:**

ஹர்ஷர் கி.பி 643-ல் கன்னோசியில் சமய மாநாடு ஒன்றைக் கூட்டினார். இதில் பல மன்னர்கள். அறிஞர்கள், ஹீனயானர்கள், மகாயானர்கள், அந்தணர்கள், சமணர்கள் ஆகியோர் பங்கேற்றனர். இம்மாநாட்டிற்கு யுவான் சுவாங்கு தலைமை தாங்கினார். இம்மாநாட்டிற்கென ஆள் உயர புத்தர் சிலை ஒன்று தங்கத்திலும், மற்றொரு புத்தர் சிலை மூன்றடி உயரத்தில்

செம்பிலும் செய்யப்பட்டன. கங்கைக்கரையில் ஒரு பௌத்த விகாரம் கட்டப்பட்டு அங்கு பெரிய புத்தர் சிலை வைக்கப்பட்டது. சிறிய புத்தர் சிலை இம்மாநாடு தொடர்பாக ஏற்பாடு செய்திருந்த ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பயன்படுத்தப்பட்டது. இம்மாநாடு நடந்து கொண்டிருந்தபோது ஹர்ஷரைக் கொல்ல சில அந்தணர்கள் தீட்டிய சதித்திட்டம் வெற்றி பெறவில்லை. இச்சதித்திட்டத்தில் தொடர்பு கொண்டிருந்த அந்த அந்தணர்கள் நாடு கடத்தப்பட்டனர்.

**அலகாபாத் பேரவை:**

ஹர்ஷர் தமது முப்பதாவது ஆண்டு ஆட்சி நிறைவு விழாவையொட்டி அலகாபாத்தில் ஒரு பேரவையை கி.பி. 643-ல் கூட்டினார். இம்மாநாட்டிலும் யுவான் சுவாங்கு பங்கேற்றுள்ள இம்மாநாட்டில் புத்தர், சூரியன், சிவன் ஆகிய படிமங்களுக்கு சிறப்பு வழிபாடுகள் செய்யப்பட்டன. பல்வேறு சமயத்தைச் சார்ந்த துறவிகளுக்கு தானங்கள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு துறவியும் 100 பொற்காசுகள், 1 முத்து, பருத்தியிலான ஓர் ஆடை, வாசனைப் பொருட்கள் ஆகியவற்றைப் பெற்றார். இவ்வாறாக ஐந்து ஆண்டுகளாகச் சேமித்த பொருட்களை ஹர்ஷர் தானமாக வழங்கினார். பின்னர் அவர் தமக்கு வேண்டிய உடையை தங்கை இராச்சியஸ்ரீயிடமிருந்து இரந்து பெற்றார் என்று யுவான் சுவாங்கு கூறுகிறார்.

**ஹர்ஷரின் ஆட்சி முறை:**

மன்னர் தெய்வீகத்தன்மை வாய்ந்தவராகக் கருதப்பட்டார். தருமத்தை நிலை நாட்டுவதும், தவறு செய்பவர்களை தண்டிப்பதும் மன்னரின் முக்கிய கடமைகளாகக் கருதப்பட்டது. ஹர்சர் மாநிலத் தலைவர்களுடன், அரசு அலுவலர்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அவர் அடிக்கடி மாறுவேடத்தில் நகர்ச் சோதனை சென்று மக்கள் கருத்தை அறிந்து வந்தார். அவர் நீதி வழங்கும் உயர் அலுவலராகத் திகழ்ந்தார். சட்டங்கள் தரும சாத்திரப்படி இயற்றப்பட்டன.

**படை:**

ஹர்ஷரின் படையில் நான்கு பிரிவுகள் இருந்தன. அவை யானை காலாட்படை, குதிரைப்படை, தேர்ப்படை, யானைப்படை, படையை ஹர்ஷர் பார்வையிடச் சென்றபோது யானையின் மீது அமர்ந்து சென்றதாக பாணர் குறிப்பிடுகிறார். அவரின் படையில் படகுகளும் இருந்ததாக மதுபான செப்பேடுகள் கூறுகின்றன. படை வீரர்கள் அமைதிக் காலத்தில் அரண்மனையில் காவலர்களாகப் பணியாற்றியதாக யுவான் சுவாங்கு குறிப்பிடுகின்றார். படையெடுப்பு சமயத்தில் தேவைக்கு ஏற்ப புதிய வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். படையெடுப்பு முடிந்தபின் அவர்கள் படையிலிருந்து நீக்கப் பட்டனர். ஹர்ஷரின் படையில் 5000 யானைப்படை வீரர்கள், 2000 குதிரைகள், 50,000 போர் வீரர்கள் இருந்ததாக யுவான் சுவாங்கு குறிப்பிலிருந்து தெரியவருகிறது.

ஹர்ஷர் தமது பேரரசை ஐந்து பிரிவுகளாகப் பிரித்திருந்தார் அவையாவன:

1) கிழக்கு இந்தியா 2) மேற்கு இந்தியா 3) வடக்கு இந்தியா 4) மத்திய இந்தியா 5) தென் இந்தியா

**கிராம நிருவாகம்:**

கிராமத் தலைவர் கிராமிகா என அழைக்கப்பட்டார். அவர் எவ்விதம் எவரால் நியமிக்கப்பட்டார் என்பது பற்றி எதுவும் தெரியவில்லை.

**அரசு வருமானம்:**

அரசு மூன்று வகை வரிகளை விதித்தன. அவையாவன : 1) பாகா 2) ஹிரண்யா 3) பாலி பாகா என்பது நிலவரியாகும். இவ்வரி தானியமாகச் செலுத்தப்பட்டது. ஹிரண்யா விவசாயிகளும், வணிகர்களும் பணமாகச் செலுத்தும் வரியாகும். பாலி என்பது எவ்வகை வரி எனத் தெரியவில்லை. வரிகள் கடுமையாக இல்லையென யுவான் சுவாங்கு குறிப்பிடுகிறார்.

அரசு மொத்த நில வருவாய் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. முதல் பகுதி நாட்டின் நற்பணிகளுக்காகச் செலவிடப்பட்டது. இரண்டாவது பகுதி மன்னர் அமைச்சர்களின்

செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டது. மூன்றாம் பகுதியை வைத்துக் கொண்டு கற்றோர்க்கும், கலைஞர்களுக்கும் சிறப்புச் செய்யப்பட்டது. நான்காம் பகுதி வருவாய் நன்கொடைக்காகப் பயன்படுத்தப்பட்டது.

**தண்டனைகள்:**

நாட்டில் குற்றங்கள் மிக மலிந்து காணப்படவில்லை. மிகக் கடுமையான குற்றங்கள் புரிந்தோரின் மூக்கு அறுக்கப்பட்டு அவர்கள் காடுகளில் போய் வாழுமாறு வற்புறுத்தப்பட்டனர். சிறய குற்றங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. ஹர்ஷரின் ஆட்சி மௌரியர்களின் ஆட்சியைப் போன்றோ, குப்தர்களின் ஆட்சியைப் போன்றோ அவ்வளவு சிறப்பாக இருக்கவில்லை என அல்டேகர் கருத்துத் தெரிவிக்கிறார். அவருடைய கருத்து ஒப்புக்கொள்ளதக்கதே. யுவான் சுவாங்கின் பொருட்கள் தலைநகருக்கு வெகு அருகிலேயே கொள்ளையடிக்கப்பட்டதாக நாம் அறிகிறோம். சட்டம் ஒழுங்கு இல்லாத அக்காலத்தை மிகச் சிறந்த ஆட்சிக் காலமெனக் கூற இயலாது.

**ஹர்ஷர் பற்றிய மதிப்பீடு:**

சமுத்திரகுப்தர், அசோகர் ஆகியோரின் பண்பு நலன்களை ஹர்ஷர் பெற்றிருப்பததாக டாக்டர். முகர்ஜி கூறுகிறார். அசோகர், அக்பர் போல ஹர்ஷர் சிறந்த நிர்வாகி என இராபின்சன் கூறுகிறார். ஹர்ஷர் சிறந்த ஆட்சியாளராகவும், உறுதி மிக்க இராணுவத் தலைவராகவும், கலைகளின் ஆதரவாளராகவும் இருந்தார். வட இந்தியாவில் அரசியல் ஒற்றுமையை ஏற்படுத்திய பெருமை ஹர்ஷருக்கு உண்டு. பௌத்த சமயத்தின் மீது பற்றுக் கொண்டிருந்த போதிலும் அதனால் இவரது வீரம் மங்கி விடவில்லை. இவரது வலிமையைக் கண்ட வேற்று நாட்டு மன்னர்கள் வரத்தனப் பேரரசின் நட்புறவை நாடினர். இவர் சமயப்பொறையைக் கடைபிடித்தார். இவர் காலத்தில் கூட்டப்பட்ட சமய மாநாடுகளில் பல முடிசூடிய மன்னர்கள் கலந்த கொண்ட நிகழ்ச்சி இதைக் சுட்டிக்காட்டுகின்றது. இவரது மறைவுக்குப் பிறகும் இவர் ஏற்படுத்திய ஹர்ஷ சகாப்தம் நடைமுறையில் இருந்தது. மக்கள் நலம் காப்பதை தனது கடமையாகக் கொண்டார் என்று *சீனப்பயணி* யுவான்சுவாங் குறிப்பிடுகிறார். இவர் கல்வியிலும் சிறப்புற்று விளங்கினார். மூன்று முக்கிய நாடகங்களை எழுதிய பெருமை இவருக்கு உண்டு. இவரது அவையில் பலதுறைகளில் பெயர் பெற்ற அறிஞர்கள் தங்கியிருந்தனர்.

பௌத்த சமயத்தைப் பரப்புவதற்கு இவர் பெரும் முயற்சிகள் மேற்கொண்டதன் விளைவாக கன்னோசியில் அச்சமயம் புத்துயிர் பெற்றது. அசோகரைப் போன்று விலங்குகளைக் கொல்லுவதற்குத் தடை விதித்தார். அந்தணர்கள், வறியவர்கள், அனாதைகள் ஆகியோருக்கும் அன்பளிப்பு வழங்கி அவர்களை அரவணைத்தார். ஈகை காட்டுவதில் அவருக்கு நிகர் அவரே என்பதை கன்னோசி, பிரயாகை மாநாட்டு நிகழ்ச்சிகள் விளக்கவல்லன.

சுருங்கக்கூறின் இவர் போர் புரியும் போது ஓர் வீரராகவும் அவையில் அமரும் போது ஓர் தலை சிறந்த நிர்வாகியாகவும், அரண்மனையில் தங்கியிருந்த போது ஓர் கலிஞராகவும் கோவிலில் ஓர் பக்தனாகவும், ஓர் தலை சிறந்த அரசியல் நிபுணனாகவும், ஒளியூட்டும் வல்லாட்சியாளராகவும் திகழ்ந்தார். மௌரியர், குப்தர் காலங்களில் சிறந்து விளங்கிய இந்திய நிலையை அப்படியே கட்டிக்காத்த பெருமை இவரையே சாரும்.

**யுவான் சுவாங்கு:**

இவர் பழமையான ***சீனக்குடும்பத்தைச்*** சேர்ந்தவர். இவரது குடும்பம் கியூசிடி மாவட்டத்தில் வசித்து வந்தது. இவரது கொள்ளு தாத்தாவின் பெயர் சின் (இட்ண்ய்) ஆகும். இவரது தாத்தா காங் (Kang) தலை நகரில் இருந்த தேசியக் கல்லூரியில் பேராசிரியராக இருந்தார். இவரது தகப்பனார் ஹீய் (Hui) கன்பூசியசின் கொள்கைகளில் நாட்டம் கொண்டிருந்தார். யுவான்சுவாங்கு கி.பி. 600 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் இவரது பெற்றோர்களுக்கு நான்காவது குழந்தையாகப் பிறந்தார். இவர் இளமையிலேயே புத்தி கூர்மையுடனும், நல்ல நினைவாற்றலுடனும் விளங்கினார். இவர் விளையாட்டுக்களில் கவனம் செலுத்தவில்லை. தனித்து இருப்பதை மிக்க விரும்பினார். தந்தையைப் போல கன்பூசியசின்

கொள்கைகளில் நாட்டம் கொண்டிருந்தார். தனது இருபதாவது வயதில் பௌத்த துறவியானார். மிக விரைவில் இவரது புகழ் *சீனா* முழுவதும் பரவியது. இவர் புத்தர் பிறந்த புனித பூமியாகிய இந்தியாவிற்கு வர வேண்டும் என்ற ஆவல் மிகக் கொண்டிருந்தார். மேலும் இவர் பௌத்த சமயத்தின் புனித நூல்களை மூல மொழியிலேயே அறிந்து கொள்ள ஆர்வம் கொண்டிருந்தார். இவர் இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பினார். அப்போது *சீனா*வை தாங்-தாய்-சாங் (Tang-tai-tsang) ஆண்டு கொண்டிருந்தார். அவர் யுவான் சுவாங்கிற்கு மபெரும் வரவேற்பு கொடுத்தார். யுவான் சுவாங்கு புத்தரின் வாழ்க்கையோடு தொடர்பு கொண்ட நூற்றி ஐம்பது புனித பொருட்களையும், பௌத்த புனித நூல்களையும் *சீனா*விற்கு கொண்டு சென்றார். அரசவையில் உயர் பதவி யுவான் சுவாங்கிற்கு மறுத்து விட்டார். அவர் தனது இந்தியாவிலிருந்து கொணர்ந்த பௌத்தசமய புனித நூல்களை இந்திய மொழிகளிலிருந்து *சீன* மொழிக்கு மொழி பெயர்க்க விரும்பி அப்பணியில் ஈடுபட்டார்.

*சீனப்* பேரரசர் யுவான் சுவாங்கிற்கு மொழி பெயர்ப்பாளர்களையும், படிகள் எடுக்கும் எழுத்தாளர்களையும் கொடுத்து உதவினார். அப்பேரரசரின் வேண்டுகோளுக்கு இணங்க யுவான் சுவாங்கு தனது இந்தியா பயணக்குறிப்புகளை ஒரு நூலாக தொகுத்து வெளியிட்டார். இந்நூல் கி.பி. 645ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. யுவான் சுவாங்கு கி.பி 664-ஆம் ஆண்டு தனது வாழ்வின் குறிக்கோளை நிறைவேற்றிய மகிழ்ச்சியோடு இறந்தார். யுவான் சுவாங்கு நல்ல ஒழுக்கமும் அறிவும் திறனும் உடையவராக இருந்தார். அவரது நகைச்சுவையோடு பேசும் ஆற்றல் பெற்றிருந்தார். கடுமையாக உழைக்கும் பண்பை பெற்றிருந்தார். பௌத்த நூல்கள் அனைத்தையும் கற்று அவர் பௌத்த சமயப் பெரியாராக விளங்கினார். அவருக்கு 'சாக்ய முனி' என்ற பட்டம் அவர் இறந்த பின் கொடுக்கப்பட்டது. அவருடைய மாணவர்களுக்கு அவர் இறந்த சில நாட்கள் கழித்து வியக்கத்தகும் வகையில் இரவில் காட்சி அளித்தார் என கதையொன்று நிலவுகிறது.

யுவான் சுவாங்கு பௌத்த சமய நூல்களை படித்து அறிந்து கொள்ள இந்தியாவிற்கு வந்தார். அவருடைய நோக்கம் இந்தியா அரசியல், சமூக நிலையை பற்றி நூல் எழுதுதன்று. அவர் எழுதிய நூலில் நமக்கு ஹர்ஷர் கால சமுதாயத்தை பற்றி சில சுவையான தகவல்கள் கிடைக்கின்றன. அவற்றை பற்றி இவண் காண்போம். யுவான் சுவாங் தனது பயணக்குறிப்பில் இந்தியாவை இன்-டு (Yin-tu) எனக் குறிப்பிடுகிறார். அவர் இந்தியாவில் ஐந்து பிரிவுகள் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். அவையாவன வடக்கு இந்தியா, மேற்கு இந்தியா, கிழக்கு இந்தியா, மத்திய இந்தியா மற்றும் தென் இந்தியா, மேலும் அவர் ஏறக்குறைய 70 அரசுகள் இந்தியாவில் இருந்தன என்கிறார். கோடைக் காலத்தில் வெப்பம் கடுமையாக இருந்தது. வடக்கில் மலைப் பகுதியாக விளங்கியது. கிழக்குப் பகுதியில் செழிப்பான நிலங்கள் இருந்தன. அங்கு நெல் விளைந்தது. தென் பகுதிகள் காய்கறிகள், பழங்கள் பெருமளவில் கிடைத்தன. மேற்குப் பகுதி கரடுமுரடாக இருந்தது என்றும் யுவான் சுவாங்கு குறிப்பிடுகிறார்.

**நீட்டல் அளவுகள்:**

நீட்டலளவின் மிகப் பெரிய அளவு யோசனை எனப்பட்டது. ஒரே யோசனை என்பது மன்னரின் இராணுவம் ஒரு நாளில் நடந்த கடக்கும் தூரமாகும் யோசனை என்பது ஏறக்குறைய 16 கிலோ மீட்டர் தூரம் எனக் கொள்ளலாம் ஒரு யோசனை என்ற அளவு இடத்திற்கு இடம், காலத்துக்கு காலம் மாறுபட்டிருந்திருக்கிறது என்பதை நாம் யுவான் சுவாங்கின் குறிப்புக்களிலிருந்து அறிந்த கொள்ளுகிறோம்.

**கால அளவுகள்:**

ஹர்ஷரின் காலத்தில் இந்தியாவில் வழங்கி வந்த கால அளவுகள் பற்றி தெளிவான விளக்கங்களைத் தருகிறார் யுவான் சுவாங்கு. அவரது விளக்கங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

க்ஷணா (Kshana)- மிகக் குறைந்த கால அளவு

| | | |
|---|---|---|
| 120 க்ஷணங்கள் | - | 1 தட்க்ஷணா (Tat – Kshana) |
| 60 தட்க்ஷா | - | 1 லாவா (Lava) |
| 30 லாவா | - | 1 முகூர்த்தம் |
| 5 முகூர்த்தம் | - | 1 காலம் |
| 6 காலம் | - | 1 நாள் |

**பருவங்கள்:**

பௌத்த மதத்தினர் பருவ காலத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிந்தனர் என யுவான் சுவாங் சொல்கிறார்.

கோடை காலத்தை கிரிஷ்மருது (Grishma) எனவும் குளிர் காலத்தை ஹேமந்தருது (Hemanta) எனவும், மழை காலத்தை வர்ஷரது (Varsba) எனவும் அழைத்தனர். யுவான் சுவாங்கு குறிப்புக்களில் காணப்படும் வேறு பல செய்திகள் சிறு தலைப்புக்களில் கீழே தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

**நகரங்கள்:**

நகரின் நாற்புறங்களைச் சுற்றிலும் பாதுகாப்புச் சுவர்கள் எழுப்பப்பட்டிருந்தன. அவை உயரமாகவும் அகலமாகவும் விளங்கின. சாலைகள் குறுகலாகவும், பல வளைவுகள் உடையதாகவும் இருந்தன. சாலைகளின் இரு பக்கங்களிலும் கடைகள் அமைந்திருந்தன. இறைச்சி விற்பவர்கள், மீனவர்கள் நகர்த்துப்புறவுத் தொழிலாளர்கள், கொலைத் தண்டனை நிறைவேற்றுபவர்கள் ஆகியோர் நகரத்திற்கு வெளியே வாழும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர்.

**வீடுகள்:**

சுட்ட செங்கற்களில் வீடு கட்டப்பட்டது. வீடுகளில் பெரிய அறைகள் இருந்தன. மரத்தால் தட்டையான கூறைகள் அமைத்து அதன் மீது சுட்ட அல்லது சுடாத ஓடுகளை பாவி அவர்கள் வீடுகளைக் கட்டிக் கொண்டனர். தரையை சாணத்தால் மெழுகினர். மலர்களால் வீட்டின் வாசலை அலங்கரித்தனர். பௌத்த மடங்களின் நாற்புறங்களிலும் உயரமான கோபுரங்கள் எழுப்பப்பட்டிருந்தன. கயிறு பின்னப்பட்ட நாற்காலிகளை செல்வந்தர்களும் உயர்குடி மக்களும் பயன்படுத்தினர்.

**உடை:**

வெள்ளை நிற உடைகளை மக்கள் விரும்பி அணிந்தனர். வண்ண உடைகளை அணியும் வழக்கம் பரவலாக இல்லை. ஆண்கள் இடையைச் சுற்றி ஒரு துணியை கட்டிக் கொண்டனர். பெண்கள் நீண்ட அங்கி போன்ற உடைகளை தோள்களை மறைக்கும் வகையில் அணிந்தனர். ஆண்கள் மீசை வளர்த்தனர் கழுத்து அணிகளை மக்கள் விரும்பி அணிந்தனர். சணலிலிருந்து முரட்டு ரக ஆடைகளைத் தயாரித்தனர். பட்டும், பருத்தியும் கலந்து ஆடைகள் நெய்யப்பட்டன. கம்பளியிலும் ஆடைகள் நெய்யப்பட்டன. இந்த மூன்று வகை ஆடைகளையும் பௌத்த துறவிகள் அணிந்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர். இந்து சமயத்துறைவினர் மயிலின் தோகையிலான உடைகளை அணிந்து கொண்டனர். ஆடை எதுவுமின்றி நிர்வாணமாகவும் சில துறவிகள் காட்சியளித்தனர். அவர்கள் மண்டை ஓடுகளால் ஆன மாலைகளை அணிந்திருந்தனர். தலைமுடியைச் சுருட்டி தலையின் உச்சியில் கட்டிக் கொண்டிருந்தனர்.

**அணிகலன்கள்:**

மன்னர் பிரபுக்கள் ஆகியோர் விலையுயர்த்த கற்கள் பதிக்கப்ட்ட கிரீடங்களையும்; மாலைகளையும் அணிந்தனர் மேலும் அவர்கள், காப்பு, மோதிரம் ஆகியவற்றையும் அணிந்தார்கள் காலணிகளை ஒரு சிலர் மட்டுமே பயன்படுத்தினர். பற்களை சிவப்பு வண்ணத்தால் கறை படுத்திக் கொண்டனர் (வெற்றிலை போடுவதால் ஏற்படும் கறையைக் குறிக்கிறார் போலும்) காதுகளில் துளையிட்டு வளையங்கள் அணிந்து கொண்டனர்.

**பழக்க வழக்கங்கள்:**

உண்பதற்கு முன் கையைத் கழுவிக் கொண்டார்கள். உணவு உண்ட பின் பற்குச்சியால் வாயைச் சுத்தம் செய்தனர். உணவுப் பண்டங்களை மண்ணால் செய்து கொண்டனர். பயன் படுத்தப்பட்டற்குப் பின் அப்பாத்திரங்கள் தூக்கி எறியப்பட்டன. தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு ஆகியவற்றால் செய்யப்பட்ட பாண்டங்கள் மட்டும் துலக்கப்பட்டு மறுபடியும் பயன்படுத்தப்பட்டன. சந்தனம், குங்குமப்பூ போன்றவற்றைத் நறுமணத்திற்காக உடலில் பூசிக் கொண்டனர். மன்னர் குளிக்கச் செல்லும் போது பணியாட்கள் இசைக் கருவிகளை மீட்டியும், மள இணை முழக்கியும், பாட்டுகள் பாடியும் கடவுளை வழிபட்டனர்.

**கல்வி முறை:**

ஏழு வயது நிரம்பியதும் குழந்தைகள் கல்வி கற்ப அனுப்பப்பட்டனர். அவர்களுக்கு சொல் இலக்கணம், கைத்தொழில்கள், சோதிடம், மருத்துவம், நுண்கலைகள் ஆகியவை போதிக்கப்பட்டன. மாணவர்கள் தங்கள் முப்பதாவது வயதில் கல்வியை முடித்து பணிகளில் ஈடுபட்டனர்.

**புத்த சமயம்:**

பௌத்தசமயத்தில் இரண்டு வழிகள் இருந்தன. அவற்றிற்கு பெரிய வழி (Great Path) சிறிய வழி (Little Path) எனப்பெயர்கள் வழங்கின. மகாயானம் (Mhayana) பெரிய வழி எனவும் ஹீனயானம் (Hinayan) சிறிய வழி எனவும் அழைக்கப்பட்டதாக கொள்ளலாம்.

**சாதிகள்:**

இந்திய மக்களிடையே நான்கு நாதிகள் இருந்தன. முதல் சாதி அந்தணர்கள் எனவும் இரண்டாவது சத்திரியர்கள் எனவும் மூன்றாவது வைசியர்கள் எனவும் நான்காவது சூத்தரர்கள் எனவும் இருந்தன. அந்தணர்கள் தூய்மையான வாழ்க்கை நடத்தினர். சத்திரியர்கள் இரக்கமும், வீரமும் மிக்கவர்களாக இருந்தனர். மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அவர்களிடமே இருந்தனர். வைசியர்கள் வாணிபம் செய்து இலாபம் சம்பாதித்தனர். சூத்திரர்கள் நிலத்தில் விதைப்பது, அறுவடை செய்வது ஆகிய கூலி வேலைகளைச் செய்தனர். ஓர் இனத்தைச் சார்ந்த மனிதர் தன் இனத்தைச் சார்ந்த பெண்ணையே மணம் முடிப்பது வழக்கமாக இருந்தது. எக்காரணம் கொண்டும் வேறு பிரிவினருடன் திருமண உறவு கொள்ளுவதில்லை.

**படை:**

படை வீரர்கள் பரம்பரையாக வந்தனர். அவர்கள் அமைதிக் காலத்தில் அரண்மனையைக் காத்தனர். காலாட்படை, குதிரைப்படை, தேர்ப்படை, யானைப்படை ஆகியவை படையின் முக்கிய பிரிவுகள் ஆகும். யானைகளுக்கு இரும்புக் கவசம் பாதுகாப்பிற்காகப் போடப் பட்டிருந்தது. படைத் தளபதி யானை மீது அமர்ந்து போர் புரிந்தார். படையின் உயர் அலுவலர்கள் போர்க்களத்திற்கு நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் சென்றனர். ஈட்டி, வில், அம்பு, வாள் ஆகிய போர்க் கருவிகளை அவர்கள் பயன் படுத்தினர்.

**தண்டனைகள்:**

அரசிற்கு எதிராக சதி திட்டங்கள் தீட்டுகிற குற்றவாளிகள் வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைக்கப்பட்னர். தாய் தந்தையருக்கு உரிய மரியாதை கொடுக்கத் தவறுபவர்களின் காது, மூக்கு, கைகள் ஆகியவை துண்டிக்கப்பட்டு தண்டனை கொடுக்கப்பட்டது. நாடு கடத்துதல் போன்ற தண்டனையும் கொடுக்கப்பட்டது. சிறிய குற்றங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

மக்கள் மன்னரின் கால்களை முத்தமிட்டு வணங்குவார்கள். உயர்குடி பெருமக்கள் வணக்கத்தை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக தலைமை அசைப்பர். வணங்குபவர்களை அருகில் அழைத்து அவர்களை அன்புடன் விசாரித்து முதுகில் தட்டிக் கொடுப்பர்.

கீழ்க்காணும் வணக்க முறைகளையும் யுவான் சுவாங்கு குறிப்பிடுகிறார்.

1. மார்பு மீது கைகளைக் கட்டிக் கொண்டு வணங்குதல்
2. முழங்காலிட்டு வணங்குதல்

3. முழங்கால்களையும், முழங்கைகளையும் தரையில் வைத்துக் குனிந்து நெற்றி நிலத்தில் பட வணங்குதல்,

4. நிலத்தில் விழுந்து வணங்குதல்.

**இறப்பு:**

இறந்தவரின் உறவினர்கள் தலையை விரித்துப் போட்டுக் கொண்டு மார்பு மீத அடித்துக் கொண்டு அழுவர். இறப்பு உடலை தீயிட்டு எரிப்பர் அல்லது ஓடையில் தூக்கி எறிவர் அல்லது காட்டில் புதைப்பர். இறந்தவருக்கு பட்டங்கள் வழங்கி கௌரவவிப்பதில்லை. இறுதிச் சடங்கு முடிகின்ற வரை இறப்பு வீட்டில் உணவு கொள்ள மாட்டர்கள். இறுதிச்சடங்கு முடிந்ததும் இறப்பு வீட்டில் உணவு சமைத்து உண்பர். இறப்பு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர்கள் தீட்டுப் பட்டவர்களாகக் கருதப்பட்டனர். அவர்கள் நகரத்தின் வெளியில் இருந்த குளத்தில் குளித்து விட்டு வீடு திரும்பினர்.

**உற்பத்திப் பொருட்களும், உணவு முறையும்:**

மாம்பழம், புளியம்பழம், வாழைப்பழம், தேங்காய், பலாப்பழம், கோவைப்பழம், முந்திரி, ஆரஞ்சு போன்றவை இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டன. அரிசி, கோதுமை, கடுகு, இஞ்சி, பூசணி, சுரைக்காய் ஆகியவை இந்தியாவில் கூடுதலாக விளைந்தன. வெள்ளைப் பூண்டும், வெங்காயமும் உண்பவர்கள் சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தனர். பால், நெய், சர்க்கரை, கடுகு எண்ணெய் ஆகியவற்றை அன்றாட உணவில் சேர்த்துக் கொண்டனர். மீன் இறைச்சி, மான் இறைச்சி ஆகியவற்றை விரும்பி உண்டனர். கழுதை, யானை, குதிரை, பன்றி, நாய், ஓநாய், சிங்கம், குரங்கு ஆகியவற்றின் இறைச்சி புறக்கணிக்கப்பட்டது. திராட்சையிலிருந்து ஒரு வகை மது தயாரித்து உண்டனர். உணவை கையாலேயே உண்டனர். நோயாளிகள் மட்டுமே கரண்டியினால் உணவை உண்டனர்.

**இந்தியரின் பண்புகள்:**

இந்தியர்கள் ஒழுக்கம் மிக்கவர்கள் என்றும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை-யுடையவர்கள் என்றும் யுவான் சுவாங்கு கூறுகிறார். அவர்கள் ஏமாற்று வேலைகளில் ஈடுபடுவதில்லை. கொடுத்த வாழ்க்கையை காப்பாற்றுவர் என புகழ்மாலை சூட்டுகிறார் யுவான் சுவாங்கு.